ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமானுஜாய நம:


# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

| முழக்கம்-16 | பாஞ்சஜன்யம்<br>ஜூலை 2013-170 | ஒலி 7 |
| --- | --- | --- |


## 1. Apathy என்ற ஆங்கிலச் சொல்லிற்கான பொருளும் ஸ்ரீவைஷ்ணவர்களும்

திருக்கோயில்கள் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் நலிவுற்று விளங்குகின்றன. அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அவற்றை வணிக வளாகம்போல், நிர்வாகம் செய்து வருகின்றனர். பண வசூல் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். மாநில அரசோ இந்துசமய அறநிலையத்துறையின் வருமானத்திலிருந்து தனது நிதிப்பற்றாக்குறையை அவ்வப்போது ஈடுசெய்துவருகிறது. ஒவ்வொரு திருக்கோயிலிலும் மாதத்திற்கு மாதம் உண்டியல் மூலம் வருமானம் பெருகி வருவதை பெருமையுடன் அறிவித்து வருகின்றனர் அந்தத்துறை அதிகாரிகள். திருச்செந்தூர் முருகன் கோயில், பழனி தண்டாயுதபாணி கோயில், சென்னை கபாலீச்வரர் கோயில், பார்த்தசாரதி கோயில், ஸ்ரீரங்கம் அரங்கநாதஸ்வாமி கோயில், சமயபுரம் மாரியம்மன் கோயில் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் உண்டியல் பணம் பல லட்சங்களாகும். ஆனால் அந்தப் பணத்தைக் கொண்டு ஆங்கு கோயில் கொண்டிருக்கும்

இறைவனுக்கு உரிய ஆகம ரீதியான வழிபாடுகளை மேற் கொள்வதற்கோ அல்லது வருகைதரும் பக்தர்களுக்கு உரிய வசதிகளை செய்து தருவதற்கோ உபயோகம் கொள்வதில்லை. நிர்வாகச் சீர்கேடுகள் கணக்கில் அடங்கா. மேற்குறிப்பிடப்பட்ட திருக்கோயில்களின் ஆண்டு தணிக்கை அறிக்கைகளை ஒருவர் படிக்கக் கூடுமானால் இந்த உண்மை புலப்படும். உண்டியலில் பணம் கூடக் கூட அது நாட்டில் பாவச்செயல்களில் ஈடுபடுப வர்கள் அதிக அளவில் பெருகியுள்ளனர் என்பதைத் தெரிவிக்கும் ஓர் அபாய அறிவிப்பாகும். இந்த அபாய அறிவிப்பை அறிந்து கொள்ளாமல் அதிகாரிகள் பெருமிதம் கொள்கின்றனர். திருவரங்கத்தின் இருபுறமும் காவிரிநதி ஓடுகின்றது. ஆனால் திருவரங்கதில் கிணறுகள் வற்றிவிட்டன. பெரிய கோயில் திருமடைப்பள்ளியில் ப்ரஸாதங்கள் தயாரிப்பதற்கு நீர் இல்லை. அங்கே இருந்த கிணறு வற்றி விட்டது.

திருமடைப் பள்ளியில் பணிபுரிவோர் (இவர்களை கைங்கர்யபரர் என்று கொள்ளமுடியாது. இவர்களுக்கு ஓர் ஆகார நியமம் இல்லை. அநுஷ்டானம் இல்லை. ஆசாரத்தின் அடிப்படைகளைக்கூட கைக் கொள்வதில்லை. கிருஹஸ்தர்கள் தட்டாடையுடன் எம்பெருமானுக்குரிய ப்ரஸாதங்களை தயாரித்து வருகிறார்கள். அந்தத் தட்டாடையுடனும், சிகையில்லா கோலத்துடனும், மீசை முதலிய அங்க அடையாளங்களுடன் ப்ரஸாதங்களை பெரிய பெருமாள் ஸன்னிதிக்கு எடுத்துச் செல்கின்றனர். இவர்கள் நெற்றியில் திருமண்காப்பு மிக அரிதாகக் காணப்படும்.) அனைத்து பூர்வாசார்யர்களும் மண்டிக்கிடந்த ஊர் திருவரங்கம் பெரிய கோயில் ஆகும். பண்டைய நூல்களில் பெரிய பெருமாளுக்கு எவ்வாறு அமுதுபடி ஸமர்ப்பிக்கப்பட்டது என்பதைப் படிக்கும்போது, ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் தற்போதைய நிலை கண்டு உள்ளத்தில் துன்பச் சுமையை ஏற்றிக் கொள்கிறான். கோயில் கைங்கர்யபரர்களிடம் ஆகார நியமமும் காணப்படுவதில்லை. ஊரறிய அவர்கள் திருக்கோயில் முன்பு அமைந்துள்ள கடைகளில் பானங்கள் அருந்துவதையும் மற்றும் உணவுப்பண்டங்களை உட்கொள்வதையும் கண்ணுறும் வெளியூர் களிலிருந்து வருகை தரும் ஆசாரத்தைக் கடைப் பிடிக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் மனம் நொந்து தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்கிறார்கள். இது குறித்து கோயில் நிர்வாக அதிகாரிக்குப் பல

கடிதங்கள் எழுதப்பட்ட போதிலும் நிலைமை நாளுக்குநாள் மீளமுடியாத தாழ்ச்சியினை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. காவிரியில் நீர் வராததற்கும், திருவரங்கத்தில் கிணறுகள் வற்றிப் போவதற்கும், பருவமழை பொய்ப்பதற்கும், வெள்ளத்தால் பல்லா யிரக்கணக்கான மக்கள் அழிவதற்கும், அகால மரணங்களுக்கும், பெருகிவரும் கொலை, கொள்ளைகளுக்கும், அடிப்படைக் காரணங்கள், அரங்கனுக்கு உரிய முறையில் சாத்திரமுறை வழுவாது அமுதுபடிகள் ஸமர்ப்பிக்கப்படாததும், உரியமுறையில் ஆராதனங்கள் மேற்கொள்ளப்படாததும் ஆகும். பூலோக வைகுண்டத்தில் நிலவும் அவலத்தால் நாடெங்கும் தண்ணீர் பஞ்சமும், உணவுப் பஞ்சமும் தலைவிரித்தாடுகிறது. ஆங்கிலத்தில் Set the man right, the world will be allright என்ற மரபுத்தொடர் ஒன்று உண்டு. அதைத் தற்போது மாற்றம் செய்து Set Srirangam right the world will be alright என்று கொள்ள வேண்டும்.

மின்விநியோகம், செய்வதற்காக நிறுவப்பட்ட டிரான்ஸ்பார் மரை ஒக்கும் திருக்கோயில்கள். அதைப்பழுது பார்ப்பவன் அதற்குரிய அறிவுத்திறன் படைத்தவனாய் இருக்க வேண்டும். மேலும் தரமுள்ள டிரான்ஸ்பார்மருக்கான எண்ணெய்யையும், உறுதியான உதிரி பாகங்களையும் உபயோகப்படுத்த வேண்டும். ஆனால் டிரான்ஸ்பார்மருக்கான எண்ணெய்க்குப் பதிலாக விளக்கெண்ணெயை விட்டு, மின்சாரத்தைப் பற்றிய அறிவுத்திறன் இல்லாதவன் நான் பழுதை நீக்கிவிட்டேன் என்று கூறிவந்தால் சில நாட்களில் டிரான்ஸ்பார்மர் வெடித்து மின்விநியோகமே நின்று விடும். இந்தப் பழுதடைந்த டிரான்ஸ்பார்மர் நிலையில்தான் உள்ளது திருவரங்கம் பெரியகோயில்.

தவற்றை சுட்டிக்காட்டி உரியமுறையில் கைங்கர்யபரர் களை நடத்திச்செல்வதற்குத்தான் மேலப்படியில் மரியாதை பெற்று வருகின்றனர் **ஸ்தலத்தார்கள்.** ஆனால் அவர்களோ தங்களுக்குரிய மரியாதைகளுக்கும், கிடைக்க வேண்டிய ப்ரஸாதத்திற்கும்தான் குரல் கொடுத்து வருகிறார்களேயொழிய நம்பெருமாளுக்கு நடைபெறும் கைங்கர்யங்களில் குறைவு ஏற்படுகின்றதே என்பதைப்பற்றிச் சிந்திப்பதில்லை. ஆயிரக்கணக்கான உள்ளூர் பக்தர்கள் திருக்கோயிலுக்கு நேரந்தவறாது வந்துசெல்கின்றனர்.

நம்பெருமாள் புறப்பாடு அல்லது கண்டருளும் உத்ஸவங்களை ஸேவித்துச் செல்கின்றனர். அண்மையில் நடைபெற்ற நம்பெருமாள் வஸந்தோத்ஸவத்தின்போது வசந்த மண்டபத்தைச் சுற்றி அமைந்துள்ள அகழியில் ஏதோ பெயர் அளவுக்கு நீர் நிரப்பப்பட்டு இருந்தது. பல நாட்கள் வறண்டுகிடந்த இந்த அகழியில் நீர் நிரப்பப்பட்டவுடன் படிந்திருந்த பாசியெல்லாம் ஒன்றுதிரண்டு அகழியின் மேற்குப் பக்கம் நீரின்மேல் படர்ந்து காணப்பட்டது. அகழியின் மேற்புரம் முழுவதும் பாசியினால் மூடப்பட்டிருந்தது. அதில் காலி மதுபாட்டில்களும் நீர் அருந்தும் பாட்டில்களும் நூற்றுக்கணக்கில் காணப்பட்டன. துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. வஸந்தோத்ஸவம் நடைபெற்ற பத்துநாட்களிலும் நம்பெருமாள் இந்தக்காட்சியைக் கண்டுகொண்டே நடையழகு காண்பித்தார். அரையர் தாளமென்ன, ஸ்ரீபாதம்தாங்கிகளுடைய கம்பீர நடையென்ன. ஓடி ஓடிச் சென்று ஸேவிக்கும் பக்தர்கள் என்ன. இவற்றிற்கிடையே துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்த சுகாதாரமற்ற அகழியின் மேற்குப்பகுதி பரிதாபமாகக் காட்சியளித்தது. ஆனால் இந்த நிலை கண்டு யாரும் பரிதாபப்படவில்லை. உள்ளத்தில் எந்தத் துன்பச் சுமையையும் ஏற்றிக் கொள்ளவில்லை. இது எல்லாம் **'எம்பெருமான் ஸங்கல்பம்'**. நாம் ஏன் இதைக் கண்டுகொள்ள வேண்டும். இந்த அவலநிலைக் குறித்து அதிகாரிகளிடம் முறையிடுவானேன் என்ற எண்ணமே வருகை தந்த பக்தர்களிடம் மேலோங்கியிருந்தது. ஆங்கிலத்தில் Ap athy என்ற ஒரு சொல் உண்டு. அந்தச் சொல்லிற்கு lack of feeling உணர்ச்சியின்மை show of indifference அக்கறையின்மை, intellectual dullness அறிவுத்தளர்ச்சி என்பது பல்வேறு பொருளாகும்.

ஸ்ரீவைஷ்ணவர்களுடைய இன்றைய நிலையை இந்தச் சொல் நன்கு விளக்குகின்றது. பெருமாளை ஸேவித்துவிட்டு, தீர்த்தம், சடாரி வாங்கிக்கொண்டு செல்வதுதான் நம்முடைய கடமை என்று எண்ணங்கொண்டுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பொங்கும் பரிவு கிடையாது. மங்களாசாஸனம் என்ற சொல்லிற்கு உண்மையான பொருள் எது என்பதும் தெரியாது. இதற்கு யாரும் விதிவிலக்கல்ல. நமக்கேன் வம்பு. நாம் இதைப்பற்றிப் பேசுவானேன் என்ற எண்ணம் அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களிடம் மேலோங்கியுள்ளது. ஆனால் பிள்ளைலோகாசார்யரின் உயிர்த்

தியாகத்தைப் பற்றியும், கூரத்தாழ்வான் கண்ணிழந்ததைப் பற்றியும், பிள்ளைத் திருநறையூர் தம் குடும்பத்தினரோடு செய்த உயிர்த் தியாகத்தைப் பற்றியும் பேசிப்பேசியே பொழுதுபோக்குவோம். இன்றைய நிலையில் ஒரு பிள்ளைலோகாசார்யரையோ, ஒரு கூரத் தாழ்வானையோ, ஒரு பிள்ளைதிருநறையூர் அரையரையோ ஏன் காணமுடியவில்லை. ஒரு பானைச்சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். எமது அலுவலகத்திற்கு ஓர் ஸ்ரீவைஷ்ணவ அடியார் வருகை தந்திருந்தார். அவர் என்னிடம் 'ஸ்வாமி கோயிலில் பல அக்ரமங்கள் நடக்கின்றன. தேவரீர் இதையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டுமென்று' என்னிடம் கூறினார். அதற்கு நான் என்ன அக்ரமங்கள் நடைபெறுகின்றன என்று கேட்டேன். அதற்கு அவர் 'புறப்பாடெல்லாம் குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறுவதில்லை. ஊழல் பெருகி விட்டது' என்றெல்லாம் அடுக்கிக்கொண்டே போனார். அப்போது நான் 'இந்த விஷயங்களை தேவரீரே ஒரு கடிதத்தில் நிர்வாக அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு செல்லலாமே என்று பதில் கூறினேன்'. அதற்கு அவர் ஒரு விசித்திரமான பதிலைச் சொன்னார். அதாவது 'நான் என் முகவரியுடன் கடிதம் எழுதினால் நிர்வாக அதிகாரி என்மீது கோபம் கொண்டு காவல்துறையினரின் ஒத்துழைப்போடு என் மீது வழக்கு பதிவுசெய்து, என் வீட்டிற்கு வந்து காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றால் என்ன செய்வது'. சிறைச்சாலையில் அடைத்துவிட்டால் என்ன செய்வது. அதனால் தான் தேவரீரிடம் சொல்கிறேன் என்று கூறினார்.

இதிலிருந்து பல விஷயங்கள் தெளிவாகின்றன. 1. திருவாய்மொழி 1.5.5 நம்பிள்ளை ஈட்டில் காணப்படும் ''போம்பழியெல்லாம் அமணன்தலையோடே'' என்ற ஐதிஹ்யம் நினைவிற்கு வருகிறது. 2. நம்பெருமாளுக்குரிய பெருமைகளுக்கு சிறுமை ஏற்படுத்தப்படுகிறதே என்ற ஆதங்கம் அவர் உள்ளத்தில் இல்லை. 3. தனக்கு ஒரு ஆபத்து ஏற்பட்டு விடுமே என்ற அச்சம்தான் அவரிடம் காணப்பட்டது. 4. பாஞ்சஜன்யம் ஆசிரியர் வீட்டிற்கு காவல்துறையினர் வந்தால் அதுபற்றி அவருக்கு கவலையில்லை. இதுபோன்று பலவற்றை அடுக்கிக்கொண்டே போகலாம். மொத்தத்தில் ப்ரபல வித்வான்கள், ஸ்தலத்தார், ஸ்ரீவைஷ்ணவர்கள், ஸ்ரீரங்கத்து ஆண்டாள் கோஷ்டியினர்

(இவர்கள் நம்பெருமாளை துரத்தித் துரத்திச்சென்று எல்லா இடங்களிலும் ஸேவிக்கும் ஆண்டாள் கோஷ்டியினர் (சுமார் 30 நபர்கள்) அடாது மழைபெய்தாலும், இடிஇடித்தாலும் தாமதமாய் நம்பெருமாள் புறப்பட்டாலும் இவர்கள் தினந்தோறும் நம்பெருமாளுடன் கூடியே இருப்பார்கள்.) ஆகியோர் இதுபோன்ற அத்துமீறல்களைக் கண்டு கொள்வதில்லை.

நின்றுபோன ஸ்ரீபாஷ்யம் ஸேவிப்பதை மீண்டும் அமுல் படுத்துவது, திருப்பணிமாலையாகிய படிப்பை மீண்டும் ஸேவிக் கப்பண்ணுவது, தினந்தோறும் ஆராதனத்தின் போது இயல் ஸேவிப்பது, விஷ்வக்ஸேனருக்குரிய சடாரி மரியாதையை மீண்டும் ஏற்படுத்துவது. தவராசன் படித்துறையை மீட்பது. ஸ்ரீமணவாளமாமுனிகள் திருவரசை மீட்பது போன்ற செயல்பாடு களில் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் எந்த அக்கரையும் இல்லை. இவர்கள் அனைவரும் பழம்பெருமையைப் பேசியே பொழுதுபோக்குவர். காரியம் என்று வரும்போது ஒடி ஒளிவர். இராமானுசருடைய ஆயிரமாவது ஆண்டுக்கு முன்பாவது ராமானுஜார்ய திவ்ய ஆஜ்ஞையை நிலை நாட்டுவதற்குப் பாடுபட வேண்டும். தினந்தோறும் ஸ்ரீவைஷ்ணவர் கள் சாற்றுமுறையின்போது கூறும் சொற்றொடர்கள் கடலோசை யாக ஆகக்கூடாது. '**அரங்கநகர் வாழ**' என்றால் என்ன பொருள்? என்று சிந்திக்க வேண்டும்.

அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் திருவரங்கத்திற்கு வருகை தந்தபோது நடந்த வைபவங்களைச் சுட்டிக்காட்டி, நம்பெருமாளுக்கு இழைக்கப்பட்ட அநீதிபற்றி 1.6.2013 அன்று ஆசிரியர் எழுதிய கடிதம் கீழே தரப்பட்டுள்ளது.

**''மதிப்பிற்குரிய அரங்கநாதர் திருக்கோயில் செயல் அலுவலர் அவர்களுக்கு,**

தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30.5.2013 அன்று திருக்கோயிலுக்கு வருகை தந்தபோது மிக நேர்த்தியான முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது குறித்து பெருமை கொள்கிறேன். ரங்கா ரங்கா கோபுர வாயிலிலும், ஆர்யபட்டாள் கோபுர வாயிலிலும் எட்டடி உயர வாழை மரங்கள் பெருப்பெருத்த

வாழைத்தார்களுடன் காட்சியளித்தன. அந்தக் காட்சி மனதிற்கு மகிழ்ச்சியைத் தந்தது.

ஆனால் சித்திரை மாதத்தில் நடைபெற்ற விருப்பன் திருநாளின்போது முதல்நாள் மற்றும் இரண்டாம் நாள் உத்ஸவங்களில் நம்பெருமாள் எவ்வித மங்கலப்பொருள்களும் ரங்கா ரங்கா கோபுரத்தில் கட்டப்படாமல் (குறிப்பாக வாழைமரம், மாவிலைத்தோரணம்) அதைத்தாண்டி திருவீதி வலம்வந்தார். இரண்டாம் நாள் இரவு உத்ஸவத்தின்போது தீப்பொறி பறந்து நம்பெருமாளுடைய திருமேனிக்கு ஊறுவிளைவிக்கப்பட்டது. மூன்றாம் நாள் காலை இரண்டு வாழைமரங்கள் தமிழ்நாட்டிலேயே மிகமலிவான விலைக்கு வாங்கப்பட்டதாய் காட்சியளித்தன, சூம்பிப்போன வாழைத்தார் உள்ளதோ இல்லையோ என்று ஐயங்கொள்ளும்படி இரண்டு வாழைமரங்கள் ரங்கா ரங்கா கோபுரத்தின் நுழை வாயிலில் காணப்பட்டன.

மேலும் அண்மையில் நடைபெற்ற வஸந்தோத்ஸவத் தின்போது குளத்தின் மேற்குகரைப் பக்கம் தேங்கியிருந்த நீர் முழுவதும் பாசியினாலும், பிளாஸ்டிக் பாட்டில்களாலும் ஆங்காங்கே சில காலி மதுபாட்டில்களாலும் நிறைந்து காணப் பட்டன. இந்தக் காட்சியினை பத்துநாள் உத்ஸவத்திலும் நம்பெருமாள் கண்டார். ஒருவேளை மாண்புமிகு முதலமைச்சர் வஸந்தோத்ஸவத்தின்போது வருகை தந்திருந்தால் இவை அகற்றப்பட்டிருக்குமோ என்னவோ? அந்தப்பேறு அரங்கனுக்கு இல்லை. அவன் மனக்குமுறல் உங்களைப்போன்ற அதிகாரிக ளுக்குத் தெரியாது.

இந்த நிகழ்ச்சிகளிலிருந்து ஒன்று தெளிவாகிறது. மாண்புமிகு முதலமைச்சரிடம் உள்ள பயம் அண்டத்தையே ஆளும் அரங்கனிடம் உங்களுக்கு இல்லை. அரசன் அன்று கொல்வான் என்ற அச்சம் இருக்கின்றது ஆனால் தெய்வம் நின்று கொல்லும் என்ற அந்தப் பழமொழியின் பின்பகுதியின் பொருள் உங்களுக்கு விளங்கவில்லையே ஏன்?. கோயில் தூய்மை என்பது வெறும் அலகிடுவதால் (பெருக்குவதால்) மட்டும் பெறப்படுவதில்லை. அரங்கன் உலாக்கண்டருளும் அனைத்து இடங்களும் தூய்மை யுடன் இருக்க வேண்டும். அரங்கனுக்குரிய மரியாதைகள் பேணிப்

பாதுகாக்கப்பட வேண்டும். இனிவரும் காலங்களில் இதைச் செய்வீர்களா?

மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு இந்தக் கடிதத்தின் நகல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.' ✸✸✸

## 2. **தமிழ்க் கூத்து நடந்த கோயில் தள்ளாடுகிறது!**

இந்திய நாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் இந்துக்களுக்கு அரசாங்கம் இழைத்துவரும் கொடுமைகள் ஒன்றல்ல இரண்டல்ல. இங்கு கிறிஸ்தவர்களுக்கும், முகமதியர்களுக்கும் அளிக்கப்படும் சலுகைகள் கணக்கில் அடங்கா. ஆயினும் வாக்கு வங்கியை கருத்தில் கொண்டு ஆட்சியில் அமரும் எந்தக் கட்சியும் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றியும் மதவுணர்வு களை மதித்தும் ஆட்சி நடத்தி வருகின்றனர். ஊடகங்களோ ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தில் ஆடிக்காற்றில் கண்ணாடி பொருத்தப்பட்ட கதவு உடைந்தால் அது ஹிந்து தீவிரவாதிகளான, V.H.P., R.S.S. போன்ற ஹிந்து அமைப்புகளின் வெறிச்செயல் என்றும் நாள்தோறும் ஒளிபரப்பிக் கொண்டே இருக்கும். நாளேடுகளோ கொட்டை எழுத்தில் செய்தி வெளியிட்டு மகிழும். ஹிந்துக் கோயில்கள் இடிக்கப்படும்போது அதை ஒரு செய்தியாகக் கூட ஊடகங்கள் வெளியிடுவதில்லை. மக்களின் ஆடம்பர வாழ்க்கைக்காக மரங்களை அழித்தோம். காடுகளைச் சூறையாடினோம். அதன் விளைவு அந்தந்தக் காலங்களில் மழை பொழிவது இல்லை. இப்போது உணவுப்பண்டங்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து வருகிறோம். அன்னிய முதலீட்டை ஆதரிக்கிறோம். ஆர்க்டிக் கண்டத்திலிருந்து பெரிய பெரிய நீர்ப்பாறைகளை கடல்வழியே இழுத்து வந்து பண முதலைகள் அவற்றை பாட்டிலில் அடைத்து நாட்டைச் சூறையாடும் காலம் வெகுதூரத்தில் இல்லை. ஹிந்து கோயில்கள் நம் மன்னர்களால் பேணி பாதுகாக்கப்பட்டன. உலக நன்மைக்கருதி அந்தந்தத் திருக்கோயில்களில் ஆராதனம் நடைபெற நிவந்தங்களை அளித்தனர். ஆனால் அந்த நிலங்கள் இப்போது கோயில்வசம் இல்லை. ஒருவேளை விளக்கெரிப்பதற்கும், ப்ரஸாதத்திற்கும் அல்லல்படும் கோயில்களே அதிகம்.

சாலை வசதிகளைப் பெருக்குகிறோம் என்று கூறிக் கொண்டு ராஜேந்திர சோழன் காலத்தில் கட்டப்பட்ட கும்பகோணம் அருகிலுள்ள மானம்பாடி என்ற ஊரில் அமைந்துள்ள நாகநாதஸ்வாமி கோயிலை இடிக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். ஆனால் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு விஜயவாடா ஹைதராபாத் நெடுஞ்சாலை யில் ஒரு சாலையில் அமைந்திருந்த முஸ்லீம் சமாதியை அகற்ற முற்பட்டபோது ஆயிரக்கணக்கான முகம்மதியர்கள் ஒன்றுகூடி அதை எதிர்த்தனர். அவர்களுடைய எதிர்ப்புக்கு பயந்து நெடுஞ் சாலைத்துறை வேறுவழியாக விரிவாக்கத்தை மேற்கொண்டனர். தற்போது மக்கள் எழுச்சி ஒன்றே இத்தகைய அடாதசெயல்களை தடுத்து நிறுத்தும். சாலைமறியல் தற்போது வழக்கமாகி விட்டது. சாலையை காப்பாற்றுவதற்கு சாலைமறியல் செய்ய வேண்டும். மேலும் இந்தக்கோயில் முதலாம் ராஜேந்திரனால் கட்டப்பட்ட கோயிலாகும். அவன் அரியணை ஏறிய ஆயிரமாவது ஆண்டு கொண்டாட்டங் கள் 2014இல் நடைபெறவுள்ளன. அந்த ராஜேந்திரச் சோழனுக்காக ஆவது இந்தக் கோயிலை நாம் காப்பாற்ற வேண்டும்.

மும்பை நகரிலிருந்து வெளிவரும் Hindu Voice 2013 ஜூன் மாதஇதழில் வெளிவந்துள்ள செய்தியைக் கீழே தந்துள்ளோம்.

**Stop Demolishing the 1000 year old temple**

May 26, 2013: It was built a 1,000 years ago and is a protected heritage monument. But soon it will be demolished. This 1,000-year-old temple near Kumbakonam is going to be demolished to make way for a 4-lane highway. The highway is planned under the Thanjavur-Vikkiravandi 4-way project of the National Highways Authority of India.

Built between 1012 and 1044 AD by Rajendra Chola, the temple in Manampadi village contains at least ten price-less inscriptions from that period. The numerous sculptures found in the premises are rare and unique. The NHAI has now decided to demolish this temple for widening the highway and has already earmarked the areas. 2014 would be the 1,000th

year celebration of the coronation of Rajendra Chola, son of Raja Raja Chola. The demolition of a Temple constructed by him will be shameful for the entire Tamil community.

The people of the village, historians and archaeologists have opposed the move and appealed to the Tamilnadu Government and NHAI to divert the road project to the extreme northern side of the temple, to protect the monument.

இந்தத் திருக்கோயிலைப் பற்றிய மேலும் பயனுள்ள குறிப்புகள் தொல்பொருள் ஆய்வாளர் ஆன முனைவர் குடவாயில் பாலசுப்ரமண்யம் அவர்களால் தினமணி 16.6.2013 நாளிதழில் தரப்பட்டுள்ளன. அந்தக் கட்டுரையைக் கீழே தந்துள்ளோம்.

"உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உன்னத சிற்பங்கள், சோழர் கட்டடக் கலைக்கு சிறந்த சான்று பகரும் கட்டுமான நேர்த்தி. ஆடவல்லான் காலடியில் நின்றவாறு அப்பெருமானை வணங்கி நிற்கும் ராஜேந்திர சோழனின் திருவுருவம், சோழர் கால நிகழ்வுகளை எடுத்துச் சொல்லும் ஒன்பது கல்வெட்டுச் சாசனங்கள், என இவை அனைத்தையும் ஏந்தியவாறு அழகிய தென்னந் தோப்பில் பரிவார ஆலயங்களோடு தற்போது எந்த நேரமும் தேசிய நெடுஞ்சாலைத் துறையின் பொக்லைன் இயந்திரங்களின் தாக்குதலுக்கு இரையாகி அழிந்து விடுவோம் எனத் தள்ளாடியவாறு நின்று கொண்டிருப்பதுதான் கும்பகோணம் அருகிலுள்ள மானம்பாடி நாகநாதசுவாமி திருக்கோயில்!

கருங்கல்லால் எடுக்கப் பெற்ற இக்கோயில் கங்கையும் கடாரமும் கொண்டவனான மாமன்னன் முதலாம் ராஜேந்திர சோழனால் தோற்றுவிக்கப் பெற்றதாகும். வரும் 2014-ஆம் ஆண்டுதான் ராஜேந்திர சோழன் பேரரசனாக முடி சூடிக்கொண்டதன் ஆயிரமாவது ஆண்டாகும். உலகிலேயே மிகச் சிறந்த கப்பற் படையினை கொண்டிருந்த இம்மாமன்னன் கீழ்த்திசை நாடுகளான ஸ்ரீவிசையம், பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், பப்பாளம், கலிம்பங்கம், வளைப்பந்தூர், தக்கோலம், தாமலிங்கம், இலாமுரி தேசம், நக்கவரம், கடாரம் ஆகியவற்றை தன் வலிமையால் கைப்பற்றிய

வரலாறு. நம் தமிழக கல்வெட்டுக்களாலும், மலேசியா, ஜாவா, சுமித்ரா, நிக்கோபர், இந்தோனேஷியா, மியான்மர், தாய்லாந்து போன்ற கிழக்காசிய நாடுகளில் கிடைத்துள்ள தொல்பொருள் சான்றுகளாலும் உலக வரலாற்று அறிஞர்களால் உறுதி படுத்தப்பெற்றுள்ளது. ஒவ்வொரு தமிழனும் பெருமை கொள்ளத்தக்க முன்னோடியாய் வாழ்ந்த மாவீரன் ராஜேந்திர சோழன் வீர நாராயணபுரம் என்னும் இலைச்சிக்குடியில் தன் பக்திப் பரவசத்தால் 'ஸ்ரீ கைலாசம்' என்ற பெயரில் எடுத்த ஆலயமே இன்றைய மானம்பாடி நாகநாத சுவாமி திருக்கோயிலாகும்.

ஸ்ரீகைலாசமுடையார் என்னும் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பெற்ற மூலவர் கோயிலோடு மகாமண்டபம் இணைந்துள்ளது. ஸ்ரீவிமானம் மற்றும் மண்டபத்து வெளிப்புறச் சுவர்களில் காணப்பெறும் பிறை மாடங்களில் நடராசர், கணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, உமையொருபங்கன், கொற்றவை, கங்காதரர் ஆகிய எட்டு திருமேனிகள் காட்சியளிக்கின்றன. இச்சிற்பங்களின் செய்நேர்த்தியில் மயங்காதவர் யாரும் இருக்க முடியாது.

குறிப்பாக ஆடவல்லான் திருமேனி (நடராசர்) திகழும் மாடத்தின் இருமருங்கும் முறையே ராஜேந்திர சோழன், அவனுடைய பட்டத்து அரசி, ராஜ குரு மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோரின் சிற்பங்கள் காணப்பெறுகின்றன.

எடுப்பான மீசையுடன் ஈசனாரை வணங்கி நிற்கும் ராஜேந்திர சோழனின் உருவச் சிலையை தமிழகத்தில் வேறு எங்கும் நாம் காணஇயலாது. பிறை மாடங்களின் மகர தோரணங்களில் அழகிய சிற்பங்கள் காணப்பெறுகின்றன. அவற்றில் ராஜேந்திர சோழன் பூசனை செய்யும் காட்சி, கண்ணப்பர் தன் கண்ணை அகழ்ந்து ஈசனார்க்கு அப்ப முற்படுதல், அதனை ஒருகரம் தடுத்தல் ஆகிய நுட்பமிகு படைப்புகள் இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வாலயத்தின் கல்வெட்டுச் சாஸனங்கள் அனைத்தும் சோழர் கால வரலாறு பகரும் முத்துக்களாகும். வீரநாராயண புரத்து நகரத்தார்கள் கோயிலுக்கென ஒரு நந்தவனத்தை

அமைத்து அதற்கு 'ராஜேந்திர சோழன் திருநந்தவனம்' எனப் பெயரிட்டதை ஒரு கல்வெட்டு விவரிக்கின்றது. ராஜேந்திர சோழன் தன் கங்கை கொண்ட சோழபுரத்து அரண்மனையில் ஆன்மார்த்த மூர்த்தியை பூசிக்கும் கோயிலின் (தேவாரம்) நிர்வாகியாக (தேவார நாயகம்) விளங்கியவர் நாங்கூர் மறைக்காடன் பதஞ்சலி பட்டாரர் என்ற செய்தியும், அவர் தம் மன்னவனுக்கு நலம் பயப்பதற்காக இத்திருக்கோயிலில் மூன்று திருவிளக்குகள் எரிப்பதற்காக அளித்த நன்கொடையினைப் பற்றியும் மற்றொரு கல்வெட்டு கூறுகின்றது. கங்கைகொண்ட சோழபுரத்து வணிகர்கள் இக்கோயிலுக்கு அளித்த கொடைகள், சித்திரைப் பெருவிழா நடப்பதற்காக ஊர் மக்கள் அளித்த கொடைகள், சித்திரை விழாவில் 'நம்பி நங்கை' என்னும் அவ்வூர் திருக்குளத்திலிருந்து நாள்தோறும் 2000 அல்லி மலர்கள் ஈசனுக்காக அர்ப் பணிக்கப்பட்டது என்பன போன்ற செய்திகளை அக்கல் வெட்டுக்கள் எடுத்துரைக்கின்றன. குறிப்பாகத் 'தமிழ்க் கூத்து' பற்றி அறிய இன்று தமிழ் நாட்டில் ஒரு சில பண்டைய கல்வெட்டுக்களே கிடைத்துள்ளன. முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் இவ்வாலயத்தின் சித்திரைத் திருவிழாவில் தமிழ்க் கூத்து நடைபெறுவதற்காக நகரத்தார்களும், திருக்கோயில் நிர்வாகிகளும் நாகன்பாடி என்ற ஊரில் கூத்தாட்டுக்காணி என்ற பெயரில் நிலம் அளித்துள்ளனர்.

அதனை விக்கிரமாதித்தன் திருமுதுகுன்றன் என்னும் விருதராஜபயங்கர ஆசார்யன் என்ற நாடக ஆசார்யர் பெற்றுக் கொண்டார் என்ற செய்தியும் இக்கோயில் கல்வெட்டில் விவரிக்கப்பெற்றுள்ளது. இந்த தமிழ்க் கூத்து ஆசானின் ஊர் திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) என அறிகிறோம். ராஜேந்திர சோழனின் மகன் இரண்டாம் ராஜேந்திரன் தஞ்சை பெரியகோயிலில் 'ராஜ ராஜேச்வர நாடகம்' என்ற சாந்திக்கூத்து ஆட திருமுதுகுன்றன் விஜய ராஜேந்திர ஆசார்யனுக்கு நிவந்தம் அளித்தான் என்ற செய்தி தஞ்சைக் கோயில் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. தற்போதைய விருத்தாசலத்தில் தமிழ்க் கூத்து வல்லோர் பலர் வாழ்ந்ததை இக்கல்வெட்டுக்களால் அறிகிறோம். மானம்பாடி கோயிற் சாஸனம் தமிழ்க் கூத்து பற்றி ஆராய முயல்வோருக்கு ஓர் அரிய பொக்கிஷமாகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மானம்பாடி கோயிலின் மதில், பரிவாராலயங்கள் உள்ளிட்ட ஒரு பெரும் பகுதியைத் தரைமட்டமாக இடிக்க தேசிக நெடுஞ்சாலை ஆணையத்தினர் குறியீடுகளைப் போட்டு செயல்பட்டுவருகின்றனர். ஊர் மக்களும், வரலாற்று ஆர்வலர்களும், கலை வல்லோரும், ஆன்மீக அன்பர்களும் இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்துவருகின்றனர்.

இக்கோயிலுக்கு அருகிலுள்ள அய்யனார் ஆலயத்தில் இருந்த பிரம்மாண்டமான புத்தர் சிலை (பழமையானது) அண்மைக்காலத்தில் களவு போய் காவல் துறையால் மீட்கப்பட்டு மீண்டும் அவ்வூருக்கே கொண்டுவந்து சேர்க்கப்பெற்றது ஆறுதல் அளிக்கும் செய்தியாகும்.

தேசிய நெடுஞ்சாலையில் உள்ள இந்த கலைச் செல்வங்களைக் காப்பாற்றிப் பாதுகாத்தல் நாள்தோறும் இவ்வழியே பயணம் செய்யும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் நிச்சயம் கண்டு மகிழ்வார்.

**பன்னிரு திருமுறைகளில் ஒன்றான திருமந்திரத்தில் (இரண்டாம் தந்திரம்) திருமூலநாயனார், திருக்கோயில்களில் உள்ள தெய்வ உருவங்களை அழிப்பதோ, அதன் மதிலில் உள்ள ஒரு கல்லைக் கூட பிடுங்குவதோ செய்தால் ஆளும் அரசுக்கு அது ஆகாதென்றும், நாட்டில் மழை குன்றும் என்றும், களவும் நோயும் மிகும் என்றும் கூறியுள்ளார்.**

**“கட்டுவித்தார் மதிற்கல்லொன்று வாங்கிடில்**
**வெட்டுவிக்கும் அபிடேகத் தரசரை**
**முட்டுவிக்கும் முனி வேதியராயினும்**
**வெட்டுவித்தேவிடும் விண்ணவன் ஆணையே...” (516)**

**“முனைவனார் கோயில் பூசைகள் முட்டிடின்**
**மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்**
**கன்னங் களவு மிகுந்திடும் காசினி**
**என்னருள் நந்தி எடுத்துரைத்தானே.” (518)**

- என்பது அவர்தம் கூற்று.

தஞ்சை சரசுவதி மகாலில் உள்ள 500 ஆண்டுகால பழமையுடைய ஏட்டுச் சுவடியிலுள்ள மனுநீதிச் சோழனின் புலம்பலைக் காண்போம். "தண்ணீர்ப் பந்தல் நந்தவனம், திருவாசல், கோயில் மதில் இவைகளைப் பிடுங்கியழித்தேனோ, கிணறுகளைத் தூர்த்தேனோ, கல்வெட்டுக் களைத்தான் அழித்தேனோ? இந்த மாபாதங்களில் எதையும் நான் செய்யவில்லையே." என்று கூறுகின்றான். இந்த மாபாதங்களைத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் செய்யலாமா? தமிழ்க் கூத்து நிகழ்ந்த இந்த ஆயிரம் ஆண்டு கோயிலை நாம் பாதுகாக்கத் தவறலாமா?"

***

## 3. பாஞ்சஜன்னியம் ஆசிரியர் திறம் போற்றுதல்

31.3.2013 ஞாயிற்றுக்கிழமையன்று விவேகானந்தரின் 150ஆவது ஆண்டு ஜெயந்தி விழாவினை முன்னிட்டு நடைபெற்ற கருத்தரங்களில் விவேகானந்தர் பார்வையில் மதமாற்றம் என்னும் தலைப்பில் பாஞ்சஜன்யம் ஆசிரியர் உரையாற்றினார். அந்தக் கட்டுரை பாஞ்சஜன்யம் ஏப்ரல் மாத இதழில் வெளிவந்துள்ளது. அன்றைய தினம் ஆற்றிய உரையினை பாராட்டி tamil hindu.com மின்னஞ்சல் இதழ் ஆசிரியரும், சிறந்த ஆய்வாளருமான திரு அரவிந்த் நீலகண்டன் அவர்கள் பாராட்டிக் கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தின் நகலை கீழே தந்துள்ளோம்.

"It was one of the those rare speeches which come from the heart and hence needs no additional glitters. He spoke his heart and its heart beat was in unison with the vision of Swami Vivekananda. He emphasized on the importance of empowering the entire Hindu population spiritually. He Spoke about the need to counter the missionary propaganda without hatred for Christians. After all are not they our own brothers and sisters- the children of Bharath Matha and descendants of Sri Rama and Sri Krishna? His speech underscored the fact that we need to reach out with our philosophy. What Swami Vivekananda called 'Practical Vedanta', is what the editor of panchajanyam spoke - it was a call to every Hindu to understand Swami Vivekananda and get galvanized into action. His call to the audience to read the importance and inter-

pretation Swami Vivekananda gave to Sri Bhagavad Gita is a very vital call. My pranams at the feet of this great soul who at his age has come to participate in this historical seminar and gave a message that was befitting the occasion." ***

### 4. 45ஆவது பட்டம் ஸ்ரீமத் அழகிய சிங்கரின் பரமபத ப்ராப்தி.

ஸ்ரீ அகோபில மடத்தின் 45ஆவது பட்டத்தை அலங்கரித்து வந்தவராகிய ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மகா தேசிகன் எனப்படும் ஸ்ரீமத் அழகியசிங்கர் வைகாசி 5ஆம்தேதி (19.5.13) அன்று ஸ்ரீரங்கத்தில் தனது 86ஆவது திருநக்ஷத் திரத்தில் ஆசார்யன் திருவடி அடைந்தார். 21வருடங்களாக ஆசார்ய பீடத்தினை அலங்கரித்து வந்த இவர் வில்லிவலம் அக்ரஹாரத்தில் 1926ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் அவதரித்தவர். பூர்வாச்ரமத்தில் கிருஷ்ணமாசார்யர் என்னும் திருநாமத்துடன் திகழ்ந்த இவர். 21.10.1991 அன்று துறவு வாழ்க்கையை மேற்கொள்ள, ஸ்ரீரங்கம் கோபுரத்தினை கட்டி முடித்த கோபுர ஜீயர் எனப்படும் 44ஆவது பட்ட அழகியசிங்கரிடம் துறவறம் பூண்டார். ஆசார அனுஷ் டானங்களில் சிறந்து விளங்கிய ஸ்வாமி தனது சிஷ்யர்களிடமும் அதை உபதேசிக்கவும் கடைபிடிக்க வைக்கவும் செய்தார். பல திவ்ய தேசங்கள் பொலிவுற செய்தது, மதுராந்தகம், சேலையூர் வேத பாடசாலைகள் மேம்போடு, மடத்து பத்திரிகையில் அமுத மொழிகள் மூலம் உபதேசம், என நமது அழகிய சிங்கர் செய்த மறக்கமுடியாத சமுதாய பணிகள் காலப் பெட்டகங்கள். ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ பதிப்பான பெரியதிருமொழிக்கான பெரிய வாச்சான்பிள்ளை வ்யாக்யானத்தை வெளியிடுவதற்கு இந்த ஸ்வாமி நிதியுதவி புரிந்தார். பெரியவாச்சான்பிள்ளை வ்யாக் யானங்களில் ஆழ்ந்த பற்றுக்கொண்டவர் இந்த ஸ்வாமி. ***

### 5. ஆப்தரின் பரமபத ப்ராப்தி.

பாஞ்சஜன்யத்தின் நீண்ட நாளைய வாசகரும், புகழ் பெற்ற எழுத்தாளர் சுஜாதா ரங்கராஜனின் இளவலுமான பிள்ளைப்பாக்கம் பஹுகுடும்பி ஸ்ரீ.உ.வே. ராஜகோபாலன் அவர்கள் விஜய வருடம் வைகாசி மாதம் 28ஆம் நாள் (12.6.2013)

அன்று தமது 73ஆவது திருநக்ஷத்திரத்தில் ஆசார்யன் திருவடி யடைந்தார். M.T.N.L. நிறுவனத்தில் உயர்பதவி வகித்து வந்தவர் திரு.ராஜகோபாலன். பாஞ்சஜன்யத்தில் வெளிவரும் கட்டுரைகள் அனைத்தையும் படித்து அதுபற்றிய தமது கருத்துக்களை ஒளிவு மறைவின்றி தெரிவிப்பவர். பெரும்பாலான நாட்கள் அடியேனும் திரு. ராஜகோபாலன் சித்திரை வீதிகளில் பிரதக்ஷிணம் வரும் போது பல விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டே செல்வோம். ஸம்ப்ரதாயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவர் ஒரு நிறை குடம். அதிர்ந்து பேசத் தெரியாதவர். தன் மனத்திற்கு பட்டதை உள்ளது உள்ளபடி தெரிவித்திடுவார். அவர் பரமபதிப்பதற்கு முதல்நாள் அவருடன் நீண்டநேரம் உத்திர வீதியில் அமைந் துள்ள கந்தாடை ராமானுஜமுநி மடத்திற்கு முன்பாக அளவளா விக் கொண்டிருந்தேன். அதற்கு அடுத்த நாள் எம்முடைய அலுவலகத்திற்கு வந்து அண்மையில் வெளிவந்த ‘வேதார்த் தஸங்க்ரஹம்’ என்ற புத்தகத்தை நேரில் வாங்கிக்கொள்வதாகக் கூறினார்.

ஆனால் அன்றைய தினம் அவர் வரவில்லை. அடுத்த நாள் அவர் பரமபதித்துவிட்டார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சி யடைந்தேன். காலஞ்சென்ற எழுத்தாளர் திரு. சுஜாதா ரங்கராஜன் ஸ்ரீரங்கத்திற்கு வருகை தரும்போதெல்லாம் திரு. ராஜகோபாலன் அவரை எமது அலுவலகத்திற்கு அழைத்துக் கொண்டு வருவார். நீண்டநேரம் உரையாடிக் கொண்டிருப்போம். தனிகரும் ஸ்ரீவைஷ் ணவ ஸம்ப்ரதாயத்தை வளர்ப்பதற்கும் திருக்கோயில் பணிகளை மேற் கொள்வதற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட சிங்க மய்யங்கார் ஸ்வாமியின் நெருங்கிய உறவினர் திரு. ராஜ கோபால். எளிய கட்டுரைகள் பல எழுதி நமது ஸம்ப்ரதாயத்திற்கு ஒரு தூணாக விளங்கிய திரு. ராஜகோபாலனின் மறைவு பாஞ்ச ஜன்யம் ஆசிரியருக்கும் அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ஏற்பட்டதோர் பேரிழப்பாகும். அன்னா ருடைய புதல்வர்கள் திரு. மாதவன், திரு. அரவிந்தன் ஆகியோர் சரமகைங்கர்யங்களைச் சிறப்புறச் செய்தனர். திரு. ராஜ கோபாலனை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு தகுந்த ஆறுதல் நல்கிட பெரியபிராட்டியார் பெரியபெருமாள் திருவடிகளில் ப்ரார்த்தித்துக் கொள்கிறேன். ***

# வேதநாயகன் விஷ்ணுவே

இதழ் 169இன்தொடர்ச்சி. ஆசிரியர்: இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே.சே.பத்மநாபன்.

அந்த நிலையில் தான் திருமகள் "நம் உடைமையான செல்வத்தின் மீது இவனுக்கு வைராக்யம் ஏற்பட்டு நம்மையே இவன் பெரிதாக எண்ணுவதால் இவன் நம் கருணைக்கு உரியவன்" என்று திருவுள்ளம் கொண்டு அருள் புரிகிறாள். அவன் அருளாலேயே அவன் நாதனான பகவானை அடைகிறான். இதனை ஒரு சிறிய உதாரணத்தின்படி விளக்குவோம்.

ஒரு பெற்றோருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் பொற்றோர் சேர்த்து வைத்துள்ள சொத்தின்மீது மட்டும் ஆசை வைத்து பெற்றோரை கவனிக்க மறந்து விடுகிறான். மற்றொருவன் சொத்தைப் பெரிதாக எண்ணாமல் பொற்றோர்களையே பெரிதாக எண்ணி அவர்கள் மீது உண்மையான பாசத்தைச் செலுத்துகிறான். அந்த இரண்டு பிள்ளைகளில் எந்தப்பிள்ளை மீது பெற்றோருக்குப் பாசம் இருக்கும்? சொத்தைப் பெரிதாக எண்ணாமல் தங்களையே பெரிதாக நினைக்கும் பிள்ளைமீதுதானே அந்தப் பெற்றோருக்குப் பாசம் வரும்! அதுதானே இயற்கை! அதைப்போலத்தான் தங்கள் உடைமையான உலகச் செல்வங்கள்மீது ஆசைவைக்காமல் தங்களையே அடைய நினைக்கும் அடியார் மீது தங்களின் கருணைமழையைப் பொழிகிறார்கள். ஜகன்மாதாவும் ஜகத் பிதாவுமான ஸ்ரீதேவியும் ஸ்ரீதரனான விஷ்ணுவும்.

தீவினையின் காரணமாக உண்மை ஞானம் இல்லாதவர் களுக்கு செல்வத்தின்மீது ஒரு மயக்கத்தை ஏற்படுத்திடுவாள் திருமகள். நல்வினையின் காரணமாக உண்மை ஞானம் பெற்ற வர்களுக்கு செல்வத்தின்மீது வைராக்யத்தை ஏற்படுத்தி

பகவானை அடைய உதவி செய்கிறாள். இதனையே சங்க இலக்கியப்பாடல் ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

**விட்டோரை விடாஅள் திருவே**

**விடா அதோர் இவள் விடப்பட்டோரே.**
**-புறம்- 358.**

திருமகள் நாதனான அந்த விஷ்ணுவுக்குத் தன்னையும் தன் உடைமைகளையும் அர்ப்பணிப்பவனும் பகவானின் மஹத்தான பிறவியைப் போற்றுபவனுமே பரமபதம் அடைய முடியும் என்று முழக்கமிடுகிறது இம்மந்திரம். தன்னையும் தன் உடைமைகளையும் அர்ப்பணித்தல் என்பது சரணாகதி. இந்த சரணாகதியே பகவானை அடைய ஒரே வழி என்பதாலேயே ஸ்ரீவைஷ்ணவத்தின் உயிர்நாடிக் கொள்கையாக அது இருக்கிறது. அதனால் ஸ்ரீவைஷ்ணவத்தின் சரணாகதிக் கொள்கை வேதம் அங்கீகரித்துள்ள கொள்கையே என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது.

மேலும் மிகப் பெரியவனான அந்த பகவானின் உயர்ந்த பிறப்பைப் போற்றுபவனும் பரமபதத்தை அடைகிறான் என்று சொல்லப்படுகிறது. முதலிலும் முடிவிலும் இருப்பவன் அவனே என்றும் ஆதிஅந்தமற்றவன் என்றும் சொல்லப்படுவதால் பகவான் விஷ்ணு மற்றவர்களைப் பிறப்பிக்கிறானேயொழிய அவன் பிறப்பதில்லை; அவனைப் பிறப்பித்தவனும் இல்லை என்பது மிகத் தெளிவான விஷயமாகும்.

அதே நேரத்தில் இந்த மந்திரத்திலேயே அவனுடைய மஹத்தான ஜன்மத்தைப் போற்றுபவன் பரமபதத்தை அடைவான்' என்று சொல்லப் படுவதால் பிறவியில்லாதவனுக்கு எப்படிப் பிறவி இருக்க முடியும் என்ற சந்தேகம் எழலாம். அதற்கு விளக்கம்: ஜன்மம் என்பதற்கு முன்னால் (ஜாதமஸ்ய மஹதோ மஹி .....) “மஹத்தான” என்ற அடைமொழி உள்ளதைக்

கவனிக்க வேண்டும். மற்றவர்களின் பிறப்பெல்லாம் மஹத்தான பிறப்பாகாது. ஏனெனில் மற்றவர் களின் பிறப்பு தன்னிச்சையானதன்று. தங்கள் வினைப்பயனா லேயே மற்றவர்கள் பிறவி எடுக்கிறார்கள். ஆனால் பரமனான பகவான் விஷ்ணுவின் பிறப்பு, தர்மத்தைக் காக்க அவனே விரும்பிப் பிறக்கும் தன்னிச்சையான பிறப்பு. அதனால்தான் அது அவதாரம் என்று சொல்லப்படுகிறது. மற்றவர்களின் பிறப்பை அவதாரம் என்ற சொல்லால் குறிப்பிடுவதில்லை. பகவானுடைய அவதாரமான உயர்ந்த பிறப்பின் சிறப்பை அறியாமல் மற்ற வர்களின் பிறப்போடு அவனுடைய பிறப்பையும் ஒப்பிட்டுப் பேசி விடுவார்களே என்று நினைத்துத்தான் ‘அவனது மஹத்தான ஜன்மத்தையும் போற்றுங்கள் என்று வேதம் கூறுகிறது. இப்படி வேறு எந்த தேவதை விஷயத்திலும் வேதம் கூறவில்லை.

ஆகவே பரமனுக்கு அவதார ரூபமான பிறப்பு உண்டு என்பதும், அந்தப் பிறப்பு மற்றவர்களின் பிறப்பைப்போல் கர்மவினையால் ஏற்படுவதில்லை என்பதும் பரமனின் பிறப்பை மற்றவர்களின் பிறப்பைப்போல் நினைக்காமல் அவனது பிறப்பின் சிறப்பையும் நோக்கத்தையும் உள்ளபடி உணர்ந்து போற்றுபவர்களே பரமபதத்தை அடைவார்கள் என்பதும் இம்மந்திரத்தில் தெளிவாக முழங்கப்படுகின்றன.

இதிலிருந்து இன்னொரு பொருளும் கிடைக்கிறது. பகவானின் மஹத்தான பிறப்பு என்று சொல்லப் படும் அவனுடைய அவதாரத்தைப் போற்றாமல் மற்றவர்களின் பிறப்பைப்போல் அவனுடைய பிறப்பையும் நினைப்போருக்குப் பரமபதம் கிடைக்காது என்பதும் இதனால் பெறப்படுகிறது. மேலும் தன்னை முழுமையாக பகவானிடம் அர்ப்பணித்து சரணாகதி செய்பவனும் பகவானின் அவதாரத்தைப் போற்று பவனுமே பெரும்புகழ் அடைகிறான் என்றும் சொல்கிறது இம்மந்திரம். அதாவது பகவான் விஷ்ணுவிடம் மாசற்ற பக்தி செய்பவனே பெரும்புகழ் பெற்றவன் என்பதையும் மற்றவர்களுக்குப் புகழ் இல்லை என்பதையும் வேதமே நிர்ணயித்து விட்டது.

இம்மந்திரமும் கிருஷ்ண யஜுர்வேதம் 2ஆம் அஷ்டகம் 4ஆவது ப்ரச்நத்தில் வருகிறது.

**அடுத்து மூன்றாவது மந்திரத்தைப் பார்ப்போம்.**

**தமு ஸ்தோதார: பூர்வ்யம் யதா₂ வித₃**
**ருதஸ்ய க₃ர்ப₄ம் ஜநுஷா பிபர்த்தந |**
**ஆஸ்ய ஜாநந்தோ நாம சித்₃விவக்தந**
**மஹஸ்தே விஷ்ணோ ஸுமதிம் ப₄ஜாமஹே ||**

**இதன்பொருள்:**

“துதிக்கத் தெரிந்தவர்களே! ஆதிமூலமும், ஆதியில் நீரைப்படைத்தவனுமான அந்த விஷ்ணுவையே நீங்கள் அறிந்த படி பயன்கருதாத பக்தியோடு துதி செய்யுங்கள். அவனுடைய நாமத்தை அறிந்த நீங்கள் எல்லா இடங்களிலும் அதைப் பாடுங்கள். விஷ்ணுவே! மிகப் பெரியவனான உனது கருணைக்கு நாங்கள் பாத்திரமாவோமாக”.

‘பூர்வ்யம்’ என்ற சொல்லால் பகவான் விஷ்ணு ஆதி மூலமான பரம்பொருள் என்பது குறிப்பிடப்படுகின்றது. ‘ருதம்’ என்றால் தண்ணீர் என்று பொருள். “ருதஸ்ய க₃ர்ப₄ம்” என்றால் நீரை உருவாக்கிய மூலம் - கரு என்று பொருள். அதாவது தண்ணீரைப் படைத்தவன் பகவான் என்றபடி. உலகத் தோற்றத்தின் முன் தண்ணீரே இருந்தது என்று வேதம் கூறுகிறது. முதலில் தோன்றிய தண்ணீரையும் படைத்தவன் பகவான் விஷ்ணுவே என்று சொல்லப்படுகிறது. தண்ணீருக்கு உற்பத்தி ஸ்தானமாக உள்ளவன் என்று கூறப்படுவதால் அதன்பிறகு உண்டான அத்தனைக்கும் அவனே காரணகர்த்தா என்பதும் புலனாகிறது. மேலும் ‘ருதம்’ என்பதற்கு ப்ரபஞ்ச நியதி என்ற பொருளும் உண்டு.

அதாவது, பிரபஞ்சத்தின் அமைப்பு, அந்த பிரபஞ்சத்தில் உள்ள வஸ்துக்களின் (பொருள்களின்) இயக்க நியதி.

இவற்றைப் பற்றிய சட்டம் ‘ருதம்’ எனப்படும். அந்த இயற்கை நியதியின் சட்டமே பகவான் விஷ்ணுவிடமிருந்து தோன்றியது என்பது தாத்பர்யம் (கருத்து). உலக இயக்கத்தின் சட்டத்தைத் (Formula) தோற்றுவித்தவன் பகவான் விஷ்ணுவே. அவன் உருவாக்கிய சட்டத்தின்படியே உலகம் தோன்றிய நாள் முதல் இயங்கிக் கொண்டிருக்கிறது. பகவான் தோற்றுவித்த சட்டத்தை மீறி யாரும் இயங்க முடியாது.

இவ்வளவு பெருமை யுடைய பகவானை உள்ளபடி அறிந்து துதிப்பது என்பது சாத்ய மில்லை. அதனால்தான் உங்களுக்குத் தெரிந்தவரை (யத$_2$ாவித$_3$) துதியுங்கள் என்று சொல்லப்படுகிறது. பகவான் விஷ்ணுவின் பெருமைகளை உள்ளபடி முழுமையாக யாரும் அறிய இயலாது என்பதும் இதனால் பெறப்படுகிறது. துதி செய்வதும் அவனை மட்டுமே துதி செய்ய வேண்டும் என்று கூறப்படுகிறது. (தம் உ - அவனை மட்டுமே) மற்றவர்கள் துதி செய்யப்படத் தகுதி யானவர்கள் இல்லை என்பது இங்கு தெளிவாகிற விஷயம். விஷ்ணுவை எப்படிப்பட்ட துதிகளால் துதிக்க வேண்டுமோ அப்படிப்பட்ட துதிகளால் மற்றவர்களைத் துதிக்க முடியாது.

ஏனெனில் பகவான் விஷ்ணு பரம்பொருளாகையால், பரம் பொருளைத் துதிக்கும் சொற்களைக் கொண்டு மற்றவர்களைத் துதிக்க முடியாது. வேதங்களில் எங்கு தேடிப் பார்த்தாலும் விஷ்ணுவைத் துதிக்கப் பயன்படுத்தப்படும் சொற்கள் வேறு எந்த தேவதைகளின் துதிகளிலும் பயன்படுத்தப்படவில்லை என்பதை நாம் காண முடியும். ஆகவே உயர்ந்த துதிகளுக்குரியவன் பகவான் விஷ்ணுவே என்பது இங்கு தெளிவாகிறது. மேலும் பகவான் விஷ்ணுவின் நாமத்தை அறிந்தவர்களை நோக்கி, “அவனுடைய நாமத்தை எங்கும் பாடுங்கள்” என்கிறது வேதம்.

இதனால் நாம ஸங்கீர்த்தனம் என்பது விஷ்ணுவுக்கு மட்டுமே உரியது என்பது புலப்படுகிறது. “பாடுங்கள்” என்று சொல்லப்படுவதால் இசையுடன் கூடிய அவனது நாமத்தை

இசையுடன் பாடலாம் என்பதும் தெளிவாகி றது. ஆகவே நாமஸங்கீர்த்தனம் வேதத்தால் அங்கீகரிக்கப்பட்ட விஷயம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மந்திரத்தின் இறுதியில் "விஷ்ணுவே மிகப் பெரியவனான உன் கருணைக்கு நாங்கள் பாத்திரமாவோமாக! என்று பிரார்த்திக்கப்படுகிறது. அதாவது பகவான் மீது பக்தி ஏற்பட்டாலே அவனுடைய கடாக்ஷம் நமக்குக் கிடைக்கும். ஆகவே பகவத்பக்தி இந்த மந்திரத்தில் தெளிவாக முழங்கப்படுகிறது.

இதுவும் கிருஷ்ண யஜுர்வேதம் 2ஆம் அஷ்டகம் 4ஆம் பிரச்நத்தில் வருகிறது.

**அடுத்த மந்திரம் பின்வருமாறு:**

**தமஸ்ய ராஜா வருணஸ்தமஶ்விநா**
**க்ரதும் ஸசந்த மாருதஸ்ய வேத$_3$ஸ: |**
**த$_3$ாத$_4$ார த$_3$க்ஷமுத்தமஹர்விதம்**
**வ்ரதம் ச விஷ்ணு ஸகிவாம் அபோர்ணுதே ||**

**இதன் பொருள்:** மருத்கணங்களை வழி நடத்துபவனான விஷ்ணுவிடம் ராஜாவான வருணனும் அஸ்விநி தேவர்களும் அடிபணிந்து நடக்கிறார்கள். மோக்ஷத்தை அளிப்பதான உயர்ந்த பலமும் சக்தியும் விஷ்ணுவிடம் உள்ளது. விஷ்ணுதன் நண்பனுடன் சேர்ந்து மழை பொழிவிக்கிறான்.

இம்மந்திரத்தில் எல்லா தேவதைகளையும் வழி நடத்துபவன் விஷ்ணுவே என்று சொல்லப்படுகிறது. ருத்ரனைத் தலைவனாகக் கொண்ட மருத்கணங்களை வழிநடத்துபவனே விஷ்ணுதான் என்று சொல்லப்படுகிறது. வருணனும் அஸ்விநி தேவர்களும் பகவான் விஷ்ணுவைப் பணிந்து அவனது கட்டளைக்கு அடிபணிந்து நடப்பதாகச் சொல்லப்படுவதால் தேவர்கள் அனைவரும் பகவான் விஷ்ணுவின் கட்டளைகளை ஏற்று நடப்பவர்களே என்பது தெளிவாகிறது. அதனால் மற்ற தேவர்களின் ரக்ஷணச்செயலும் பகவான் விஷ்ணுவின் கட்டளை

யால் நடைபெறுவதுதான். அந்த வகையில் எல்லோரையும் ரக்ஷிக்கும் உண்மையான ரக்ஷகன் பகவான் விஷ்ணுவே என்பது புலனாகிறது. மோக்ஷமளிக்கும் சக்தி ஸர்வ வல்லமை மிக்க பகவான் விஷ்ணுவிடமே உள்ளது என்று இம்மந்திரம் முழக்கமிடுகிறது. மற்ற தேவர்கள் மூலம் இம்மைப் பயனை அளிக்கும் பகவான் மறுமைப் பயனான மோக்ஷத்தைத் தானே அளிக்கிறான். உண்மையில் இரண்டு பயனையும் அளிப்பவன் அவனே.

வேள்விகள் நடந்தால்தான் மழைபொழியும். வேள்விகள் நடக்க வேண்டுமெனில் வேள்விகளைக் கெடுக்கும் தீய சக்திகள் அழிய வேண்டும். அந்தத் தீய சக்திகளை அழிக்க பகவான் விஷ்ணு தன் நண்பனான இந்திரனுக்கு உதவி செய்வது வழக்கம். அந்தத்தீய சக்திகள் அழிந்தபின் வேள்விகள் முறைப்படி நடக்கும். அதனால் மழை பொழிந்து உலகம் செழிக்கும். ஆகவே மழைக்கு இந்திரன் காரணம் என்றாலும், முக்கியக் காரணம் பகவான் விஷ்ணுவே. இந்திரன் தன் செயலைச் செய்ய இயலாதபோது, அவனுக்கு உதவியாக வந்து அவனுடைய இடர்களை நீக்கி அவன் எப்போதும் போல் தன் கடமைகளைச் செய்ய வைப்பவன் பகவான் விஷ்ணுவே. அதனால்தான் நண்பனுடன் சேர்ந்த விஷ்ணு மழை பொழி விக்கிறான் என்று சொல்லப்பட்டது. பொதுவாக இம்மந்திரத்தில் இந்திரன் உள்ளிட்ட எல்லா தேவர்களில் பகவான் விஷ்ணுவுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதும், விஷ்ணுவின் உதவியின்றி அவர்களால் தன்னிச்சையாக இயங்க இயலாது என்பதும் அவர்கள் மக்களுக்கு அளிக்கும் உலகியல் பயன்களும் விஷ்ணு அநுக்ரஹிப்பதே என்பதும் மோக்ஷத்தைக் கொடுக்கும் சக்தி விஷ்ணுவிடம் மட்டுமே உள்ளது என்பதும் மிகச் சிறப்பாக விளக்கப்படுகின்றன.

**இனி அடுத்த மந்திரம் பின்வருமாறு.**

**ஆயோ வியாய ஸசத$_2$ாய தை$_3$வ்ய**
**இந்த்$_3$ராய விஷ்ணு: ஸுக்ருதே ஸுக்ருத்தர: |**

**வேத$_4$ா அஜிந்வத் த்ரிவித$_4$ஸ்த ஆர்ய**
**ருதஸ்ய ப$_4$ாகே$_3$ யஜமாந மாப$_4$ஜத் ||**

**இதன்பொருள்:** "அனைத்தையும் படைப்பவனும் மூவுலகத்தின் தலைவனுமான விஷ்ணு நற்காரியங்கள் செய்யும் இந்திரனுக்கு உதவி செய்ய சொர்க்கத்திற்கு வருகிறான். தேவாதி தேவனான விஷ்ணு தன்னை வேள்வியில் வழிபடும் நல்லவனான யஜமானனுக்கு (வேள்வி செய்யும் கர்த்தாவுக்கு) சந்தோஷத்தை அளிப்பதுடன் வேள்வியின் பலனையும் கொடுக்கிறான்."

உலகங்கள் அனைத்தையும் படைக்கும் விஷ்ணு தான் படைத்த உலகங்களின் தன்னிகரற்ற தலைவனாக விளங்குகிறான் என்று சொல்லப்படுகிறது. பரமபதத்திலிருக்கும் விஷ்ணு, தன்னை இந்திரன் உதவிக்காக வேண்டும்போது அவனுக்கு உதவிசெய்ய சொர்க்கத்திற்கு வருகிறான். தேவர்களுக்குள் ஒருவனாக இருந்து இந்திரனுக்கு உதவி செய்தாலும், அவன் தேவர்களுக்கெல்லாம் தேவனான தேவாதி தேவன் (ஸுக்ருத்தர:) என்று முழங்கப்படுகிறான். இந்திரன் செய்யும் நற்செயல் என்னவெனில் தனக்கு உதவி செய்ய பகவானை வேண்டித் துதிப்பதே. அதனால் இந்திரனுக்கு உதவ பகவான் வருகிறான். வேள்வி மூலம் தன்னை வழிபடுபவனுக்கு சந்தோஷத்தை அளிப்பதோடு வேள்வி செய்பவனுக்கு வேள்விப் பயனையும் அளிக்கிறான். எந்த வேள்வி செய்தாலும் வேள்விப் பயனை அளிப்பவன் விஷ்ணுவே. வேள்வியில் எந்த தேவதையை வழிபட்டாலும் அந்த வழிபாடு விஷ்ணுவையே போய்ச் சேருகிறது. எந்த தேவதை பலன் கொடுத்தாலும் அந்த தேவதை மூலமாக பகவான் விஷ்ணுவே பலனளிக்கிறான் என்பதும் இங்கு புலனாகிறது.

ஆகவே, இந்த ஸூக்தத்தில் உள்ள மந்திரங்களில் பகவான் விஷ்ணுவின் ஸர்வேஶ்வரத்வம் மிகத் தெளிவாக முழங்கப்படுகிறது.

(தொடரும்)

# எறும்பியப்பாவின்
# விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்

*இதழ் 169இன் தொடர்ச்சி.* *விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**இதழ் 169இல் விளக்கத்தின் தொடர்ச்சி.**

''கிறியென நினைமின்கீழ்மை செய்யாதே'' என்றும், ''வழக்கென நினைமின் வல்வினை மூழ்காது'' என்றும், ''சூதென்று களவும் சூதும் செய்யாதே'' என்றும் செய்யத்தகாத செயலைச் செய்யக் கூடியவராய் நரகத்திலே அழுந்தாமல், இவையெல்லாம் ''வேர்முதல் மாய்த்து - பற்றிலையாய் அவன் முற்றிலடங்கு'' என்று வாய்வாய் அடித்துக்கொண்டு, 'இல்லை கண்டீர்! இன்பமந்தோ!' என்று, ஸம்ஸாரத்தில் சுகமே இல்லை கண்டீர்! அய்யோ! இப்பொருளை யான் உபதேசிக்க வேண்டுவதே என்று, ஆழ்வார் துன்பப்பட வேண்டாமன்றோ? ''செய்தாரேல் நன்று செய்தார்'' என்று எம்பெருமான் தன்னடியாரிடம் குற்றம் பார்க்கக் கூடாது என்றதைப் போல் ஆழ்வாரும் அடியார்கள் குற்றத்தை இன்பமாகக் கருதலாமல்லவா. ''திறமுடைய வலத்தால் தீவினைப் பெருக்காது'' என்று இவ்வாறு கூப்பிட்டது கேவல ஸம்ஸாரிகளுக்கன்றோ, வைஷ்ணவர்களையன்றோஎனின்,

---

**மூலம்:**

**'கழிமின் தொண்டீர்' என்று பகவத்விஷயத்தைப் பெற வேணுமென்று சாபலமுடையார் கழிக்கப்பாருங்கோள்! 'கழித்துத் தொழுமின்' அவனைத் தொழா நிற்கச் செய்தே, அதுவும் க்ரமத்திலே கழிகிறதென்று இராதே அவஶ்யம் கழித்தே தொழுங்கோள்! கழிமினென்று வைத்துக் கழித் தென்று, இதர விஷயத்தில் விரக்திதானே ப்ரயோஜனமாகப் போருமென்கை.**

**இப்படிக் கழித்துக் தொழுதால் நடுவேநின்று பகவத்ப்ராப்தியை விரோதிக்கிற ப்ரபல கர்மங்களைப் போக்கியிறே அபுநரா வ்ருத்தி லக்ஷணமோக்ஷத்தைத் தருமென்று சொல்லுகிறது, பாகவதருமாய் மோக்ஷாபேக்ஷை யுடைய அதிகாரிகளுக்கோ கேவல ஸம்ஸாரிகளுக்கோ நீயே விசாரித்துச் சொல்லிக் காட்டும், என்ன, இது கிடக்கினும், ''செய்தாரேல் நன்று செய்தார்'' என்று, அவன் சொன்னானே? என்னில், பிராட்டி சிதகுரைக்கிலிறே அது செய்யாரென்கிறது. சித குரைக்குமேல் என்றும் செய்தாரேல் என்றும் சொன்ன ஶப்தங்களிலே, கடகையான பிராட்டி தோஷதர்ஶநம் பண்ணுவிக்க மாட்டாள் என்னும் அர்த்தமும், அவள் புருஷகாரமாக ஆஶ்ரயித்தவதிகாரி அக்ருத்யங்களைச் செய்யாரென்னுமிடமும் தோன்றாதோ?**

---

**விளக்கம்:**

'கழிமின் தொண்டீர்' என்று, பகவத்விஷயத்தைப் பெறவேண்டுமென்ற ஆசையுடையோர் தீயவிஷயத்தைக் கழிக்கப்பாருங்கள்; 'கழித்துத் தொழுமின்' அவனைத் தொழுதாலே காலக் கிரமத்தில் கழிகிறதென்று இராமல் அவசியம் கழித்தே தொழுங்கள் என்று ஆழ்வார் உபதேசமாகக் கொள்ளவேண்டும் 'கழிமின்' என்பதை கழித்து என்று வினையெச்சமாக்கி பகவத்விஷயத்தைத் தவிர்த்த பிறவிஷயத்திலீடுபாடற்ற வைராக்கியந்தானே பெரும்பயனாகத் தலைக்கட்டும் என்பதாம்.

இவ்வாறு இதர விஷயத்தைக் கழித்துத் தொழுதால் நடுவே நின்று பகவான் அடைதற்குத் தடையாய் நின்ற பலவிதமான புண்ணிய பாவ கருமங்களைப் போக்கியே மீண்டு வருதலில்லாத மோக்ஷத்தை இறைவன் தரும் என்று ''கிளரொளி'' என்னும் திருவாய்மொழியில் சொல்லுகிறது. இப்படிச் சொன்னது பாகவதருமாய் மோக்ஷத்தில் விருப்பமுடைய அதிகாரிகளுக்கோ அல்லது கேவல ஸம்ஸாரிகளுக்கோ என்பதை நீயே விசாரித்துக் காட்டுவாய் என்ன, இது கிடக்கினும், ''செய்தாரேல் நன்று செய்தார்'' என்று, இறைவனே சொன்னானே எனின், பிராட்டியானவள் அடியார் மீது குற்றம் உரைக்கிலன்றோ, இறைவன் அது செய்யார் என்பது

சிதகுரைக்குமேல் என்றும் செய்தாரேல் என்றும் கூறிய சொற்களிலே, இறைவனோடு சேதநரை (மக்களைச்) சேர்ப்பிப்பாளான பிராட்டி அவர்கள் குற்றத்தைக் காட்டிக் கொடுக்க மாட்டாள் என்ற பொருளும், அவளை புருஷகாரமாகக் கொண்டு இறைவனை அடைந்த அதிகாரிகள் தீய கருமங்களைச் செய்யமாட்டார்கள் என்னுமிடமும் தோன்றாதோ?

---

**மூலம்:**

**இப்படிக் கூடாத அகடிதங்கள் கூடினாலும், அவரை விட்டுக் கொடானென்று ஶரண்ய ப்ரபாவம் சொன்ன தித்தனை. ''என்னடியார் அது செய்யார்'' என்று, என்னடி யாராகில் அக்ருத்யம் செய்வாரோ? என்று, அவர் ஸ்வரூபத்தை நிஷ்கர்ஷித்து, செய்தாரேல் நன்று செய்தா ரென்று பின்பு தன் ஸ்வரூபம் சொன்னான் ஆகையாலே, செய்யாமை அவர்களுக்கு ஸ்வரூபம்; செய்தாலும் விடாமை தனக்கு ஸ்வரூபமென்றும் சொல்லுகிறதென்று விவக்ஷிதம்.**

**'நன்று செய்தார்' என்றது, பிறர் அவர்(கள்) மேல் தோஷம் சொல்லாதபடி தன் பக்ஷபாதம் வெளிப்படுத்தின தித்தனை. (298) ''ஶிக்ஷயாப்ய நகயந் க்ரோடீ கரோதிப்ரபு:'' ( ) என்கிறபடியே, ராஜபுத்ர அபராதவத்தை தானே (மன்னனே) ஶிக்ஷிக்க வேணுமித்தனையொழிய, பிறர் சொல்லக்கூடாது என்னுமதுக் காக அப்படியருளிச் செய்தது. இது பொருளன்றின்கே அவனுக்கு உகப்பாம் என்னில், மந்த்ரத்திலும் அவன்தான் சொல்லுமிடங்களிலும், ஆழ்வார் முதலானார் அருளிச் செயல்களிலும், தேவதாந்தர ஸாதநாந்தர விஷயாந்தரங்கள் ஸவாஸமாக விட்டே பற்ற வேண்டும் என்று நியமிக்க நிமித்த மில்லையிறே.**

---

**விளக்கம்:**

இப்படிக் கூடாத சேராச்சேர்த்திகள் கூடினாலும், அவரை விட்டுக்கொடான் என்று இறைவனுடைய மகிமைகளைச் சொன்னதன்றி வேறில்லை. ''என்னடியார் இது செய்யார்'' என்று, என்னடியராகில் செய்யத் தகாத செயலைச் செய்வாரோ? என்று

அவர் அவரூபத்தை ஆய்ந்து, செய்தாரேல் நன்று செய்தார் என்று, பின்பு தன் ஸ்வரூபத்தை எம்பெருமான் சொன்னான் ஆகையாலே, செய்யாமை அவர்களுக்குச் ஸ்வரூபம்; செய்தாலும் விடாமை இறைவனுக்கு ஸ்வரூபம் என்றும் சொல்லுவதாகக் கருத்து.

''நன்று செய்தார்'' என்றது, பிறர் அவர்கள் மேல் குற்றஞ் சொல்லாதவாறு இறைவனான தன்னுடைய பக்ஷபாதத்தை வெளிப்படுத்தினானத்தனை (298) ''மன்னன் மகன் தவறிழைத்தால் அம் மன்னனே தண்டிக்க வேண்டுமேயல்லது பிறர் தண்டிக்கலாகாது'' என்றபடி, மன்னனது மகனுக்கு மன்னன் அளிக்கும் தண்டனையைப்போலே, தன்னடியார் செய்யுங் குற்றத்தை இறைவன் தானே தண்டிக்க வேண்டுமன்றி பிறர் அக்குற்றத்தைக் கூறக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு அருளிச் செய்தது. இது பொருளல்லவாகில் பாகவதர்கள் எக்குற்றத்தைச் செய்தாலும் அவனுக்கு (இறைவனுக்கு) உகப்பாகும் என்றால், திருமந்திரத்திலும் அவ்விறைவன் தான் சொல்லுமிடங்களிலும், ஆழ்வார் முதலானார் அருளிச் செயல்களிலும், பிற தேவர்களைத்தொழுதல் பிற உபாயங்களை மேற் கொள்ளுதல் ஐம்புலனில் ஈடுபாடு ஆகியவற்றை முழுவதும் விட்டே இறைவனைப் பற்ற வேண்டும் எனக் கூறத்தேவை யில்லையன்றோ?

---

**மூலம்:**

**இது என் ஜீயா மற்றொன்றைச் சொல்லாதே ஆழ்வாரை ஆப்த தமராகவும் அவரருளிச்செய்த திருவாய் மொழியே ப்ரமாணமாகவும் அருளிச் செய்யாநின்றீர். இதுக்குக் கருத்தென்? என்னில், (299) ''விஷ்ணோர் விஶேஷாதிஷ்டாநமய: பிண்டாக்நிவந்மதம்'' (   ) என்று, திவ்யாசித் விக்ரஹத்தைக் காட்டிலும், இவரை விஶேஷ அதிஷ்டாந மாகக் கொண்டு தப்தாய: பிண்டவத் ஸ்வரூபம் மிகவும் நிறம்பெற்று அங்குப்போலே லீலாலோல க்ருபா பாரதந்த்ர் யங்கள் கலந்திருக்கையன்றிக்கே, ''காருண்யாத் ஶாஸ்த்ர பாணிநா'' என்கிறபடியே, கேவல காருண்யத்தாலே ஶாஸ்த்ர பாணியாய்;**

**(தொடரும்)**

# மாறன் பாப்பாவினம்

இதழ் 169இன் தொடர்ச்சி. டாக்டர். அருட்கவி அரங்க சீனிவாசன்.

மலர்புரை - மலர்போன்ற. யாணர் - அழகு. மையுண் கண் - மை எழுதிய கண். மொய்யிழை - தோழி. உசாத் துணை - பேச்சுத் துணை. உள்ளத்து அருமறை - மனத்திலுள்ள இரகசியம். தமஎனும் - தமக்கு உரியனவாகிய. கருவிகள் - மனமுதலிய பொறிகள். அடங்காத - விழித்திருக்கின்ற. சாக்கிரம் - விழிப்புநிலை. அடங்கிய - விழித்திராத. சொற்பனம் - கனவுநிலை. சுழுத்தி - உறக்கநிலை. பராவல் - சஞ்சரித்தல். துன்னுநர் - காதலர்க்கு, உற்பவமாம் - தோன்றும்.

ததைதல் -செறிதல். விம்மிதன் - பூரித்தவன் வாழ்த்துபு -வாழ்த்தி. இளையர்இல் - பணியாளர் இல்லாத. யாமம் - இரவு.

இராகம் - செந்நிறம். கூண்டு - கூடிய. மழலை - மழலைச் சொல். மிழற்றும் - பேசுகின்ற. பவளம் - பவளம் போன்ற வாய். யாண்டு எய்தினை - எங்கே பெற்றாய்.)

வேரி - மணம். களபம் - சாந்து. மெழுகி - பூசி. தரளவடம் - முத்துமாலை. பாரித்த - அணிந்த. கொம்மை - வட்டம். ஞெமுங்க - நெருங்கும்படி. பூரித்து - உவந்து. நிற்கு - உனக்கு.

மருந்து ஈன்ற - அமுது பெற்றெடுத்த. மலர்மடந்தை - திருமகள். படிவம் - உருவம். ஈந்தவர் - கொடுத்தவர்.

கழுவா மணிக்கு - சாணையிடாத மாணிக்கத்தைக் காட்டிலும், கவினும் - அழகு செய்கின்ற. உறுப்பு அவயங்கள். துளக்கமது - ஒளி. உய்த்தார் - சேர்த்தவர். ஈரெழுபார் - பதினாறு உலகங்கள்.

இயற்கை உறுப்பின் - இயல்பிலேயே அழகான அவயவங்களில், அணிகள் - அணிகலங்கள். வேய்ந்தார் - அணந்தார்கள், முயற்சி மறைத்தருளும் மூடம் - முயற்சியால் மறைக்கின்ற அறியாமை. உயர்த்தி - மேன்மைப்படுத்தி. கட்டுரை - புனைந்துரை. பெயர்த்தும் - மீண்டும் மீண்டும்.

ஆராக்கவின் - தெவிட்டாத அழகு. ஒன்றி - பொருந்தி. துயில் - உறக்கம். தோள் அணை - தோளாகிய அணை. துயில் முகத்து - தூங்கும்போது. என்நீக்கம் - என்பிரிவு. போற்றுவார் - வளர்ப்பவர். மாட்டு - இடம். மறை - இரகசியம். அறைபோக - கெட்டழிய. மொழிவதும் ஒன்றோ - சொல்வதற்கு ஒன்றா இரண்டா? பிரிவது புரிபவர் - பிரிவினை விரும்பும் தலைவர். காமுறும் - விரும்பும். குமையினை - துன்பத்தை. உண்பதும் - அடைவதும். ஐயரி - அழகிய வரிகளையுடைய. ஒய்யென - விரைந்து.

உயிர் துறக்குமதுநீ உணர்த்துக என்று பொருள் முடிவு கொள்க. உலகியல் அறிந்தோர்க்குப் பேச்சுத் துணையாகிய மனத்தின் இரகசியங்களானவை புலன்கள் அடங்காத விழிப்பு நிலையிலே மனத்துக்குள் அடங்கியிருக்கும். அப்புலன்கள் அடங்கிய சொற்பனம் உறக்கம் ஆகிய நிலைகளில் உளத்தில் சென்று சஞ்சரித்தலும் உண்டாகும் என்பது உண்மையாகும்.

தலைவன் மெல்லணையில் விருப்பத்துடன் உவந்து என் முன்கையைப் பிடித்து, பணியாளர் இல்லாத இரவிலே.

என் குழலையும் ஒரு கையால் ஏந்திக் கொண்டு, ‘இவ்வளவு மென்மையும் இனிமையும் நிறமும் கமழ்தலை கூடிய மழலைச் சொல்லை மிழற்றுகின்ற பவளம் போன்ற இதழ்களை எங்கே பெற்றாய்?'' என்கின்றான்.

சாந்தம் பூசி முத்துமாலை அணிந்த வட்ட முலைகள் நெருங்கப் பலமுறையும் அழுந்தப் புணர்கின்ற மார்பினைப் பார்த்து உனக்கு யார் நிகர் என்கின்றான்.

அமுது தந்த திருமகளின் வடிவம் உனக்குத் தந்தவர் யார் என்கின்றான்.

சாணையிடாத மாணிக்கம் போன்று அழகுடைய நின் அவயவம். கண்டவர் (தெய்வப் பெண் என்று) மலர் தூவித் தொழுது ஆதரிக்கும்படி அந்த அவயவங்களை வழுவாமல் அமைத்து, அவற்றுக்கு ஒளியைத் தந்தவர்கள் ஏழுலகிலும் யார் என்கின்றான்.

உன் அவயவங்கள் இயற்கை அழகுடையன. அவற்றுக்கு அணிகலன்கள் அணிந்து, அந்த இயற்கை அழகினைத் தம் முயற்சியால் மறைக்கின்ற அறியாமை என்னே! என்று என்னை உயர்வு படுத்திப் பேசுகின்ற கட்டுரையால் மனம் ஒன்றாகும்படி மீண்டும் தழுவிய பின்பு.

இப்போது காணத் தெவிட்டாத அழகு இதனை என் என்று உணர்கின்றேன். உன்னை முதன்முதலில் பார்த்தபோது மனத்தொடு பொருந்தி அயர்வுற்றேன்! அம்மம்மா! என்கின்றான்.

இந்நிலையில் அவன் துயில் கலைந்தது. துணுக்கம் உற்று உணர்வு பெற்றவுடனே என் தோளாகிய அணையிலே துயில் கொண்டான். அந்தச் சிறு தூக்கத்திலும் 'இவளுக்கு என் பிரிவு என்ன துன்பம் செய்யுமோ' என்கின்றான்.

துயர் பொறுக்கும் ஆற்றலுடையவர் தம் மன வலிமைக்குப் பொருந்துவதான அந்தக் காமநோயினை வளர்ப்பவரிடம் என்புகழ் சேரும். பிரிகின்ற பழி என்பால் சேரும். அவ்வாறு ஆயின் நான் பிரிந்து செல்வதைக் கூறி இவளைத் தேற்றுவாய் மனமே என்று அவன் எண்ணுகின்ற இரகசியதைச் சிந்தித்து அறிந்து கொண்டேன்.

அவ்வாறு சிந்தித்து அறிந்தமையால் என் மனம் கெட்டழிந்தது. உடனே இந்தப் பசலையானது என் உடல் மாசுண்ணும்படி மறைத்துக் கொண்டது.

அடி தோழியே! பிரிவதற்கு எண்ணிய மனமுடைய தலைவனுக்கு யாது சொல்லித் தடுப்பேன்! என் உயிர்போல் பொருந்திய தோழியாகிய நின் உயிர் உணரும்படி சொல்வதற்கு ஒன்றா இரண்டா? பிரிவினை விரும்பு

பவருடனே விருப்பமுறும் என்மனம் துன்பத்தை உறுகின்றது. என் கண்கள் தூக்கத்தை மறக்கின்றன. விரைந்து நான் உயிர் துறப்பது உண்மை என்று உணர்ந்து தலைவருக்கு உணர்த்துவாயாக என்பது திரண்ட பொருள்.

*190.* முள்ளுடைத் தாள்தா மரைமலர் முன்னிய
பிள்ளைமை எய்தாப் பிதாமகன் ஆகிய
தெள்ளிய நான்முகத்து ஓதியும் தேர்வரும்
ஒள்ளிய நான்மறை ஓதாது உணர்வினுட்
கொள்பவ னாகிக் கொழித்த தமிழ்மறை
புள்ளுயர் கேதனத் தாற்குஅருள் பொன்மகிழ்த்தார்
வள்ளல் உயர்துடரி வாய்.

(இஃது ஏழடி பஃறொடை வெண்பா)

திருந்திய எண்ணெண் கலைகளும் தெற்றெனத்
தரும்பனு வலின்துறை சார்ந்துணர் கேள்வி
பொருந்திய பழிபிறங் காஅருட் புரவல!

(இது மூன்றடி நிலைமண்டில ஆசிரியப்பா)

நெய்த்தும் இருண்டும் சுருண்டும் நெறித்தனவாய்
மொய்த்தகுழல் கோதி முடிமுச்சி
வைத்தமுகை விண்டு மதுத்தூய்ச் சுவல்புரள்வது

உய்த்துஇங் கெழுதுவதொன்றோ!
இருட்பான்மை இன்றி இருதிணைஐம் பாலுட்
பொருட்பான்மை முற்றப் பொறிப்பவர்என் றாலும்
மருட்பார்வை மையுண் மதரரிக்கண்செப்பும்
அருட்பார்வை தீட்டுவதிங் கார்!

(இவை யிரண்டும் இன்னிசை வெண்பா)

காந்தள்இஃதெனும்இணைக் கரங்களை எழுதினும்
ஆய்ந்தணி வரிவளை அவைஉராய் ஒலிப்பதும்
தோய்ந்திட எழுதவும் துணிபவர் யாரே!

(இது மூன்றடி நிலைமண்டில ஆசிரியப்பா)

(தொடரும்)

# ஹரிதாஸரின்
# இருசமய விளக்கம்

*இதழ் 169இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**2ஆவது, சதுவிதப்புருடார்த்தப்பரிச்சேதம் தொடர்ச்சி.**

**11. சிறையூடி ருக்குமவர் தாமொருத்தர்**
**சிறைதீர்க் கொணாத செயல்போல்**
**மறைநாலி னுற்றபொரு ளானநீல**
**மணிவண்ண னன்றி யயசேர்**
**அறிவால் வணக்கமுயல் வாரைமுத்தி**
**அடைவிப்ப தல்ல வலைகொண்(டு)**
**எறிநீரு டுத்தபுவி யோர்மதித்த**
**இதிகாசம் ஓதி யிடுமால்.**

**இதன் பொருள்:** சிறையில் அகப்பட்டிருப்பவர் மற்றொருவனைச் சிறையின்றும் விடுவிக்கமாட்டார்கள். அதுபோல, வேதங்களாற் கூறப்பட்ட திருமாலாகிய இறைவனை விட்டு, அவ்விறைவனது மாயவலையில் அகப்பட்டிருக்கிற அன்னிய தெய்வங்களை வணங்கினால் அத்தெய்வங்கள் தம்மை வழிபட்டவர்களைப் பந்தத்திலிருந்து விடுவிக்கமாட்டார்கள்; என்று இதிகாசம் இயம்பியது.

**12. நலவார்பு ராணவர ரத்தினமோடு**
**நளினப் புராணம் நவிலும்**
**மலைமாம டந்தையொடு நீலகண்டன்**
**மறையோர் மகிபர் வணிகக்**
**குலசாத ரேனையவர் மாதரென்று**
**குணிதங்களான வரெலாம்**
**அலையாத முத்திஅரி யன்பிலன்றி**
**அடையார் களென்ப தறையும்.**

**இதன் பொருள்:** நீலகண்டனான சிவன், மலைமகளான பார்வதியை நோக்கி, 'அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், பெண்களும்,

மற்றவர்களும் அரியின் பக்தியால் அழிவற்ற முக்தியடைவார்கள். இந்த அரிபக்தியில்லாத போது இவர்கள் முக்தியடைய மாட்டார்கள் என்று உரைத்தனன். இந்த விவரத்தைப் பாத்மபுராணத்திலும் விஷ்ணு புராணத்திலும் விரிவாக உரைத்திருப்பதைக் காணலாம்.

**13. அறவர்க்கும் மாசிலவர் கட்குஞான**
**அதிகர்க்கும் புத்தி யடைவே**
**நிறைமுத்தி பெற்றவிபு தர்க்குவேறு**
**நிகரற்ற இன்ப மதெலாம்**
**செறிவிக்க வல்லபர வத்துநீடு**
**திருமேவு மார்ப னெனவே**
**குறைவற்ற செஞ்சொல்வி ரிகந்தமென்று**
**குலவும் புராண மொழியும்.**

**இதன் பொருள்:** துறவிகட்கும், குற்றமற்வர்கட்கும், ஞானத்தால் முக்தி பெற்றவர்கட்கும் ஒப்பற்ற இன்பத்தையளிக்க வல்லவன் அலர்மேல் மங்கை மார்பினனாகிய அரியே ஆவானென்று கந்தபுராணம் விரித்துரைத்தது.

**14. செனனங்க ளோடுமர ணங்களான**
**திரைவேலை மூழ்கி வறிதே**
**கனவின்நல் கூருமவர் தம்மைநீடு**
**கரையேற்று விக்கவலபேர்**
**எனையின்றி இல்லையென வாசுதேவன்**
**இரைகொண்டார் பார்த்த னுடனே**
**மனமொன்றி நின்றுவெளி யிட்டவாய்மை**
**வளமான கீதை சொலுமே.**

**இதன் பொருள்:** ஜனன மரணங்களாகிய கடலில்மூழ்கி வருந்துகின்றவர்களைக் கரையேற்றுவிக்க வல்லவன் 'என்னையன்றிப் பிறரொருவமுமில்லை' என்று வாசுதேவனான கண்ணன் மனமொன்றி நின்று பார்த்து அருளினான் என்ற விவரத்தைப் பகவத்கீதையிற் காணலாம்.

**15. தீதாதல் இன்றிவினை யாதல்செய்**
**துதிருமால் சமர்ப ணமெனும்**
**மேதாவி கட்குமொரு மூன்றுலோக**
**விசயங்க ளெய்து தமிலால்**

**மூதாண்மை கொண்டுபொரு வெங்களத்து**
**முறிவில்லை முத்தி யுளதென்(று)**
**ஆதார பூமிபதி யாம்வராகர்**
**அறையும் புராண மொழியும்.**

**இதன் பொருள்:** தீதின்றி நல்வினைகளைச் செய்து, எல்லாவற்றையும் திருமாலுக்குச் சமர்ப்பணம் செய்கின்ற சிறந்த ஒழுக்கமுடைய மேதாவிகள் மூன்று உலகங்களிலும் ஜயமுடையவர்களாய் விளங்குவர். இஃதல்லாமலும், இவர்கள் கொடிய போர்க்களத்தில் தோல்வியடைய மாட்டார்கள்; முக்திப் பேற்றையும் அடைவார்கள் என்று, வராக புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

16. **உவமான மற்றமறை யோதுதக்கன்**
**உயர்வேள்வி தன்னில் அரனால்**
**அவமான முற்றகுளிர் சோமனந்த**
**வரன்வேணி ஏறி யிடநீள்**
**தவமாத ரிக்கவர நல்கினானத்**
**ததிசேர்மு குந்த னெனவே.**
**நவைதீர்செ முஞ்சொன்மிகு நாரதீய**
**நலமேவு பாரில் நவிலும்.**

**இதன்பொருள்:** உவமானமில்லாத வேதத்தை ஓதாநின்ற தக்ஷன் செய்த வேள்வியில் சிவனால் அவமானமடைந்த சந்திரன், அவ் அரனுடைய செஞ்சடைமேலிருக்குமாறு தவஞ்செய்ய, அத்தவத்திற்கிரங்கி வரமளித்தவன் மாதவனாகிய திருமாலே, என்று நாரதீய புராணம் நவிலாநின்றது.

17. **ஆரோக்கி யத்தைவெயி லோனிடத்தும்**
**அகல்செல்வம் வன்னி யிடையும்**
**ஏரேற்ற ஞானம்வி டையோனித்தும்**
**எழில்முத்தி விண்டு விடையும்**
**சீரேற்ற பாரிலறி வுள்ளபேர்கள்**
**செறிகின்ற தென்ன தெளிவால்**
**பேராற்சி றந்தபொரு ளால்விளங்கு**
**பிரமப் புராணம் மொழியும்.**

**இதன் பொருள்:** ஆரோக்கியத்தை விரும்புகின்றவர்கள்

சூரியனிடத்திலும், செல்வத்தை விரும்புமவர் அக்கினி தேவன் பாலும், ஞானத்தைக் கோருகின்றவர் சிவனிடத்திலும், மோக்ஷத்தை நாடுகின்றவர்கள் முகுந்தனான திருமாலிடத்திலும் பெறுகின்றனர் என்று பொருட்செறிந்த பிரம்மபுராணம் புகலாநின்றது.

18. **நிருபன்பு ரக்குமுல கத்தைநேய**
**நிலைகொண்டு மைந்த ரையெலாம்'**
**தருதந்தை காக்குநர ரைப்புரிந்த**
**தருமம் பரிக்கு மவைபோல்**
**மருவுஞ்ச ராசரமெ லாம்வளர்த்து**
**வரமுத்தி நல்கும் அவனீ(டு)**
**அரியென்று விண்டுதரு மத்திலாய்ந்து(து)**
**அங்கறையும் மகிழ்ச்சி பெறவே.**

**இதன் பொருள்:** அரசன் உலகத்தைப் பரிபாலனஞ் செய்வான்; பெற்ற தந்தை மைந்தர்களைப் பாதுகாப்பான்; மக்களை அவர்கள் செய்த தருமம் பரிபாலனஞ் செய்யும்; அவைபோலச் சராசரப் பொருள்களையெல்லாம் பாதுகாத்து முக்திக்கொடுக்க வல்லவன் அரியே ஆவான் என்று விஷ்ணு தர்மம் விரித்துரைத்தது.

19. **தருமங்க ளோடதரு மங்களான**
**சலராசி தானு மிகவே**
**வருதுன்ப மானசுழி யுஞ்சிறந்த**
**மதியின்மை யான துறையும்**
**உரைதங்கு கோபவள றுங்கவற்றி**
**உறுலோப மான குமிழும்**
**மருளென்ற ஞானவக லப்பரப்பும்**
**மகரா மிடங்கர் வகையும்.**

**இதன் பொருள்:** தர்ம அதர்மங்களாகிய நீர்பெருக்கும் வருகின்ற துன்பமாகிய சுழியும், ஆராய்ச்சியின்மையாகிய துறையும், கோபமாகிய சேறும், லோபமாகிய குமிழும், மருளென்ற குழந்தைகளாகிய முதலை வகைகளும் ஆகிய இவை அனைத்தும் மாந்தருக்குத் துன்பத்தை விளைவிகின்றன.

(தொடரும்)

# திருவிருத்தத்தில் அகஇலக்கியக் கோட்பாடுகள்

இதழ் 169இன் தொடர்ச்சி. ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.

**'கற்பொடு புணர்ந்த கவ்வை' - தொடர்ச்சி:**

**''இனிய சொற்களை இயம்பி பாலூட்டி வளர்த்த என்னை விட்டுப் பிரிய அவள் மனம் எவ்வாறு இசைந்தோ! என் மகள் தான் காளையுடன் செல்லலைச் சில குறிப்புகளால் காட்டினள். ஆனால் என் பேதை மதி அவற்றை அறியாமற் போயிற்று. இஃது என் அறியாமையேயன்றோ!'' எனச் சொல்லிச் சொல்லிச் செவிலியின் மனம் பெரிதும் கவன்றது. தன் மகள் தன்னிடம் திரும்பி வர அவள் முருகக் கடவுளைத் துதித்தனள். பின்பு தலைவி காளையுடன் சென்றதைச் செவிலி நற்றாய்க்கு உணர்த்தினள்.**

**இச்செய்தி நற்றாயின் மனத்தைப் புண்படுத்திற்று. ஆதலின், ''இதை ஏன் முன்பே எனக்குத் தெரிவித்திருத்தல் கூடாது, அங்ஙனமாயின் தலைவியின் தந்தையை யான் மணந்தது போன்று அவ்வஞ்சியன்னாளும் மணம் பெற அவள் விருப்பத்தை முற்றுவித்திருப்பேனே. அஃதொழிந்து அவளை வீணே சுரத்தில் போக்கினையே'' என இன்னனைய சொற்கள் பல அவள் வாயிலிருந்து வெளிப் போந்தன. நற்றாயின் கண்ணீரும், வார்த்தைகளும் தோழியைப் பாலை நிலத்தீயைக் காட்டிலும் மிக்கு சுட்டன. ''சில் வளையணிந்த என் மகள் தாமரை மலரொக்கும் அடிநோவ வெவ்விய பாலை நிலத்தில் பாங்கியர் புலம்பப் பிரிந்து போயினளே! பத்து மாதம் சுமந்து மெய் வருந்திப் பெற்றும் துன்பமடைந்தேனே'' எனப் பாங்கி யிடமும், அயலாரிடமும் சொல்லிச் சொல்லி நற்றாய் புலம்பினள்.**

தலைவி கட்டிய சிற்றில்லையும், விளையாடிய வண்டலம் (வண்டல் - சேர். சேற்றாலமைத்த பாவை.), கந்துகங்களையும் (கந்துகம் - பந்து) பார்த்துப் பார்த்து நற்றாயின் மனங் கரைந்தது. அந்நிலை கண்டோர் நெஞ்சை உருக்கியது. அவள் ''இப்பதியில் உவகையில் ஊன்றி யிருக்கும் காகமே, என் மகள் என்னிடம் வருமாறு அழைத்திடுவையேல் இன்று உனக்குச் சோறு, தசை (மாமிசம்) முதலிய பலிகளை ஈந்ததைப்போன்று என்றும் ஈவேன். சூரியனே, சுருண்ட குழலையுடைய என் மகளுக்குப் பாலை நிலம் குளிர்ந்திருக்குமாறு நீ செய்ய வேண்டும். இளந்தன்மை யுடைய தோழியே, கரும்பினும் இனிய சொற்கள் வாய்ந்த என் மகள் என்னை விட்டுப் பிரிய நீ இரும்பனைய நெஞ்சம் வாய்ந்தது யாங்ஙனம்! மலரை மிதிப்பினும் பொறாத என் மகளின் பாதங்கள் பாலை நில வெம்மையைப் பொறுத்தல் எவ்வாறு! மிக்க இளமையுடைய என்மகளை அங்கே பாதுகாப்பார் யார்!'' எனப் பல விதமாய் இயம்பி துக்கித்தனள். அவள் துயரம் தோழிக்கு அச்சத்தை உண்டாக்கிற்று.

அணங்கு போன்ற தலைவியைத் தான் சென்று தேடிக் கொணர்வதாய் நற்றாய்க்கு ஆறுதல் பகர்ந்து, செவிலி புறப் பட்டனள். தேடச் சென்ற செவிலியின் கண்கள் வழியில் முக்கோலேந்திய அந்தணரைச் சந்தித்தன. தன் மகளைப்பற்றி அவர்களைக் கேட்டறிய விழைந்த அவள், ''அருந்தவ முனிவரே, வஞ்சிக்கொம்பன்ன ஒருத்தி ஒரு வீரன் பின் சென்றதைக் கண்டீரோ?'' என வினவினள். ''ஆம், யாங்கள் கண்டோம். இதைக் குறித்து நீ வருந்துதல் தகுதியுடைய தன்று. முத்தும் தான் பிறந்த சங்கை விட்டு, அணிபவரை அடைகின்றது. நீயும் உன் பெற்றோரை நீங்கி ஒரு தலைவனை அடைந்திருக்கின்றாய். அங்ஙனமே அவளும் ஒரு கொழுக்கொம்பை நாடிச் சென்றாள். இஃது உலகியற்கை. ஆதலின் நீ துன்புறுதலை ஒழிக'' என முனிவர் அவளை ஆற்றுவித்தனர். செவிலி மேலும் பாலையிற் செல்லும் போது அங்குச் சென்ற மறத்தியையும், அவண் நின்ற குராமரம் முதலிய வற்றையும் நோக்கித் தன் மகள்

வழிக் கொண்டதைப் பற்றி விசாரித்துக் கொண்டே சென்றாள். வழியில் இருவர் காற் சுவடும் காணப்பட்டன. அது செவிலிக்குப் பின்னும் துன்பத்தைத் தந்தது. ஓர் இளங் காதலியும், காதலனும் அவ்வழிச் சென்றனர். அவர்களைக் கண்ணுற்ற செவிலி, ''திருமகளும் திருமாலும் போன்ற இருவர் உங்களைப் போன்றே தனித்துச் சென்றனர். அவர்களை நீங்கள் கண்டதுண்டோ?'' என அக்காதலரை வினவினள். அவர்கள் ''ஆம், அவர்களை யாங்கள் கண்டோம். பாலைவனவெம்மை நீங்க அவர்கள் இதுகாறும் ஊர் அடைந்திருப்பார்கள், நீ வருந்தற்க'' எனக் கூறி அவள் ஆற்றாமையைத் தணித்தார்கள்.

'கற்பொடு புணர்ந்த கவ்வை' - துறை இலக்கணம்.

அஃதாவது, தலைவி தலைவனது உடைமையாய்க் கற்பொடு கூடியதனை அயலார் வினவ சேரியர் பலரும் அறிதல்.

*''செவிலி புலம்பல் நற்றாய் புலம்பல்*
*கவர்மனை மருட்சி கண்டோ ரிரக்கம்*
*செவிலிபின் றேடிச் சேறலென் றாங்குக்*
*கற்பொடு புணர்ந்த கவ்வையை வகைத்தே.'*
*(நம்பியகப்பொருள்)*

என்னுஞ் சூத்திர விதியால், கற்பொடு புணர்ந்த கவ்வை ஐவகைப்படும்.

துறை:-

**317. செவிலி பாங்கியை வினாதல்:**

புலம்புதலடைய மாதர் எங்கே தனியாய்ப் போயினாள், யான் அறியச் சொல்வாயாக என்றவாறு.

**318. பாங்கி செவிலிக்குணர்த்தல்:**

அன்னாய்! நின்பொலங்கொடி, நம் சுற்றத்தார் வெறுத்தார், அதன்றியும், ஒறுத்த சொல்லைச் சொல்லுதன்

மேலும், விழைதலின்றி அத் தலைவற்கு மணத்தை மறுத்தார். காட்டில் காளைபின் நடந்தனள், அழகிய கற்பினால் சுரத்தழல் தன்னைப் பொறுத்தாள் என்றவாறு.

**319. பாங்கியி னுணர்ந்த செவிலி தேற்றுவோர்க்கு எதிரழிந்து கூறல்:**

அறிவைப் பொருத்தித் துன்பமாவன கடிந்து என் முலையிலூறும் அமிழ்தத்தை யூட்டி, இனிய சொல்லைக் கூறி அரிதாய் வளர்த்ததற்கோ என் அழகிய வளையையுடையாள் என்னை விட்டு நீங்கியது என்றவாறு.

**320. செவிலி தன் அறிவின்மை தன்னை நொந்துரைத்தல்:**

செவிலி தன் அறிவின்மை தன்னை நொந்து உரைத்தல் என்பது, தலைவி போதற்குத் தன் குறிப்பினால் அறிவித்த தன்மையை அறிந்திலேன் என்று தன் அறிவின்மை தன்னை நொந்து கூறல்.

**321. செவிலி தெய்வம் வாழ்த்தல்**

இப்புவனத்து நட்புக் கூடுதற்கு எவரும் இல்லாத என் இளங்கொடிபோல்வாள் வாடிப் பாலைவனத்துப் போதலை யொழிய, என்னிடத்து வர, உன்னை அன்பாற் பலமுறை வணங்கித் துதிக்கின்றேனே; வரின் நினக்குச் சிறப்புச் செய்வேன் என்றவாறு.

**322. செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்:**

செவிலி நற்றாய்க்கு அறத்தொடுநிற்றல் என்பது செவிலி நற்றாய்க்கு உடன்போக்கை வெளிப்படுத்திக் கூறல்.

**323. நற்றாய் பாங்கியொடு புலம்பல்:**

சுரம்போவதற்கு முன்னமே இதனை மொழிந்தனை யாகின் நுந்தந்தை முற்காலத்தில் என்னை மணஞ்செய்தது போலப் பின்னுதல் பொருந்திய குழலையுடையாள் மணம் பெறுவாளே, இச்செய்தியை என்னுடன் சொல்லாமல் மகளை வீணே சுரத்திற் போக்கினையே என்றவாறு. (தொடரும்)

# திருவேங்கடவன் உலா

**ஆசிரியர்: தி.பொ. பழனியப்ப பிள்ளை.(பதிப்பாசிரியர்-1950ஆம் ஆண்டு திருவேங்கடவன் கீழ்க்கலை ஆராய்ச்சிக்கழகம் பதிப்பித்த நூலில் அமைந்துள்ள குறிப்புகள்.) இதழ் 169இன் தொடர்ச்சி.**

**118. யஞ்சனவெற் பாக்கவே யாரப் புழுகொழுக்கி**
**மஞ்சரியுஞ் சின்ன மலர்தூவிச் - செஞ்சுடரின்**

பச்சைக் கற்பூரத் தேய்வையும், புழுகுத் திருக்காப்பும் முறையே வெண்மை நிறமும், கருமை நிறமும் தோற்றுவித்தலால் வெள்ளி வெற்பு. அஞ்சன வெற்பு என இரு வண்ணமாக உரைத்தார். திருவேங்கடக் கலம்பகம்.

**“நலமணி மலைபா நிலவுபோர்த் தென்ன**
**வாலிதிற் கருப்புர மேலணிந் தந்த**
**வியன்மலை கமஞ்சூற் புயல்படிந் தாங்குப்**
**புழுகொழு கப்புனை யழகிய வடிவோய்”** என

இவ்வாறு உரைப்பதும் காண்க.

மஞ்சரி - பூங்கொத்து. சின்னம் - அடையாளம். செஞ்சுடர் - சிவந்த கதிர்கள்.

**119. பன்னிரண்டு சூரியரும் பானுகுலத் தேபிறந்தாற்**
**கென்னசெயத் தக்கோ மெனவெண்ணிப் - பொன்னின்**

பன்னிரண்டு சூரியர் - மேஷம் முதலிய பன்னிரண்டு இராசிகளிற் செல்லும் பன்னிரண்டு சூரியர்கள். பானுகுலத்தோன் - சூரிய குலத்துப் பிறந்த சீராகவன்.

**120. கிரணாவலி தொகுத்த கேண்மையென மின்னத்**
**தருணாருண மகுடஞ் சாத்தி - யிரணியவில்**

கிரணாவலி - கதிர் வரிசை. கேண்மை - நட்பு. தருணாருணமகுடம் - பக்குவமான சிவந்த பொற் கிரீடம். இரணிய வில் - பொன்னாற் செய்த வில்.

**121. லம்புடனே வந்ததென வம்மவுலிச் சூரியர்கள்**
**லிம்பமெனக் கோறம்ப மேற்கட்டி - யும்ப**

மவுலி - மகுடம். விம்பம் - பிம்பம். கோறம்பு - நெற்றி அணியுள் ஒன்று: பெரியாழ்வார் திருமொழி - "நெற்றிமேற் றிருத்திய கோறம்புந் திருக்குழலும்" 3.4.6. பார்க்க. உம்பர் - மேல்.

**122. ருலகளந்த காலத் துடுப்படிந்த தென்னத்**
**திலகமணி விம்பந் திருத்திக் - கலைகுறைந்த**

உடு - நட்சத்திரங்கள். திலகம் - பொட்டு. கலை - ஒளி. ஈசன் சடைப்பிறை - சிவன் சடையில் ஒரு கலைப்பிறை. முன் சுட்டியது வானில் உள்ள முந்நாட் பிறை எனக் கொள்க.

**123. தண்பிறையு மீசன் சடைப்பிறையு நாணவே**
**வெண்பிறைநா மத்தை விதானித்துப் - பண்புமறை**

வெள்ளிய பிறைவடிவுள்ள திருநாமத்தை (ஊர்த்துவ புண்டரம்) விதானித்து - மேல் இட்டு. மறை - வேதம்.

**124. யெத்தோடு மாழ்வா ரிசையிருந்த பண்டாரத்**
**தத்தோடு முத்தோ டலங்கரித்துச் - சித்ரமதி**

எத்து - போற்று (ஏத்து). ஆழ்வார் இசை - நம்மாழ்வாரின் திருவாய்மொழிப்பண். பண்டாரம் - சரக்கறை. ஈண்டுத் திருவேங்கட முடையான் திருச்செவிகள். "ஆழ்வார்கள் செந்தமிழை யாதரித்த வேங்கடம்" எனத் திவ்யகவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அருளியதும் காண்க. அத்தோடு முத்தொடு - தோட்டினை முத்துக்களோடு.

**125. மண்டலத்தைக் கீறி வருமுபய பானுவெனக்**
**குண்டலத்தின் காந்திக் கொழுந்தோடக் - கண்ட**

மதி மண்டலத்தைக் கீறி வரும் உபயபானு - சந்திர மண்டலத்தைப் பிளந்து வெளிப்படும் இரு சூரியர்கள். இங்குத் திருமுக மண்டலத்தில் திருச்செவியில் இலகும் இரு குண்டலங்களுக்கு அபூத உவமை. காந்திக் கொழுந்து -

ஒளியின் கதிர்கள். கண்டம் - கழுத்து. உலகு மூன்று - மேல் கீழ் நடு உலகங்கள்.

**126. மொருதானே மூன்றுலகு முண்பதற்குக் காட்டும்**
**விருதாந் திருச்சரத்தை வீக்கி - யருணவெயில்**

விருது - வெற்றிக் குறி. திருச்சரம் - கண்டசரம் என்னும் பொற்பணி. வீக்கி - கட்டி. அருணம் - சிவப்பு.

**127. சேகு புரி குண்டலமாஞ் செங்கதிரை வெற்பிலும்பாய்**
**போகியென வாகு புரிகாந்த - மாகும்ப**

சேகு - திண்மை. குண்டலமாஞ் செங்கதிர் - சூரியன்: உருவகம். வெற்பு - மலை. போகி - பாம்பு. இங்குச் சூரியனைப் பற்ற வரும் இராகு ஆகிய பாம்பு. வாகுபுரி - தோள்வளை என்ற அணி. காந்த - விளங்க.

**128. வெங்கதமா தங்க விடங்கமணிக் கிம்புரிபோ**
**லங்கதமா தங்க வணிபொங்கத் - தங்களிலே**

வெங்கதம் - கொடுஞ்சினம். மாதங்கம் - யானை. விடங்க மணி - உளியாற் செதுக்குறாத முத்து மணி. கிம்புரி போல் - கொம்புப்பூண் போல். அங்கதம் - தோள்வளை. மாதங்க அணி - சிறந்த பொற்பணி. பொங்க - பொலிய.

**129. நங்கணங்க ணாதனென்று நாகரெலா மீன்றமணிக்**
**கங்கணங்க ணின்று கதிர்வீசச் - சங்கநிலாச்**

நங்கள் நங்கள் நாதன் என்று. நாகர் - நாக வமிசங்கள். மணிக்கங்கணம் - இரத்தினக் கைக் காப்புகள். கதிர் - ஒளி.

**130. சக்கரத்தின் வெய்யிற் சமராடு மார்பிலே**
**புக்கிருந்தா ளூசல் புகுந்தாட - மிக்கநறைக்**

சங்க நிலா - திருச்சங்கப் படையின் குளிர் ஒளி. சக்கரத்தின் வெய்யில் - திருச்சக்கரப் படையின் வெவ்விய ஒளி. இவ் வேறுபட்ட ஒளி தம்மிற் பொருதல் செயயும் மார்பம் என்றார், வலப்பாலும் இடப்பாலும் இவையிருந்து ஒளி செய்தலின்.

புக்கிருந்தாள் - திருமகள். திருவேங்கட முடையான் திருமார்பில் வாழும் திருமகள் தனிப்பாவை வடிவாய் அமர்ந்து ஆடுதலின் இவ்வாறு வெய்யில் நிலவுகளில் ஊசல் ஆடுதலாகச் சிறப்பித்தார். நறை - தேன்.

**131. தண்டுழாய் மாலை தழுவுநீ லக்கோவை**
**வண்டுழா நின்று வணப்பெய்த - வண்டங்க**

குளிர்ந்த துளசி மாலை, நீல மணிவடம், இவற்றில் வண்டுகள் உழுதலைச் செய்தலின் அழகு உண்டாக. அண்டங்கள் - உலகங்கள்.

**132. ளுள்ளிருந்த விம்பமென வொண்மழைக்குள் ளாலியெனத்**
**தெள்ளியமுத் தாரத் திரணெருங்க - வள்ளற்**

விம்பம் - வடிவம். ஆலி - ஆலங்கட்டி. திருமேனி முத்தாரங்கள் திருவயிற்றுள் உள்ள அண்டங்களின் வடிவம் போலவும், கரிய மேகத்துள் ஆலங்கட்டிகள் போலவும் தோற்றம் தரும் சிறப்பினைக் கூறியது. அள்ளல் - சேறு.

**133. கருங்கடலின் பத்திக் கனகநவ ரத்நத்**
**தரங்கமெனப் பல்பதக்கஞ் சாத்தி - யருங்கலச.**

பக்தி - வரிசை. கனகம் - பொன். நவரத்தினங்களை வீசி விளங்கும் அலைகளைப் போலப் பல மணிப்பதக்கங்கள் அணிந்து. கலசம் - கும்பம்.

**134. வட்டமுலை தாங்குதிரு வந்திருக்க மார்பிலே**
**யிட்டமணிப் பீட மெனவிளங்கச் - சிட்ட**

மணிப்பீடம் - நீலமணி யாசனம். சிட்டர் - சாமுத்திரிகர்.

**135. ரிலக்கணத்தி லேந்துமறு விந்திரைதன் கொங்கை**
**மலைக்கணியுங் கத்தூரி மானக் - குலைத்துளவும்**

மறு - ஸ்ரீவத்ஸம். இந்திரை - திருமகள். களப கத்தூரி கருநிறத்ததாதலின் திருமார்பின் மறு அதனை ஒப்ப என்றார். மான - ஒப்ப. குலத்தளவு - சிறந்த துளசி. (தொடரும்)

# கற்கோயில்கள் (கற்றளிகள்)
# பல்லவர் - பாண்டியர் காலக் கோயில்கள்

இதழ் 169இன் தொடர்ச்சி. ஆசிரியர்: கே.ஆர். சீனிவாசன்.

**சோமநாதபுரம் கேசவர் கோயில் அமைப்பின் தொடர்ச்சி.**

நட்சத்திரம் போன்ற வரைபட அமைப்பில் உருவாக் கப்பட்டுள்ள, உபபீடம் ஒன்றின் மீது முழு அமைப்பும் உள்ளது. அதேபோல, அடியிலிருந்து உச்சி வரையிலும் மூன்று விமானங்களும் மண்டபங்களும் நட்சத்திர வடிவில் அமைந்துள்ளன. உபபீடத்தில் அகலமான சுற்று நடைபாதை ஒன்றும் அமைந்துள்ளது. இவையனைத்தையும் சுற்றி அமைந் துள்ள திறந்த வெளியின் ஓரத்தில் பிராகாரத்தின் உட்புறமாக அறுபத்து நான்கு கருவறைகள் அமைந்துள்ளன. பிரகாரத் திற்கு அணுக்கமாக உள்ள நன்கு மூடப்பட்ட பின்புற அரைப்பகுதியில் கருவறைகள் வரிசையாக அமைக்கப் பட்டுள்ளன. அவற்றின் முன்பு அரைப்பகுதி தூண்களாலான நடைபாதையாக அமைந்துள்ளது. கோயிலின் முன்பக்கத்தில் தூண்களையுடைய நுழைவாயில் மண்டபம் ஒன்றுள்ளது. அம்மண்டபத்தின் மீது கோபுர அமைப்பிலான மேற்கட்டு மானம் ஒன்று இருந்திருக்க வேண்டும்.

அதிஷ்டான வார்ப்புக்களின் ஒப்பனைப் பட்டையில் மனிதர்கள், வீரர்கள், யானைகள், குதிரைகள், ஹம்சங்கள், மீன்கள் ஆகியன பகட்டாகச் செதுக்கப்பட்டுள்ளன. உச்சித் தளத்தில் இராமாயண பாகவத நிகழ்ச்சிகள், கதையுரை கோவை வரிசைகளாகச் செதுக்கப்பட்டுள்ளன. சுவர்களின் மாடங்களில் கடவுளர்களின் கம்பீரம் மிக்க சிற்பங்கள், செதுக்கப்பட்டு உள்ளன. மண்டபங்களின் உட்புறத்தேயுள்ள தூண்கள் யாவும் நன்கு கடையப்பட்டு எழிலாகச் செதுக்கப்பட்ட வார்ப்புருவங்களைப் பெற்றுள்ளன. நவரங்கம், உட்புறமுள்ள மண்டபங் கள், வெளிப்பக்கத்திலுள்ள புகுமுக மண்டபம் ஆகியவற்றின்

மேற்கூரையிலுள்ள உட்குழிவான கண்ணறைகள் தலைகீழாக வைக்கப்பட்ட கூடைபோலத் தோற்றமளிக்குமாறு அமைக்கப் பட்டு, அவற்றில், இலை, செடி, மலர், பாம்பு ஆகிய பல்வேறு வகைகளில் விரிவான சிற்பங்களும் திக்பாலர்களின் சிறு அளவுச் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. ஆயினும், மிகவும் வியப்பூட்டும் கூறுஎன்னவெனில் எந்த இரண்டு மேற்கூரையும் ஒன்று போல மற்றொன்று இருக்குமாறு அமைக்கப்பட வில்லை. அளவில் பெரியதான நடுவிலுள்ள மேற்கூரையே, மிகவும் கருத்துடன் உருவாக்கப்பட்டதாகும்.

**விஜயநகர மன்னர்கள் காலக்கோயில்கள்:**

தென்னிந்தியாவில் முகம்மதியர் படையெடுப்பின் தொடக்கத்தில், தென்னிந்தியாவில் அதுவரையிலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த கோயில் கட்டு மானப்பணியில் பின்னடைவு ஏற்பட்டு, ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்காலம் வரையிலும் மந்தமான போக்குக்காணப் பட்டது. முகம்மதியர் படையெடுப்பினைத் தடுத்து நிறுத்த வேண்டி கி.பி. 14ஆம் நூற்றாண்டின் இடைகாலப்பகுதியில் தலையெடுத்த விஜய நகரப் பேரரசின் எழுச்சி, (காலவளர்ச்சியில், தென்னிந்தியத் தீபகற்பம் முழுவதையும் இப்பேரரசு சூழ்ந்து வளைத்தது) கோயில்களைப் புதுப்பித் தல், ஏற்கெனவே இருப்பவற்றை விரிவுபடுத்தல், புதிய கோயில்களைக் கட்டுதல் ஆகிய கோயில்கட்டுமானப் பணிகளுக்கு மிகப்பெரிய உந்துதலைத் தந்தது. விஜயநகரம் அல்லது ஹம்பியைத் தலைநகராகக் கொண்ட அந்தப் பேரரசினர், முன்னமே பிற்காலச் சாளுக்கியர், காகதீயர், ஹொய்சாளர் மரபினரும், தென்பகுதியில் பிற்காலப் பாண்டியரும் உருவாக்கியிருந்த கோயில் கட்டுமானப் பணியை அப்படியே பின்பற்றலாயினர்.

எனவே அவர்களுடைய அரசாட்சியின் வடபகுதியான தக்காணம், ஆந்திரம், கர்நாடகம் பகுதிகளில் தேன்றிய கோயில்கள் பெரும்பாலும் சாளுக்கிய, ஹொய்சாள, காகதீய மரபினைப் பின்பற்றியதாக அமைந்தன. அதுபோல, தென்பகுதியான தமிழ்நாட்டிலும் தெற்குக் கேரளத்திலும் பல்லவர் - சோழர்- பாண்டியர் கட்டட மரபையே விஜய

நகரப்பேரரசின் கோயில்கள் பின்பற்றின. ஆனால், முன்னமே கூறியபடி, வடக்குப் பகுதியைப் பொறுத்தவரையிலும் அவர்கள் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றத்தைச் செய்தனர்.

ஆட்சிப்பகுதி முழுவதிலும் கடினமான பாறை மரபை அவர்கள் தழுவி, மிகுந்த செல்வாக்குடன் அந்நாள் வரை பரவியிருந்த மென்மையான பாறைகட்டுமானப்பணியை விட்டொழிந்தனர். தற்போது சிதைந்துபோய் இடிபாடுகளுக் கிடையேயுள்ள மிகப்பெரிய அவர்களின் தலைநகரமான ஹம்பியில், அனைத்தும் கடினப்பாறையில் வடிவமைக்கப் பட்ட எண்ணற்ற கோயில்கள் உள்ளன. அவையாவும், சாளுக்கிய - ராஷ்டிரகூட - ஹொய்சாள - காகதீய வரிசைகள், பல்லவ - சோழ - பாண்டிய வரிசைகள் ஆகிய இரண்டு மூலங்களில் ஒன்றைத் தழுவியதாகவே உள்ளன. அடுத்தடுத்து அமைந்த அவர்களின் தலைநகரங்களான பெனுகொண்டா (அனந்தப் பூர் மாவட்டம்), சந்திரகிரி (சித்தூர் மாவட்டம்). வேலூர் (வட ஆர்க்காடு மாவட்டம்) ஆகியனவும், அவர்களின் சுற்றுப்புற இடங்கள், மாகாணத் தலைநகர்கள் அல்லது அவர்களின் அரசப் பிரதிநிகளான நாயக்கர்கள் இருந்த வேலூர் (வட ஆர்க்காடு), செஞ்சி, (தென்னார்க்காடு) தஞ்சாவூர், மதுரை, இக்கேரி (ஷிமோகா மாவட்டம்) ஆகிய இடங்களிலும் அக்காலக் கோயில்கள் காணப்படுகின்றன. ஒரு வகையில் சோழர்கள் அரசாட்சிக் காலத்தில் இருந்ததை விடவும், விஜயநகரப் பேரரசு காலத்தில், கோயில்கட்டும் பணி மிகத் தீவிரமாக நடை பெற்றது எனலாம். மிகப்பெரிய அளவில் கோயில் கூறுகள் கட்டப்பட்டதற்கு விஜயநகரப் பேரரசு கோயில்கள் பெயர் பெற்றவை. சான்றாக, அவர்களின் கோயில்கள் மிகப்பெரிய மண்டபங்களையும் கோபுரங்களையும் கொண்டவை.

விஜயநகரப் பேரரசர்கள் தங்களின் தாய்வீடான விஜய நகரப் பகுதிகளிலும், தமது ஆட்சியின் வடக்குப் பகுதிக ளிலும், கட்டிடக்கட்டுமானம், கோயில் கட்டுமானம், சிற்பம் செதுக்குதல் ஆகிய பணிகள் அனைத்திற்கும் அதுவரையிலும் வழக்கில் இருந்த மென்மையான கல் மரபை விடுத்து கடினமான கல்மரபைத் தேர்வு செய்தது குறிப்பிடத்தக்க பணியாகும். தெளிவாக வரையறுத்த புதிய தடத்தை இது குறித்தது. புதிய

மூலப் பொருளைப்பற்றிய சிந்தனையைக் கட்டிய வரைபடக் கலைஞர்களும் சிற்பிகளும் கட்டடக் கலைஞர்களும் பெற்றனர். அவர்களை மிகச் சிறந்த முறையில் செயலாற்றச் செய்து, விஜயநகரப்பேரரசின் புதிய சகாப்தத்தின் குறிக்கோளையும் மேதைப் பண்பையும் கருத்தில்கொண்டு கோயில்களின் எண்ணிக்கையிலும் தரத்திலும் சிற்பிகளைக் கவனஞ் செலுத்திடச் செய்தது. அடர்த்தி மிக்க பல சுவர்களையுடைய காப்பு மதிலரண் களைக் கொண்ட மிகப்பெரிய கட்டடப்பணி, பெரிய கதவுகள் உள்ளிட்ட புதிய தலைநகரில் அவர்கள் செய்த பிற பாதுகாப்புப் பணிகள், இன்று துங்கபத்திரா நதிக்கரையில், அடர்த்தியான மிகப் பெரிய கருங்கள் பாறைக்குன்றுகளின் நடுவே, அன்று ஏற்கெனவே இந்த ஸ்ரீவிருபாட்சர் கோயில் அல்லது பம்பாநதி கோயில் பகுதியைச் சுற்றிமுள்ள புகழ்பெற்ற 'ஹம்பி இடிபாடுகள்' என்பதாக எஞ்சியுள்ளன. உள்ளூரிலுள்ள குன்றுகளிலிருந்து எடுக்கப்பட்ட கடினமான கற்களிலிருந்து ஊரில் உள்ளும் புறமும் உள்ள கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. 'விஜயநகர்' அல்லது 'வெற்றித்திருநகர்' என்னும் பெயருடைய இந்தப் புதிய தலைநகரம், துங்கபத்ரா நதியின் குறுக்கே வலப்பக்கக் கூரையில் அமைந்துள்ளது. பழைய தலைநகரமான ஆனங்குந்தி, நதியின் இடப்பக்கக் கரையில் உள்ளது. இத்தலைநகரால் இந்தப் பேரரசு விஜயநகரப் பேரரசு என்று பெயர்பெற்றது.

புதிய தலைநகரிலும், அந்நகரைச் சுற்றியுள்ள இடங் களில் கற்கோயில் கட்டுமானப் பணிகளுக்கிருந்த தேவை யும், ஹம்பியிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமிருந்த துளைக்க முடியாத பாறைகளில் பணிபுரியத் தேவையான உத்திகளின் அவசியமும், தென்பகுதியில் பல நூற்றாண்டுகளாகக் கடினப்பாறையில் பணிபுரிந்த மரபின் செயற்பாட்டுத் திறனாலும், சிலகாலமாகவே கடினப்பாறை சிற்பக்கலையை வழக்கில் கொண்டு வந்திருந்த வடபகுதி திறமையாலும் நிறைவேறியிருக்கலாம்.' விஜயநகரச் சிற்பிகளுக்கு இவை உதவியிருக்கக்கூடும். படையெடுப்பு களாலும், அரசியல் எழுச்சிகளாலும் தடைப்பட்டிருந்த பணிகள், மீண்டும் உத்வேகம் பெற்ற தொடக்ககாலச் சாதனைகள் குறிப்பிட்டுச் சொல்லும் சிறப்பு வாய்ந்தவை.

(தொடரும்)

# பன்னிரு பாட்டியலும் ஆழ்வார்கள் அருளிச் செய்த அந்தாதி மற்றும் மடல் இலக்கியங்களுக்கான இலக்கணங்களும்

இதழ் 169இன் தொடர்ச்சி. ஆசிரியர்: திரு. ம.பெ.சீனிவாசன்.

**ஆசிரிய யாப்பினாற் பெயர் பெற்ற முதல் நூல்:**

பக்தி இலக்கியங்களில் ஆசிரியயாப்பினாற் பாடப் பெற்று, பாடப்பெற்ற யாப்பினாலேயே பெயர் பெற்ற முதல் நூலாக நம்மாழ்வாரின் ‘திருவாசிரியம்’ திகழ்கின்றது. சைவத்தில் பதினொராந் திருமுறையில், திருவாலவாயுடையாரின் திருமுகப் பாசுரம், நக்கீரரின் பெருந்தேவபாணி ஆகியன யாப்படிப் படையில் பெயர் பெறவில்லை என்பது குறிக்கத் தக்கது. எட்டாம் திருமுறையில் உள்ள மாணிக்கவாசகரின் ‘கீர்த்தித் திருவகவல்’, ‘போற்றித்திருவகவல்’ முதலியன (திருவாசகம் 2,4) ஆசிரிய யாப்பாற் பெயர் பெற்றவையே. ஆயினும் கால அடிப்படையில் நோக்கின் அவை நம்மாழ்வாரின் திருவாசிரியத்துக்குப் பின்னர்த் தோன்றியவை ஆகும்.

**‘திருவாசிரியம்’ அமைப்பு**

நம்மாழ்வாரின் திருவாசிரியம் திவ்வியப் பிரபந்தத் தில் மூன்றாவது ஆயிரமான இயற்பாவில் ஆறாவது பிரபந்தமாக இடம் பெறுகின்றது. இஃது ஒன்பது முதல் பதினாறு அடிவரையுள்ள ஆசிரியப்பாக்களால் ஆனது. அந்தாதி அமைப்புடையது. 1,2,3,4 ஆகிய நான்கு பாடல்களும் எல்லா அடியும் அளவடியாய் வந்த நிலை மண்டில ஆசிரியப்பாக்கள். 5-ஆம் பாடலும், 7-ஆம் பாடலும் நேரிசை யாசிரியப்பாக்கள். 6ஆம் பாடலின் ஐந்தாமடி சிந்தடியாகி, ஈற்றயலடி உட்பட ஏனைய யாவும் குட்டம்படாது நெடிலடியாகி வந்தன. எனினும் இடையே ஓரடி சிந்தடியாக வந்ததால், அப்பாட்டு இணைக்குறள் ஆசிரியமாகும். இவையனைத்தும் ஏகாரத்திலேயே முடிகின்றன.

'எறிகடல் நடுவுள்அறிதுயில் கொள்ளும்' இறைவனது அருட்கோலம் முதற்பாட்டில் சித்திரிக்கப்படுகிறது. 'அவன் திறத்துக் கொள்ளும் பக்தியே இனிது' என்பது இரண்டாம் பாட்டில் கூறப்படுகிறது. அந்தப் பக்திக்கு எல்லை அவன் தொடங்கி அவனது அடியார் அளவும் செல்கையே' என்னும் கருத்து மூன்றாம் பாட்டில் சொல்லப்படுகிறது. 'ஊழிதோறு ஊழி ஓவாது வாழி' என்று அவன் திருவடிக்குப் பல்லாண்டு பாடும் விருப்பம் நான்காம் பாட்டில் வெளியிடப்படுகிறது. 'மங்களாசாசனத்துக்கு இறைவனையன்றி மற்றையோர் உரியர் ஆகார்' என்பது ஐந்தாம் பாட்டில் இடம் பெறுகின்றது. 'எம்பெருமானை எண்ணாத உலகோரது இழிவைப் பொறுக்க மாட்டாமல் ஆழ்வார் கொண்ட வருத்தம்' ஆறாம்பாட்டில் காணப்படுகின்றது. 'உலகோரைப் போலன்றி இறைவன் திறத்துத் தமக்குண்டான ஊற்றத்தை எண்ணி, ஆழ்வார் கொண்ட மகிழ்ச்சி' ஏழாம் பாட்டில் இடம் பெறுகின்றது. இப்படித் திருமால் வழிபாட்டில் ஆழ்வார் கொண்டிருந்த ஈடுபாட்டையும் உறுதிப்பாட்டையும் விளக்குகின்றன இப்பாடல்கள். இவற்றை இறைவன் அருட்குணங்களில் பெற்ற இன்பக் கிளர்ச்சியின் விளைவாகக் கருதுவர் அறிஞர்.

அந்தாதி அமைப்புடைய இப்பாக்கள் மண்டலித்து வரவில்லை. நம்மாழ்வார் தாம் பாடிய ஏனைய மூன்று பிரபந் தங்களையும் 'மண்டல அந்தாதி'களாகவே பாடியிருக்கிறார். ஆதலின் திருவாசிரியமும் மண்டலித்து வருமாறேபாடப் பட்டிருக்க வேண்டும் எனவும் அங்ஙனம் பாடிய பாடல் கிடைக்கப்பெறவில்லை எனவும் சிலர் கருதுவர். இக்கருத்தி னைத் தீபிகை உரையாசிரியரான பி.ப.அண்ணங்கராசார்யர் ஏற்கவில்லை. அதற்கு அவர் கூறும் காரணம் பொருத்தமாகவே தோன்றுகிறது. (இப்பிரபந்தம் (திருவாசிரியம்) மண்டலித்த லாகாது என்று சொல்லலாமத்தனையொழி பாசுரங்கள் லோபித்தன என்றல் பொருந்தமாட்டாது'' என்பது அவர் கூற்று.)

### அமைப்பில்ஒற்றுமை, பெயரில் வேற்றுமை

பதினொராந் திருமுறையில் உள்ள, 'திருவொற்றியூர் ஒருபாஒருபஃது' என்னும் நூல் திருவாசிரியம் போன்ற அமைப்பினை உடையதாகும். அதில் உள்ள பத்துப் பாடல்

களும் ஆசிரியப்பாக்கள்; அவையும் அந்தாதித்து வருமாறே பாடப்பட்டுள்ளன. பாடல் எண்ணிக்கையிலும் பெயரிலும் வேற்றுமையே தவிரப் பாடலின் புறக்கட்டமைப்பில் எந்த வேற்றுமையும் இல்லை. ‘ஆசிரியம்’ என்னும் ஒரே யாப்பிலமைந்த இரண்டு நூல்களுள் ஒன்று ‘திருவாசிரியம்’ எனவும், மற்றொன்று, ‘ஒருபா ஒருபஃது’ எனவும் பெயர் பெறுகின்றன. ஒன்று யாப்பினால் மட்டுமே பெயர் பெற, மற்றொன்று தலம் (திருவொற்றியூர்) பாவகை (ஆசிரியப்பா என்னும் ஒரே பாவகை) பாடல் எண்ணிக்கை (பத்து) பற்றி வேறு பெயர் பெறுகின்றது. ஒரே யாப்பிலமைந்த நூல்களை வேறுபடுத்திக் காட்டும் நோக்கில் இப்பெயர்கள் அமைந்ததாகக் கருதலாம்.

### விருத்தம்

பாவினங்கள் அடியாக இலக்கியங்கள் வகைப்படுத் தப்பட்டதையும் பக்தி இலக்கியங்கள் காட்டுகின்றன. பாவினங்களுள் ஒன்றான விருத்த யாப்பும் இலக்கிய வகைக்குரிய பெயராவதைத் திவ்வியப்பிரபந்தத்தில் உள்ள திருச்சந் தவிருத்தம், திருவிருத்தம் ஆகியவற்றால் அறியலாம். சைவத்தில் பதினொராந்திருமுறையில் உள்ள, ‘கோயில் திருப்பண்ணியர் விருத்தம்’, ‘ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்’ போன்றவை இவ்வகையின.

### திவ்வியப்பிரபந்தத்தில் விருத்தம்

திவ்வியப்பிரபந்தத்தில் பாவினம் அடியாகப் பெயர் பெற்ற இரண்டு நூல்கள் உள்ளன. ஒன்று, திருமழிசையாழ் வாரின் ‘திருச்சந்தவிருத்தம்’; மற்றொன்று நம்மாழ்வாரின் ‘திருவிருத்தம்’, இவையிரண்டும் முறையே கலிவிருத்தம், கட்டளைக்கலித்துறை ஆகிய பாவினங்களால் ஆனவை.

### திருச்சந்தவிருத்தம்

திவ்வியப்பிரபந்தத்தில் முதலாயிரத்தில் ஆறாவது பிரபந்தமாக உள்ளது திருச்சந்தவிருத்தம்; விருத்த யாப்பில் இனியசந்தத்துடன் திகழும் பாடல்களைக் கொண்ட நூலாதலின், ‘திரு’ என்னும் அடையும் சேர இது, ‘திருச்சந்த விருத்தம்’

எனப்பட்டது. இதனை, 'சாத்திரங்களின் சாரம்' என வைணவர்கள் போற்றிக் கூறுவர்.

**யாப்பு - இருவேறு கருத்துகள்**

இந்நூல் யாப்பு அடிப்படையில் பெயர் பெற்றது என்பதில் அனைவர்க்கும் உடன்பாடு உண்டு. ஆயினும் இந்நூலில் இடம்பெறும் விருத்தம் (ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி முதலிய நான்கு பாக்களில்) எவ்வகைப் பாவினத்தைச் சேர்ந்தது என்பது ஆய்வுக்குரியது.

இதிலுள்ள பாக்கள் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் எனவும், அவ்வகைப் பாவினத்தால் ஆகிய இந்நூல் 'விருத்தம்' என்னும் பொதுப்பெயராற் குறிக்கப்பட்ட தெனவும் பி.ப. அண்ணங்கராசார்யர் கூறுவர். மேலும் அவர், ''..... கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம், ஆசிரிய விருத்தம் என்றாற் போலத் தனியே சந்தவிருத்தமென்று ஒன்று கிடையாது; இனிய ஓசையால் அமைந்த விருத்தமே சந்த விருத்தமெனப்படும். ஆசிரிய விருத்தத்தால் அமையும் மற்ற பாசுரங்களினும் இத்திவ்வியப் பிரபந்தப் பாசுரங்கள் இனிய ஓசையை உடையனவாயிருத்தலால், இதனைச் சந்தவிருத்தம் என்பது தகும்'' என்கிறார். அவரது விளக்கத்தால் இரண்டு கருத்துகள் பெறப்படுகின்றன. 1. திருச்சந்தவிருத்த யாப்பு-எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்னும் பாவினம் ஆகும். 2. இனிய ஓசையுடைமை பற்றி அது சந்தவிருத்தம் எனப்பட்டது. இவற்றுள் இரண்டாம் கருத்து அனைவர்க்கும் ஏற்புடையதே யாகும். ஆயினும் யாப்புப் பற்றிய முதற் கருத்தில்தான் திவ்வியப்பிரபந்தப் பதிப்பாசிரியர்கள் வேறுபடுகின்றனர்.

பி. கிருஷ்ணமாசார்யர், சே. கிருஷ்ணமாசார்யர், ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், டி.சி. பார்த்தசாரதி அய்யங்கார், கா. கோபாலாசார்யர், கா.வெ. திருக்கச்சிநம்பிதாஸர், கோமடம் எஸ்.எஸ். ஐயங்கார், ஆகியோர் திருச்சந்தவிருத்தப் பாசுரங்களை எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகவே கொண்டனர். திரு நாராயணபுரம் கோவிந்தராஜ ஐயங்கார், மயிலை மாதவதாஸன் போன்றோர் கலிவிருத்தமாகக் கொண்டனர். மர்ரே ராஜம் பதிப்பில் இதுபற்றிய குறிப்பே இல்லை. (தொடரும்)

Sri:

# Managerial Ability of Sri Ramanuja in Retrospection

### Lecture Delivered at the Academy of Sanskrit Research at Melkote on 12.5.2013 by Sri Vaishnava Sri A. Krishnamachari. Editor 'Panchajanyam'.

**Continued from Issue No. 169.**

**He would meet the members of the following groups everyday around 10am.**

1. Those people who were in charge of the guarding the holy city of Sriranga known as 'pAadi kaappaan' and 'thalaiyaaris'

2. Those people who undertake maintenance and repair work of the streets where Lord Ranganatha goes on a procession. They were known as 'Thiruveedhi seppaniduvaar'.

3. There was a separate force known as 'Thirumanjana vazhi thiruthuvaar'. Their duty was to clean the daily pathway by cutting the extra growth of the branches of the trees and removing the thorns on the pathway.

4. There were (are) numerous sub-temples inside the Srirangam temple complex. There was a separate PWD (Public Works Department) unit to take care of the repairs on a regular basis.

5. Gold smiths were appointed to make different types of ornaments and carry out repairs as and when needed. Smiths were also engaged in making ready the metal vessels needed for daily Araadhana.

6. There were permanent labourers who used to attend to the repairs of the Gopuras, sculptures, and murals.

7. Dancing girls and the teacher to train them was another group of people engaged in the service of Lord.

The holy prasadam in plenty was offered for all the worshippers and the kainkaryaparas were allowed to take more prasadam and it was referred by the name as 'Swanthanthiram' which means 'the legal eligibility of that individual for having done the service'. Ramanuja also introduced a system known as 'Vittavan Vizhukkaadu' i.e. a larger quantity of prasadam for having created that endowment. The surplus cloth received at the Sripandaaram was distributed to the kainkaryaparas on different occasions. Thus, the basic needs of any person known as food, shelter, and clothing were taken care by Ramanuja. Only in 20th century, we talk high of Maslow's hierarchy of needs, a western touch to Ramanuja's thoughts. The grocery merchants known as 'Chetti vyabaarigaL' and those who supply large quantity of milk and ghee would meet Ramanuja after ascertaining the quantity to be supplied from the members of Sripandaara vaariyam. It was a daily routine for Ramanuja to meet them and ascertain from them whether they received payment for the previous supplies. This act of Sri Ramanuja resulted in maximum customer satisfaction. In today's management, customer feedback and customer satisfaction are the vital elements to ascertain the success of marketing.

**Innovation is a part of managereial function**

Sri Ramanuja devised a novel system by which the 'maattu theevanam' (Fodder for cows) was mixed with sugarcane juice which resulted in higher quantity of Sweet milk. (Recently, a scientist from Anand Dairy farm from Gujarat was in Srirangam to purchase some books from us. While interacting with him, I understood that he received a doctorate degree for some research on cow feed and yield. One such finding was that the cow's yield and quality of the milk substantially improves when the feed is mixed with sugarcane juice. Then I pointed out to him that Sri Ramanuja used to offer cow feed mixed with sugarcane juice as referred in Ramanujaarya Divya

Charitha. He really wondered and said he owes his doctorate degree to Sri Ramanuja). Such was the novelty in the management by Sri Ramanuja.

Development and/or introduction of new ideas, new ways of doing things and new products is known as innovation in management parlance. Without innovation, there is no productivity and without productivity, there is no economic growth. Hence, innovation is the first step for economic growth. Sri Ramanuja was not a mere ascetic devoting his entire life-time in writing commentaries on Vedanta. He was a down to earth man with all compassion for humanity. Even though many people lived and wrote several granthas, none can be equated with Ramanuja as he was the greatest manager who played vital different roles like a Vedanti, a social reformer, an administrator and above all a great leader. A manager in any institution earns laurels not based on his ability to carry on with the people and execute the functions as per the wishes of the top management. The manager as an individual should have some knowledge also in allied fields like music, medicine, self-defence and above all humour.

Sri Ramanuja used to go around Sripandaaram where hundreds of cows were kept and fed properly with nutritious fodder in the Goshala  A veterinary doctor was also appointed to take care of their health. Ramanuja used to touch each and every cow while going around the Goshala. His knowledge on medicine was such that he could identify a cow inflicted with some disease by mere touch. He would advise then the veterinary doctor who was accompanying to check the cow for any illness. Since a quantum of milk would fall below the expectation by removal of inflicted cows, he used to replace a cow from another bigger Goshala which was functioning on the North-east corner of Srirangam. In order to make up the minimum number of cows to be kept in the north-eastern side Goshala, cows from Chozhaganallur a village near ThiruveLLarai were moved. Thus, Ramanuja ensured a perfect fall-back arrangement which is vital in managing any institution.

It was his daily routine to meet the various musicians well trained in flute, veena, yAzh, mugaveena, kinnari and dance masters. He would discuss and advise them to recite selected ragas when the Lord is in procession. The safety room known as 'karuvoolam' where valuable jewels and clothes were kept would then be visited by Sri Ramanuja. He would carry out periodical inventory of the items. A top manager's function is to go around his place of work whether it is his office or factory or an educational institution. Then only he would come to know the ground reality. Mere reports submitted to him would not reflect the real status. Ramanuja would carry out surprise checks at various places especially where jewels, ornaments, gold coins and other valuables were kept. Ramanuja was well aware of this management principle and put it to practice with perfection.

Money is not the only motivating factor. Even though a person is interested in getting money as motivation to do any job it is not the ultimate. Every individual after his or her basic needs are satisfied wants recognition and satisfaction of the individuals esteem needs (recognition of the individual's ability) . This cannot be achieved by money alone. A word of praise before others recognizing the services of that individual to the growth of the organization and honouring the individual before the public and listening to their voice or concern are also considered as motivating factors. While going around the temple treasury he would reach the granary where the labourers would be cleaning the paddy and store them in the huge warehouses ( these warehouses could be seen even today and in each warehouse thousands of 'kalam's of paddy (Kalam is a measure consisting approximately 50 kg of paddy) while loading the paddy manually the labourers would be singing some folk songs (Naadodi Paadalgal). It was a daily routine of Ramanuja that he would stand and listen to the chorus music of the labourers. When the labourers knew that a great personality like Ramanuja listen to their music, their joy knew no bound. This was the greatest motivating factor which enabled them to do the work with more perfection and speed.

In today's managerial style of functioning the managers are advised to interact with labourers by listening to their voice of concern or expression of their extra curricular activities. This what exactly Ramanuja did some 950 years ago. By listening to their folk songs Ramanuja did not derive any new Vedantic principle as he derived from the Acharyas. However he stood and listened to their vocal music just to recognize their talents. In an organization every individual's contribution is important and no manager can afford to ignore it. In running the temple administration the top manager has to pay his attention towards each and every individual connected with the temple administration, and Ramanuja knew this golden principle and put into practice. He would then meet the tailors of the temple and discuss with them the various designs of the cloth to be worn by the Lord in procession. He would ensure that the vahanas were polished and kept in good condition. While proceeding to the temple kitchen known as Thirumadaippalli he would be listening to the various type of music as practiced by the singers, dance masters, and others. At the Thirumadaippalli he would request the kainkaryaparas known as 'Pangayar Chelvi Koottathar,' to prepare the prasadams with utmost care and Athma Suddhi (with pure devotion to Lord) Different types of rice were offered to Lord in a day at different times. They were known as 'Thiruvarangan ' paddy, 'Sambha' paddy, 'SeerArsennel,' 'Senjaali' paddy, etc ( today we name different types of paddy and call them Ponni, IR 8, IR 20, etc. In Ramanuja's time they were known as in the above names which possess different qualities.

## Right Man for Right Job

The process of identifying the right man for the right job and improving the knowledge and skill to shoulder higher responsibilities in future is one of the responsibilities of an accredited manager. How Ramanuja implemented this development management theory during his lifetime had to be understood. Nominating Sri ParasaraBhattar, to succeed the Acharya Peetam, Instructing

Ananthazhwan and others to receive their spiritual knowledge at the feet of Arulaalapperumaal Emperumaanar and making them as Sishyas of him.

Knowledge on public administration which includes temple administration and reforms, study of the existing activities, wherever needed apply course corrections to achieve the desired goals are all well known managerial abilities of Ramanuja. Task group is known as a group of individuals who are working as a unit to complete the activities. It needs close supervision, review of the techniques adapted, modifying certain instructions. Ramanuja applied this theory and achieved maximum results.

**Knowledge Management**

The subject of knowledge management is viewed, by many, as an additional or an independent management tool, and a subject of interest to management students and practising business executives. However, this subject is largely of great importance to everybody. No activity, whatsover, can be carried out without suitably managing all the facets of the relevant, associated knowledge. Knowledge management is the key-action-ingredient that provides the required driving force for all activities whether personal, professional or corporate. In personal life, one has to manage only a limited number of activities, and hence, could manage the necessary knowledge with ease. Only those people who properly manage the relevant knowledge would succeed in their efforts and not others.

Knowledge management has already made a humble beginning as one of the subjects of study for management students in a few management education institutions. It is sincerely hoped that it would soon find its due place in all disciplines of basic and applied sciences, engineering and in all other educational and professional discipline whereas Sri Ramanuja with his knowledge management implemented successfully the assimilation of knowledge and distribution of knowledge in a scientific manner.

A classic example of Sri Ramanuja's knowledge management is his commentary on Brahma Sutras. For the same Brahma Sutras Sri Ramanuja wrote one elaborate commentary known as Sri Bhashya. As it was a lengthy description beyond the comprehension of persons with average intelligence. He wrote 2 more commentaries known as "Vedantha Deepa" and "Vedanthasara". Persons with average knowledge of the sastras, can also understand the basic concept of the Brahma Sutras. His concern for knowledge management resulted in the above. All activity executions are governed by some form of knowledge or the other. If any activity has to yield expected good results, it has to be carried out with a proper understanding of the knowledge governing the same, and the activity path has to follow the method and sequences derived from the governing knowledge. Knowledge management principles were evolved as the society learned different ways of activity execution discipline.

It is an universally accepted truth and a well-recognized fact that Knowledge is the supreme power on earth and acts as a very useful and an indispensable tool in the hands of mankind, whether it is for personal life, professional life, social life or corporate life or religious activity. Knowledge plays a key role in shaping all facets of life. A judicious and a diligent application of knowledge is all that is needed for this purpose. Our sacred Vedic literature exemplarily describes this unique feature of knowledge in just three words 'Nahi Jnanena Sadrusham'. It conveys that knowledge is supreme and has no comparison.

The word knowledge carries many meanings and connotations. The process of learning leads to an understanding. The understanding, in turn, leads to some interpretation about things, phenomena, observations, data, etc. Knowledge does not have any boundaries, either space or time, and that the process of knowledge growth is evergreen and eternal.Any activity that uses different facets of knowledge to generate a useful output, whether tangible or intangible, could be described as the process of knowledge management.

Sri Ramanuja is revered as a great leader in the religious and social fields. Leadership skills have now been universally recognised as a key ingredient- some would say **THE** key ingredient - in management.

**Conclusion:**

People often debate the difference and similarities of leadership and management. But the majority of practical people are interested primarily in what they have to do, and not whether it should be labelled ‘leadership’ or ‘management’ or both. Why it is that one person rather than another emerges, or is accepted, as a leader? What is leadership? Leadership is defined as an attempt to use noncoercive types of influence to motivate individuals to accomplish some goal. One’s traits, such as courage or tenacity, tend to make people leaders in all circumstances. They are natural or born leaders. A leader needs enthusiasm, integrity, toughness, fairness, warmth, humility, confidence, the authority of knowledge (authority flows to the one who knows), the authority of personality (in its extreme form, charisma) and moral authority (personal authority to ask others to make sacrifices). Ramanuja had dignity, integrity charm and above all integrated Managerial skills. (Concluded) ***

**Bibliography:**


1. "The Impact of Ramanuja's Teaching on Life and Conditions in Society". G.Lakshamma - 1990, 2. "Middle Chola Temples", Rajaraja I to Kulottunga I by S.R. Balasubbrahmanyam - 1975, 3. 'Impact of Sri Ramanuja on Temple Worship", by Sarojini Jagannathan - 1994, 4. "Ramanujarya Dhivya Charithai" in Tamil by Pillailokam Jeeyar, 5. Team Management by Roger Stewart - 2006, 6. Develop your Leadership Skills by John Adair - 2010, 7. Fundamentals of Management by Robert N. Lussier - 2010, 8. Knowledge Management by H.C.Mruthyunjaya - 2011, 9. Melukote Through the Ages by A.S.R. Melukote -1998, 10. Koil Ozhugu 18 volumes authored by Sri Vaishnava Sri A. Krishnamachari - 2005 to 2011 A.D. ***

# பதினாறாம் நூற்றாண்டு வைணவ புராண இலக்கியம்

ஆசிரியர்: மு. அருணாசலம்.

ஆறாம் நூற்றாண்டு தொடங்கித் தமிழ்மொழியில் திருமாலையே பரம்பொருளாய்க் கொண்டு போற்றும் நூல்கள் எழத்தலைப்பட்டன; அக்காலப் பகுதியில் முதல் முதலாய் முதலாழ்வார் மூவர் பாடிய மூன்று அந்தாதிகளும் தோன்றின. பின்னர் 8ஆம் நூற்றாண்டில் திருமங்கையாழ்வார் வரையில், நாலாயிரப் பாசுரங்கள் தோன்றி, தமிழில் வைணவ நெறியைத் தனிப்பெரு நெறியாக அமைத்தன. 9ஆம் நூற்றாண்டில் பிறந்த நாதமுனிகள் தொடங்கி கி.பி.1137இல் பரமபதித்த இராமானுசர் வரையில் வைணவ ஆசார்ய பரம்பரை தோன்றி வளர்ந்தது. இந்த நெறி ஆழ்வார் பாடல்களைப் போலத் தமிழில் கால்கொள்ளாமல், வடமொழியையும் ஆதாரமாக வைத்து நூல் செய்தது; தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாளம் என்ற புதிய உரை நடையை, சமய வ்யாக்யான நூல்களுக்காகத் தோற்றுவித்துக் கொண்டது. இந்த நிலை ஓரளவுக்கு 16ஆம் நூற்றாண்டு வரையில் தொடர்ந்து வந்தது. 9, 16ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட இந்தக்காலப் பகுதியில் நூல் எழுதிய வைணவப் பெரியோர் சிறந்த தமிழ்ப்புலமை பெற்றிருந்துங் கூட, சாத்திர வ்யாக்யானம், மணிப்பிரவாள உரைநடை நூல் மட்டுமே எழுதினர். இலக்கியத் துறைக்கு வரவில்லை. இக் கருத்துக்கு விலக்காகச் சிறு தோத்திர சாத்திரச் செய்யுள் நூல்கள் பல செய்த வேதாந்த தேசிகரையும் தோத்திர நூல் செய்த மணவாள மாமுனிகளையும் குறிப்பிடலாம்.

16ஆம் நூற்றாண்டுக்கு வரும்போதுதான் இந்த நிலைமை மாறுகிறது. முந்திய நூற்றாண்டுகளில் சைவ சமயத்தில் எழுந்த சமய இலக்கிய வெள்ளம் எல்லோரையும்

சமய நெறியில் ஈடுபடுத்தியது. அதன் பயனாக, வைணவ மக்களையும் அவ்வெள்ளம் ஈர்த்துச் சென்றபோது, வைணவ சமூகம் சற்றே புதிய உணர்வு பெற்று விழித்துக் கொண்டது. சைவ சமயத்தில் சென்ற நூற்றாண்டுகளில் எழுந்த சமயப் பேரிலக்கியங்கள் (சாத்திரங்களல்ல) கந்தபுராணம், உபதேச காண்டங்கள், திருவாதவூரடிகள் புராணம், அருணகிரி நாதரின் முருகன் புகழ்ப் பாக்கள் என்பன. இவற்றால் எழுந்த அலைகள் கரை கடந்து மோதியபோது, அம்மோதல் வைணவரையும் தாக்கிற்று. விழித்துக் கொண்டவர்களில் பெரும் புலவர் பலரும் தோன்றினார்கள். தோன்றியவர்கள், முன்னோ பின்னோ வேறு எக்காலத்திலும் இல்லாதவாறு 16ஆம் நூற்றாண்டில் வைணவச் சார்பாகப் பெருநூல்கள் செய்தார்கள். பாகவதம் - வடமொழியில் பாகவதப் பெருநூல் கள் ஏழு என்று சொல்வார்கள். இவற்றை அருளாளதாசர் பாகவதம் முதல் பாகப்பதிப்பில் (1913) கோவிந்தப்பிள்ளை எழுதியிருக்கக் காணலாம். அவ்வேழினுள் முதல் இரண்டும் பெருநூல்களாய்த் தமிழில் செய்யப்பட்டுள்ளன. முதலாவ தாக இதிகாச பாகவதம்: தமிழில் செவ்வைச்சூடுவார் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் செய்தார். இதன் பாடல் தொகை 4973, இரண்டாவது புராண பாகவதம்: வரதராஜ ஐயங்கார் என்னும் நெல்லிநகர் அருளாளதாசர் செய்தார். இதன் பாடல் தொகை 9147. மற்றவை மொழிபெயர்க்கப் பெறவில்லை.

இனி, இக்காலத்தில் முதன் முதலாக வைணவத்தில் தல புராணங்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன. பொதுவாக வைணவத்தில் தலபுராணங்கள் மிகவும் குறைவு. இந்த நூற்றாண்டில் வாழ்ந்து பல இலக்கண நூல் செய்த புலவராகிய திருக்குருகைப்பெருமாள் கவிராயர் திருக் குருகைக்கு ஒரு தல புராணம் செய்தார். அது 3030 பாடல் கொண்ட விரிவான புராணம். அதனுள் அவர் திருக்குருகை யின் தலமான்மியத்தையும் நம்மாழ்வார் வரலாற்றையும் விரித்துக் கூறுகிறார். இதுவன்றி, கூடற்புராணம் என்ற பெயரில் செய்யப் பெற்ற கூடல் அழகர் கோயில் பற்றிய

தல புராணமும் இக்காலத்தே செய்யப்பட்ட தென்று கருதுகிறோம்.

இவை அல்லாமல், சமய உணர்ச்சியினால் விளைந்த போட்டி உணர்வில் இக்காலத்தே ஒரு பெருநூல் தோன்றியது; அது இரு சமய விளக்கம் என்ற பெயர் உடையது. அரிதாசர் என்ற புலவர் சைவம் வைணவம் என்ற இரண்டு சமயங்களையும் விளக்குவதாகச் சொல்லி இப்படி ஒரு பெருநூல் செய்தார். இதன் பாடல் தொகை 2139. பெயர் இப்படி அமைந்த போதிலுங்கூட, இது வைணவ சமயத்திற்கு ஏற்றம் கற்பிக்கவென்றே எழுந்திருக்கிறது.

இவ்வத்தியாயத்தினுள் மேற்கூறியவற்றை - இரு பாகவத புராணங்களையும் இரு தல புராணங்களையும் ஒரு விளக்கத்தையும் ஆராய்வோம்.

வைணவத்தில் தலபுராணங்கள் அதிகமாய்த் தோன்ற வில்லை. சைவத்தில் தல புராணங்கள் நூற்றுக்கணத்தில் உள்ளன. இலக்கிய வரலாறு முழுமையிலும் வைணவத்தில் ஒரு பத்துத் தலபுராணந் தானும் காண்பது அருமை. பழைய தலபுராணங்கள் என்று சொல்லத் தக்கவை திருக்குருகை மான்மியம், கூடற்புராணம், திருவேங்கடத் தலபுராணம், கோலாசல புராணம் போன்ற சிலவே, தலபுராணங்கள் இல்லாத குறையை உணர்ந்து, 19-20 நூற்றாண்டுகளில் புலவர் பலர் புதிய புராணங்கள் எழுதத் தலைப்பட்டனர். இராமானுசருக்குப் பின் வைணவத்தில் புதிய எழுச்சி தோன்றியது. தனிக்கோயில்களும் எழுந்தன. எனினும், இவை நூற்றுக்கணக்கில் இருந்து வருகின்றன. இக்காலத்தில் வைணவர் தங்கள் கூட்டத்தைப் பெருக்குவதிலும், ஆலயங் களை அமைப்பதிலும் வழிபாட்டை நெறிப்படுத்துவதிலும், சாத்திரங்களை விளக்குவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத் தினார்கள். தலங்களின் பெருமையை எண்ணாமல், நாலா யிரத்தின் பெருமையையும் சாத்திரங்கள் வ்யாக்யானங்களின் பெருமையுமே பேணி வந்தார்கள்.

இந்த நிலையில் கந்தபுராணம் போன்ற பேரிதிகாசங்கள் சைவ மரபில் தோன்றவும் கண்டார்கள். கந்த புராணம் தோன்றிய நிலையையும் நாம் யூகித்தல் கூடும். கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசார்யர் தமது பக்திப் பெருக்காலும் அன்பர் வேண்டுகோளாலும் முருகன் கதையை இப்பெருங்காப்பியமாகப் பாடினார் என்பது வரலாறு. உண்மை. ஆனால் இதன் எழுச்சிக்கும் ஒரு காரணம் உண்டு. பேரிதிகாசங்கள் இரண்டு - இராமாயணமும் மகாபாரதமும். இவை தமிழில் கம்பராமாயணமாகவும் வில்லிபாரதமாகவும் உருக்கொண்டன. இரண்டிலும் பேசப்படுபவை திருமாலின் அவதாரங்களான இராமன் கதையும் கண்ணன் கதையும். ஆனால் கம்பரும் வில்லியும் தங்கள் நூல்களைச் சமய நூல்களாகப் பாடாமல், இதிகாசங்களாக பெருங்காவியங்களாகவே பாடினார்கள் என்பது அவர்களுக்குரிய சிறப்பு. இந்த நூல்களை உணர்ந்த சைவ மக்களிடையே,சைவ சமயத்திலும் இப்படியொரு பெருங்காவியம் வேண்டும் என்ற உணர்வு உதித்தது. இவ்வுணர்வின் வடிவமே கந்தபுராணம். திருமால் அவதாரம்போல முருகன் அவதாரத்தை இது பற்றிப் போற்றிப் பாடுகிறது. பாடியவர் சிவாசார்யர் ஆனமையால், அவர் இதை வெறும் காவியமாகப் பாடாமல், சமய காவியமாகப் பாடி வைத்தார். பாடியவர் கௌமாரம் என்பது போன்ற பெயரைத் தம் நூலுக்கு வைக்காமல், புராணம் என்று பெயர் வைத்தார். (வில்லியும் கச்சியப்பரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள்.)

இது நிகழ்ந்தது சுமார் 1400க்குச் சற்று முன்னாக இருக்கலாம். நாளடைவில் வைணவத்திலும் இப்படி புராணம் வேண்டுமென்ற கருத்து உருக்கொண்டது. அதன் விளைவாக எழுந்தனவே, நூறாண்டு கழித்து, 16ஆம் நுற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய இரு பாகவத புராணங்களும். பாடினோர் இருவரும், தாங்கள் சொல்லாவிட்டாலும் கூட, கந்தபுராணம் ஒத்த பெருங்காவியமாகப் பாட வேண்டுமென்று எண்ணியே பாடியிருக்கிறார்கள். சைவ வைணவப் போட்டியைக் கதையாகச் சொல்லி, வைணவத்துக்கு ஏற்றம் சொல்லும் இரு சமய விளக்கம் தோன்றவும் இவ்வுணர்வே காரணமாயிருந்தது.

(தொடரும்)

# ‘‘நாதயாமுநமத்யமாம்’’

காட்டுமன்னார்கோயில் குப்பங்குழி என்றழைக்கப்படும் சதுர்வேதிமங்கலம் ஸ்ரீமந்நாதமுனிகள், ஸ்ரீஆளவந்தார், அவதார திருமாளிகையில் 25.6.2013 செவ்வாய்க்கிழமையன்று பாஞ்சஜன் யம் ஆசிரியர் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர் ‘‘நாதயாமுந மத்யமாம்’’ என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் எழுத்து வடிவம்.

*‘‘நமோ(அ)சிந்த்யாத்$_3$பு$_4$தாக்லிஷ்ட ஜ்ஞாநவைராக்$_3$ய ராஶயே|*
*நாத$_2$ாய முநயே(அ)க$_3$ாத$_4$ப$_4$க$_3$வத்$_3$ப$_4$க்திஸிந்த$_4$வே ||’’*
(ஸ்தோத்ரரத்னம் 1)

(இப்படிப்பட்டதென்று நினைக்கமுடியாததும் ஆச்சர்யமான தும், (பகவானுடைய அருளாலே) எளிதாகக் கிடைத்ததுமான ஞானத் தினுடையவும், வைராக்யத்தினுடையவும் குவியல் போன்றவ ராகவும், பகவானை மனனம் செய்பவராகவும், ஆழ்ந்த பகவத் பக்திக்குக் கடலாகவுமிருக்கிற நாதமுனிகளுக்கு நமஸ்காரம் செய்கிறேன்.)

*‘‘யத்பத$_3$ாம்பே$_4$ாருஹத்$_4$யாந வித்$_4$வஸ்தாஶேஷகல்மஷ:|*
*வஸ்துதாமுபயாதோ(அ)ஹம் யாமுநேயம் நமாமி தம் ||’’*
*(கீதாபாஷ்யமங்கள ச்லோகம்)*

(எவருடைய திருவடித்தாமரைகளை தியானிப்பதால் எல்லாக் குற்றமும் நீங்கப்பெற்று யான் ஒரு பொருளாக ஆனேனோ, அத்தகைய யமுனைத் துறைவரை வணங்குகிறேன்.)

‘‘குருபரம்பரை அநுஸந்தானத்தையொழிந்த த்வயாநுஸந் தானமும் தேவதாந்தர பஜநந்தோடு ஒக்கும்’’ என்று முதலியாண் டான் அருளிச் செய்வாராக வார்த்தாமாலையில் (136) குறிப்பிடப் பட்டுள்ளது. வாக்ய குருபரம்பரை, ச்லோக குருபரம்பரை என்று ஒரே விஷயம் பற்றிய ஒரு வாக்யக் கோவையையும் ஒரு ச்லோகத் தையும் நாம் நமது ஆசார்யனிடம் உபதேசமாகப் பெறுகிறோம். இவற்றுள் வாக்யகுரு பரம்பரை 13 வாக்யங்கள் கொண்டது.

''குருரேவ பரம்ப்ரஹ்ம'' என்று சாஸ்த்ரங்கள் குருவை எம்பெருமாளோடொக்கக் கொண்டாடுகின்றன. 'கு' என்னும் அக்ஷரம் அந்தகாரம் - இருள்- என்று பொருள்படும். இவ்விருளைப் போக்குபவன் 'ரு' என்ற எழுத்திற்குப் பொருளாவான். நமக்கு அறியாதன அறிவித்து அஜ்ஞானமாகிற இருளைப் போக்கும் ஆசாரியனை 'குரு' என்னும் சொல் குறிப்பிடும். ஸம்ஸார நிவர்த்தகமான (இவ்வுலக வாழ்வியலில் எதிர்கொள்ளும் துன்பங்களை விலக்கக்கூடியதான) பெரிய திருமந்த்ரத்தை உபதேசித்து ''நாராயண பரோஜ்யோதி:'' என்கிறபடி ஸ்ரீமந்நாராயணனான பரஞ்சுடரைக் கண்டு களிக்கச் செய்பவன் ஆசாரியன். அப்படிப்பட்ட மஹோபகாரகனான ஆசாரியனையும், அவருக்கு ஆசாரியனான பரமாசாரியரையும், அவருக்கும் மேலுள்ள பெரியபெருமாள் வரையிலுள்ள எல்லா ஆசாரியர்களையும் நாம் அநவரதம் (இடைவிடாமல்) த்யாநத்துக்கு (சிந்தனைக்கு) விஷயமாக கொள்ள வேண்டியது அவசியம். இதனால் வாக்ய குருபரம்பரையும் ச்லோக குருபரம்பரையும் நமக்கு நித்யம் அநுஸந்திக்க வேண்டியவை களாகின்றன.

**''லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்ப$_4$ாம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் |**
**அஸ்மத$_3$ாசார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ||''** - என்று ஸ்ரீமந்நாராயணனை முன்னாகவும் தமது ஆசார்யரான எம்பெருமானாரை ஈறாகவும் அமைத்து குருபரம்பரையை ஒரு ஹாரமாக கூரத்தாழ்வான் அமைத்தருளினார். பின்னர் இந்த ஆசார்ய பரம்பரையில் உடையவர் திருவடி ஸம்பந்திகளாய் வந்தவரான எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, உலகாரியன், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாளமாமுனிகள் எனும் பூர்வாசார்ய பரம்பரைக்கு யாவரும் ஒரு படியாக அநுஸந்திக்கும்படியான ஒரு வாக்யகுரு பரம்பரை அவதரிக்க வில்லை. அவரவர் பெருமைக்குச்சேர அருளப்பட்டுள்ள தனியன்கள் அநுஸந்திக்கப்பட்டுவருவது யாவருமறிந்ததே.

**வாக்ய குருபரம்பரையும் தனியன்களும்:**

**அஸ்மத்குருப்யோ நம:** - எனது ஆசாரியனை (ஆசாரியர்களை) வணங்குகிறேன். ஸவாசார்யதனியன் அநுஸந்தேயம்.

**அஸ்மத்பரமகுருப்யோ நம:** - எனது ஆசாரியனின் ஆசார்யனை (ஆசார்யர்களை) வணங்குகிறேன். ஸ்வாசார்ய பரம்பரையில் உள்ள தனியன் அநுஸந்தேயம்.

**அஸ்மத்ஸர்வகுருப்யோ நம:** எனது எல்லா ஆசாரியர்களையும் வணங்குகிறேன், மணவாள மாமுனிகள் வரையிலுள்ள ஸ்வாசார்ய பரம்பரைத் தனியன்களும் அதற்கும் மேலே **''நம: ஸ்ரீசைல நாதாய''** தொடங்கி வரும் தனியன்கள்.

**ஸ்ரீமதே ராமாநுஜாய நம:**- ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயை பெருக்கமாக வுள்ள - ஞானபக்தி கைங்கர்யச் செல்வங்களில் விஞ்சியவரான எம்பெருமானாரை வணங்குகிறேன். ''யோநித்யமச்யுத பதாம்புஜ...''

**ஸ்ரீபராங்குசதாஸாய நம:**- செல்வரான பெரியநம்பியை வணங்குகிறேன். ''கமலாபதி கல்யாண குணாம்ருத....''

**ஸ்ரீமத்யாமநமுநயே நம:**- செல்வரான யாமுனாசாரியர் என்ற பெயருள்ள ஆளவந்தாரை வணங்குகிறேன். ''யத்பதாம் போருத்யாந....''

**ஸ்ரீபுண்டரீகாக்ஷாய நம:**- செல்வரான மணக்கால் நம்பியை வணங்குகிறேன். ''அயத்நதோ யாமுநமாத்மதாஸம் .....''

**ஸ்ரீராமமிச்ராய நம:**- செல்வரான உய்யக்கொண்டாரை வணங்குகிறேன். 'நம: பங்கஜநேத்ராய .....''

**ஸ்ரீமந் நாதமுநயே நம:**- செல்வரான ஸ்ரீரங்கநாதமுனிவரை வணங்குகிறேன். ''நமோசிந்த்யாத்புதாக்லிஷ்ட ....''

**ஸ்ரீமதே சடகோபாய நம:**- செல்வச் சீமானான ஸ்ரீசடகோபனை - நம்மாழ்வாரை வணங்குகிறேன். 'மாதாபிதா யுவதய: ....''

**ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம:**- செல்வத்தில் மிக்க சேனை முதலியாரை வணங்குகிறேன். ''நம: ஸ்ரீரங்கநாயக்யை.....''

ஸ்ரீதராய நம: - திருமகள் கேள்வனான பெரிய பெருமாளை - ஸ்ரீரங்கநாதனை வணங்குகிறேன். ''ஸ்ரீஸ்தநாபரணம் தேஜ: ஸ்ரீரங்கேஶயமாஶ்ரயே ....''

**ச்லோக குருபரம்பரை**

''அஸ்மத்தேசிகமஸ்மதீய பரமாசார்யா நசேஷாந் குரூந்
ஸ்ரீமல்லக்ஷ்மணயோகிபுங்கவ மஹாபூர்ணம் முநிம் |
ராமம் பத்மவிலோசநம் முநிவரம் நாதம் சடத்வேஷிணம்
ஸேநேசம் ச்ரியமிந்திராஸஹசரம் நாராயணம் ஸம்ச்ரயே ||''

பிள்ளைலோகம் ஜீயர் அனைத்துத் தனியன்களுக்கும் வ்யாக்யானம் அருளிச்செய்துள்ளார். பொதுத்தனியன்களில் ஒன்றான ''லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்ப$_4$ாம் ........'' என்று தொடங்கும் தனியனுக்கான விளக்கவுரையினைக் கருத்தில் கொள்வோம்.

**லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்ப$_4$ாம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் |**
**அஸ்மத$_3$ாசார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ||**

(லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்ப$_4$ாமித்யாதி$_3$) இத்தனியன்தான், ஸர்வாத்மஹிதைஷியாய் ஆப்ததமராய் குரூத்தமரான கூரத்தாழ்வான் அனைவர்க்கும் குருபரம்பராநு ஸந்தாநத்தாலே உஜ்ஜீவநமுண்டாம்படி அருளிச்செய்ததாயிருக்கும் ***(அனைத்து ஆத்மாக்களிடம் பரிவு கொண்டவரும், அவர்களுக்கு நன்மை செய்வதையே தமது குறிக்கோளாய்க் கொண்டவரும், அஜ்ஞானமாகிய இருளை அகற்றும் ஒளி பொருந்தியவரும், உத்தமருமான கூரத்தாழ்வான் அனைவரும் குருபரம்பரையை நினைவில் கொண்டு தரிக்கும்படியும், அதனால் வாழ்ச்சி உண்டாகும்படியும் அருளிச் செய்யப்பட்டது இந்தத் தனியன்.)***; ஆகையாலிறே ஸர்வஶிஷ்டர்களும் இத்தை அங்கீரித்து அநுஸந்தித்துக் கொண்டு போருகிறது. ***(இந்தக் காரணம் பற்றியே அனைத்து நல்லோர்களும் இந்தத் தனியனை நினைவில் தரித்துக் கொள்ளும்படி பணித்துள்ளனர்.)***

(லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்ப$_4$ாம்) அதில் முற்படி, ''**ஶ்ரீத$_4$ராயாதி$_3$கு$_3$ரவே**'' என்று, ரஹஸ்யத்ரயப்ரதிபாதகத்வத்தாலே ***(திருமந்த்ரம், த்வயம் சரமச்லோகம் ஆகிய மூன்று ரகசியங்களிலும் குறிப்பிடப்படும் ஸ்ரீமந் நாராயணன்)*** ப்ரதமகுரு ஶ்ரிய:பதியான எம்பெருமானாகையாலே முற்பட அருளிச்செய்கிறார். ''**நரநாரணனாயுலகத்தற நூல் சிங்காமை விரித்தவன்**'' (பெரியதிருமொழி 10.6.1) என்றும், ''**தன்னடியார் திறத்தகத்துத் தாமரை யாளாகிலுசிதகுரைக்குமேல் என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று**

**செய்தரென்பர்**'' (பெரியாழ்வார் திருமொழி 4.9.2) என்றும், ''**பார்த்தனுக்கன்றருளிப் பாரதத்தொரு தேர் முன்னின்று**'' (பெரியதிருமொழி 9.9.8), ''**குருமுகமாய்**'' (பெரியாழ்வார் திருமொழி 4.8.3), ''**பண்டே பரமன் பணித்த பணிவகை**'' (திருவாய்மொழி 10.4.9) என்றுஞ்சொல்லக் கடவதிறே. ''**கு₃ருஸ்த்வமேவ**'', ''**கு₃ருரபி**'', ''**ப₄க்த முக்தக முக்தாஹாரம் மம கு₃ரும்**'', ''**பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து**'' (பெரியாழ்வார் திருமொழி 5.2.8), ''**அறியாதனவறிவித்த அத்தா**'' (திருவாய்மொழி 2.3.2) ''**என்னைத்தீமனங்கெடுத்தாய்**'' (திருவாய்மொழி 2.7.8) ''**மருவித்தொழும் மனமே தந்தாய்**'' (திருவாய்மொழி 2.7.7) என்றாயிற்று நினைவில் கொண்டு போருவது.

பெரியபிராட்டியாருக்கு முற்படவாயிற்று ஸர்வேச்வரன் ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே த்வயத்தை அருளிச் செய்தது. ''**த்வத்த ஏவ மயா ஶ்ருத:**'' என்றாளே; அவன்தானும் ''**புரா மந்த்ரத்₃வயம் ப்₃ரஹ்மந் விஷ்ணுலோகே மஹாபுரே | தஸ்மிந்நந்த:புரே லக்ஷ்ம்யை மயா த₃த்தம் ஸநாதநம்||**'' என்றருளிச் செய்தானிறே; அத்தாலும், கடகத்வத்திலே (சேர்த்து வைப்பதிலே) முற்பாடுடைய ளாகையாலும், மற்றையார்க்கு கடகத்வம் (சேர்த்து வைக்கும் தன்மை) அவளடியாகையாலும், ''**லக்ஷ்மீநாத₃ஸமாரம்ப₄ாம்**'' என்று மிதுநச் சேர்த்தியாக (பெரியபெருமாளும் பெரியபிராட்டி யாருமான சேர்த்தி) அருளிச் செய்தது; ''**இறையுமகலகில்லேன்**'' (திருவாய்மொழி 6.10.10) என்றிருக்கையாலே பிரிந்து நிலையில்லை; லக்ஷ்மிக்கு லக்ஷ்மீதந்த்ரத்திலே ப்ரபத்திப்ரவர்த்தகத் வமுண்டிறே (சரணாகதியாகிய உபாயத்தை கைக்கொள்பவளாக குறிப்பிடப்படுகிறாள்),.

ஸமாரம்பாமென்று - (இவர்கள் தொடக்கமாக) குருபரம் பரையைச் சொல்லுகையாலே, ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதையிலே பகவானாலே ப்ரபத்த்யுபதேஶம் பண்ணப்பட்டதாகச் (சரணாகதி யின் பெருமையைப் கூறப்பெற்றவராய்) சொல்லப்படுமவரு மாய், ''**தத்தத₃வஸ்தே₂ாசித பரிசர்யாயாம் ஆஜ்ஞாபயந்த்யா**'' என்று **பூவளரும்திருமகளாலேயருள்பெற்று** (பெரியதிருமொழி 11.6.10), அத்தாலே ''**ஸ்ரீமதி விஷ்வக்ஸேநே**'' என்னும்படி - கைங்கர்யஸ்ரீயையுடைய ஸேனைமுதலியாரும் ''**திருமாலாலருளப்**

பட்ட சடகோபன்'' (திருவாய்மொழி 8.8.11) ''**திருமாமகளா லருள்மாரி**'' (பெரியதிருமொழி 8.6.10) என்னும்படியான ப்ரபந்நஜந கூடஸ்தரும் ஸூசிதர் (குறிப்பிடப்படுகிறார்). ஸேனைமுதலியாரும், விஷ்வக்ஸேந ஸம்ஹிதாதிகளிலே கஜாநநாதிகளுக்கு ப்ரபத்தியை வெளியிட்டருளினாரிறே; இப்படி வெளியிட்ட ப்ரகாரத்தை, ''**இத்யுக்தவாந் ஜக$_3$ந்நாதே$_2$ா த்$_3$விரத$_3$ாநந மாம்ப்ரதி**'' என்று தாமே அருளிச் செய்தார்; அத்தைப்பற்றவாயிற்று, ''**நமஸ்ஸேநாதி$_4$பதயே ஜ்ஞாநயா த$_2$ாத்ம்ய த$_2$ாயிநே**'' என்று அத்யாத்மசிந்தையிலே (வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயர் அருளிச்செய்த க்ரந்தங்களில் ஒன்று.) அருளிச் செய்தது. அவ்வளவன்றிக்கே, ஆழ்வார் அவதார வைபவத்தை ஸநத்குமாரர், மார்க்கண்டேய புராணத்திலே ஒரு அத்யாயமெல்லாஞ் சேர அருளிச்செய்தாராகையாலே இவர்கள ளவும் விவக்ஷிதம் (கூறப்பட்டதாகிறது).

இந்த குருபரம்பரையில் ஆதிமத்யாவஸாநங்களை அருளிச் செய்கிறவராகையாலே (முதல் இடைப்பட்ட ஆசார்யர்களை குறிப்பிடும் முறையாலே) நாதயாமுநர்களை மத்யமபதஸ்தராக அருளிச்செய்கிறார் (இடைப்பட்ட ஆசார்யர்களாக குறிப்பிடு கிறார்.),(நாதயாமுநமத்யமாம்) என்று, நாதயாமுநர்கள் - நாதமுனி களும் யாமுந முனிகளும்; அவர்கள்தான் பரமஹம்ஸரிறே (அன்னங்களாக உருவகப்படுத்தப்பட்டுள்ளனர்); ''**நாத$_2$யாமுநர் போல்வாரை அன்னமென்றும்**'' (ஆசார்ய ஹ்ருதயம் 115) என்றிறே ஆசார்யஹ்ருதயத்திலே அருளிச்செய்தது; **அவனும் அன்னமா (கி)யிறே அருமறைகளை அருளிச்செய்தது** (பெரியதிருமொழி 5.3.8). ஏவம்விதரான (அத்தகைய தன்மை கொண்டவரான இவர்) இவர்தான் மதுரகவிகளினுடைய திவ்ய ப்ரபந்தாநுஸந்தாநத்தாலே ஆழ்வாருடைய அருள்பெற்ற நாதமுனியானார்.

அந்த நாதமுநி அருளாலேயிறே யமுனைத் துறைவர் **அவதரித்து தர்ஶநத்தை ஆளவந்தாரானது**; ''**நாதே$_2$ாபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் ப$_3$ஹுபி$_4$ருபசிதம் யாமுநேய ப்ரப$_3$ந்தை$_4$:**'' என்னக்கடவதிறே. அவ்வளவன்றிக்கே ''**விஷ்ணுப$_4$க்திப்ரதிஷ் ட$_2$ார்த்த$_2$ம் ஸேநே ஶோ(அ)வதரிஷ்யதி**'' என்று ஸ்ரீஸேநாபதி யாழ்வாரவதாரமாக நம்மாழ்வாச் சொல்லிற்றிறே. ஆளவந்தாருக்கு ப்ரபத்த்யர்த்தே$_2$ாபதேஶம் (சரணாகதியின் அங்கங்களையும்

பொருளையும் உபதேசம்) பண்ணுகைக்கடியான உய்யக்கொண்டாரும் மணக்கால்நம்பியும் இவர்களிடையிலே அடைவுபடக்கடவராயிருப்பர்கள். ''**நாத$_2$யாமுநமத்$_4$யமாம்**'' என்று ஆழ்வானநுஸந்தாநக்ரமமாயிற்று இது; இவரையொழிந்த மற்றையார் ''**அஸ்மத்$_3$ கு$_3$ருஸமாரம்ப$_4$ாம் யதிஶேக$_2$ரமத்$_4$யமாம்| லக்ஷ்மீ வல்லப$_4$ பர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம்||**'' என்றுமிறே அநுஸந்தித்துப் போருவது.

உடையவர் தாம் குருபரம்பரைக்கு நடுநாயகமிறே. அவர் தாம் ஆழ்வானுக்கு ஸாக்ஷாதாசார்யராகையாலே (நேர் ஆசார்யராகையாலே) அஸ்மதாசார்ய பர்யந்தாமென்கிறது. ''**அஸ்மத்$_3$கு$_3$ரோர் ப$_4$க$_3$வதோ(அ)ஸ்ய த$_3$யைகஸிந்தே$_4$ா ராமாநுஜஸ்ய**'' என்னக்கடவதிறே; ''**ராமாநுஜாங்க்$_4$ரிஶரணோ (அ)ஸ்மி**'' என்றுமநுஸந்தித்தார். இதிலே யமுனைத்துறைவனிணையடியாம் (இராமானுச நூற்றந்தாதி - 21) கதி பெற்றுடைய இராமானுசனாகையாலே ஆளவந்தார்க்கு சரணத்வயமென்ன லாம்படியான (திருவடி நிலைகள் என்று கொள்ளத்தக்க) பெரியநம்பியும் ஸூசிதர் (குறிப்பிடப்படுகிறார்). ''இளையாழ்வாரை விஷயீகரித்த அநந்தரத்திலே (பிறகு), 'இளையாழ்வீர், பெருமாள் ஸ்ரீதண்டகாரண்யத்துக்கெழுந்தருளும்போது '**மரவடியைத் தம்பிக்கு வான் பணையம் வைத்துப்போய் வானோர்வாழ**' (பெரியாழ்வார் திருமொழி 4.9.1) எழுந்தருளினாப் போலே, மேலைவானோர்வாழ இவரும் தமக்கடியானான அடியேனை, அப்படியுமக்கு வைத்துத் திருநாட்டுக்கெழுந்தருளினார்'' என்று அவரருளிச்செய்தார்; அத்தைப்பற்ற '**யமுனைத்துறைவனிணையடியாம் கதி பெற்றுடைய இராமானுசன்**' (இராமானுச நூற்றந்தாதி 21) என்று அமுதனாரருளிச் செய்தார்'' என்று திருநாராயணபுரத்தில் திருவாய்மொழி ஆசார்யர ருளிச்செய்தார். உடையவரை குருபங்க்திஹாரநாயகமாக நடுவே (ஆசார்ய ரத்ன ஹாரத்தின் நடுவே) அநுஸந்திக்க வேண்டியிருக்க, யதாபாடமெல்லாரும் அநுஸந்திக்கிறது. ''ஆழ்வான் திவ்யஸூக்தி'' என்னுமது எல்லாரும் அறிகைக்காக.

இதிலே, ஆசார்யாபிமாநயுக்தராய் (ஆசார்ய அபிமாநத்தில் ஈடுபாடு கொண்டவர்களாய்) இவ்வருகிலுமுண்டான அனைவரும் ஸ்வாசார்யபர்யந்தமாக (அநுஸந்திப்போருடைய ஆசார்யன்

வரையில்) அநுஸந்திக்கும்போது நாதயாமுநர்களை நடுவாகச் சொன்னது யதிவரர்க்கும் உபலக்ஷணமாகிறதென்று (குறிப்பினால் உணர்த்துவதென்று) கண்டுகொள்வது ‘‘**அஸ்மத$_3$ாசார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம்**’’ என்கிறவித்தால். ‘‘**ராமாநுஜார்ய தி$_4$வ்யாஜ்ஞா வர்த்த$_4$தாம் அபி$_4$வர்த்த$_4$தாம்**’’ என்று எம்பெருமானார் திவ்ய ஸங்கல்பத்தாலே வர்த்தித்துக்கொண்டு போருகிற (வாழ்ச்சியுற்று இருக்கிற) ஆசார்யபரம்பரையானது ஸ்வாசார்யபர்யந்தம் (அநுஸந்திக்கிறவருடைய ஆசார்யன் வரையிலும்) ஸேவிக்கப்படுமதென்கிறது, ‘‘எம்பெருமானிற் காட்டில் குருபரம்பரை அதிகம் (உயர்ந்தது), குருபரம்பரையைக் காட்டில் ஸ்வாசார்யன் அதிகன் (உயர்ந்தவன்) என்னக்கடவதிறே. ‘‘**அஸ்மத$_3$ாசார்யபர்யந்தாம்**’’ என்கையாலே - இவ்வருகுள்ளார்க்கு உத்தேச்யராய் ப்ரபத்திமார்க்க ப்ரவர்த்தகரான (சரணாகதி மார்க்கத்தைக் பரப்புபவர்களாய்) கூரத்தாழ்வான், அவர் செல்வத் திருமகனாரான பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், கூரகுலோத்தமதாஸர், திருவாய் மொழிப்பிள்ளை, பெரியஜீயர் முதலான ‘‘**ஸர்வகு$_3$ருப்$_4$ய:**’’ என்னுமவர்களெல்லாருமநுளந்தே$_4$யராம்படி ஸூசிதர் (குறிப்பிடப் படுகிறார்.

வேதாந்தாசார்யரான அண்ணாவும் ‘‘**பத்யு:ஶ்ரிய: பத$_3$ாப்$_4$ஜாப்$_4$யாம் ப்ரயுஜ்ஜாநாய மங்க$_3$ளம்| ஶ்ரீய: க்ருபாமய ஸுத$_4$ாஸிந்து$_4$ ஸ்ரோதோவக$_3$ாஹிநே அஸ்து மங்க$_3$ளமார்யாய ரம்யஜாமாத்ருயோகி$_3$நே|**’’ என்று தொடங்கி, ‘‘**யதீந்த்$_3$ர ப்ரவணாயாஸ்மத்$_3$கு$_3$ரவே கு$_3$ணஶாலிநே| ப்ரயுஞ்ஜே மங்க$_3$ளம் ரம்யஜாமாத்ரு வரயோகி$_3$நே**’’ என்று நடுவாகவும், **பூர்வாசார் யேஷு ஸர்வேஷு பூர்ணப்ரேமாநுப$_3$த்$_4$நதே | மங்க$_3$ளம் ரம்யஜாமாத்ரு முநீந்த்$_3$ராய த$_3$யாளவே || ப$_4$வ்ய ஶ்ரீஶைல நாத$_2$ார்ய பரிபூர்ண க்ருபாஜுஷே | ரம்யஜாமாத்ருமுநயே மஹாப$_4$ாக$_3$ாய மங்க$_3$ளம் ||** என்று ஶ்ரீய:பதியைத் தொடங்கி, ஶ்ரீமத்ராமாநுஜார்யர் நடுவாகவும், ஶ்ரீஶைலேஶ தயாபத்ரரான பெரிய ஜீயரளவாகவும் சேகரிக்கையாலே இதுவே சுத்தஸம்ப்ரதாயம். மநுவிபரீதம்போலே, இதுக்குப்புறம்பானது அஸம்ப்ரதாயம். உபாயாந்தரோபதேஷ் டாக்கள் ஸ்வரூபநாஶகரான குருக்கள் (மற்றைய உபாயங்களை கைக்கொள்ளும்படி உபதேசிப்பவர்கள் ஆத்ம ஸ்வரூபத்தை அழிக்க வந்த ஆசார்யர்கள் ஆவர்);

**ஆகையாலிறே.** ''**கு$_3$ரூந் - ஸர்வத$_4$ர் மாம்ஸ்ச ஸந்த்யஜ்ய**'' என்றது. ஸாக்ஷாத்பலைகலக்ஷ்யத்வ ப்ரதிபத்தியாலே (ஆத்மாக்கள் உய்வுபெறும் பொருட்டு கருணையாலே பரிவுடையராய் பயனிலே நோக்குடையவராய் விளங்கும் ஆசார்யர்கள்) மந்த்ரரத்நத்தை (த்வயத்தை) உபதேசிக்குமவர்களிறே - ஸத்குருக்களாகிறார். ''த்வயத்தினுடைய அர்த்தத்தையும் திருவாய்மொழியினுடைய அர்த்தத்தையுமுபதேசிக்கிறான் யாவனொருவன், அவனுக்கேயிறே ஆசார்யத்வ பூர்த்தியுள்ளது என்று ப்ரமேயரத்னத்திலே அருளிச் செய்தார். ஏவம்விதமான (இப்படிப்பட்டதான) குருபரம்பரையிறே ஸேவ்யமென்கிறது (வணங்கப்பட வேண்டியதொன்றாகும்).

மேலும், குருகுலதுர்யரான வரவரமுநிவர்யருடைய பரம்பரயா ''**அஸ்மத$_3$ாசார்ய பர்யந்தாம்**'' என்று நடந்து செல்லுவது. ''**அஸ்மத்$_4$கு$_3$ரும் பரம காருணிகம் நமாமி**'' என்று தொடங்கி, ''**ஸௌம்யோபயந்த்ருமுநிம்**'' என்றிறே தலைக்கட்டி யருளினார். ''**நமஸ்த்வஸ்மத்$_3$கு$_3$ருப்$_4$யஸ்ச**'' என்று தொடங்கி, ''**நமோ ராமாநுஜாயேத$_3$ம் பூர்ணாய மஹதே நம:**'' என்று நடுவாகவும், ''**ஸ்ரீத$_4$ராயாதி$_3$கு$_3$ரவே நமோ பூ$_4$யோ நமோ நம:**'' என்று எம்பெருமானளவாகவும் வாக்ய குருபரம்பராக்ரமத்தாலே வாதிகேஸரி அழகியமணவாளச்சீயரருளிச்செய்தது; இந்தக் க்ரமத்தை ''**முந்தை வினையகல முன்னருளுமாரியனால் எந்தை யெதிராசனின் இன்னருள் சேர்ந்து அந்தமில்சீர்ப் பொற்பாவை தன்னருளால் பொன்னரங்கர் தாள்பணிந்து, நற்பாலடைந் துய்ந்தேன் நான்**'' (விவரணமாலை) என்றும், ''**அஸ்மத்$_3$கு$_3$ரு த$_3$யாயாஸ்து யதீந்த்$_3$ராங்கீ$_3$க்ரியாந்வய: | லபே$_4$ய லப்$_3$த$_4$ விஜ்ஞாநோ லக்ஷ்மீபதி பத$_3$த்$_3$வயம்**'' என்று விவரணமாலை யினடியிலும் தத்வ தீபாதியிலும் (அழகிய மணவாள ஜீயர் அருளிச்செய்த க்ரந்தங்கள் இவை) அருளிச் செய்தார்.

இந்த க்ரமம், ''**ஆசார்யாணாம் அஸாவஸாவித்யா ப$_4$க$_3$வத்த:- ஸ சாசார்யவம்ஸோஜ்ஞேய:**'' என்கிற ச்ருதியையும், ''கு$_3$ருபரம்பரயா பரமகு$_3$ரும் ப$_4$க$_3$வந்தம் ப்ரணம்ய'' என்கிற பாஷ்யகாரவசநத்தையும் பற்றியிருக்கிறது. ''**ஆசார்யாநஸ்ம தீ$_3$யாநபி பரமகு$_3$ரூந் ஸர்வமாசார்யவர்க்க$_3$ம் ஸ்ரீமத்$_3$ராமாநு ஜார்யம் முநிமகி$_2$லஜநோத்$_3$த$_4$ரணாயாவதீர்ணம் | பூர்ணார்யம் யாமுநேயம் முநிவரம$_2$ தௌ ராமராஜீவநேத்ரௌ வந்தே$_3$**

**நாத$_2$ம் முநீந்த்$_3$ரம் வகுளத$_4$ரசமுநாத$_2$ லக்ஷ்மீமுகுந்த$_3$ாந் ||**'' என்னக்கடவதிறே. ''**லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்ப$_4$ாம்**'' என்கிற இத்தனியனில் குருபரம்பரா க்ரமத்தையும், ''**தென்னரங்கனாருந் திருமகளுமாதியா, அன்னவயல் பூதூர் மன் ஆங்கிடையா - என்னை அருள், ஆரியனே தானளவா அன்னகுருமுறையின், சீரியதாள் சேர்ந்துய்ந்தேனே**'' (விவரணமாலை) என்றும் அவர் தாமே அருளிச் செய்தார். இந்த க்ரமம், ''**திருவருள் மால் சேனைமுதலி சடகோபன்**'' (பகவத்விஷய தனியன்) ''**நாதம் பங்கஜநேத்ர**'' என்கிற தனியன்களிலும், ''**ஆதிமுதல்மாயன் மலர்மங்கைசேனைத் தலைவன்**'' என்றும், ''**சேனைநாதன் அருள் மாறன் நாதமுனி தாமரைக்கண்ணி ராமர் வாழ், சீர்சிறந்த யமுனைத்துறைக் கிறைவர் செந்தொடைக்கதிபரருளினால், தானமர்ந்த வெதிராசர் கூரம்வரு தலைவர் நீதிபுனைபட்டர்பின், தலைமையான மாதவச்சீயர் நம்பிள்ளை தழைத்தகண்ணரிரு வகையினார், ஈனமின்றி யருளுலக வாசிரிய ரினியகூரகுலதாத ருக்கு, இன்ப மேவு திருவாய்மொழிப் பிள்ளை யிவர்க்குத் தானடிமையாகவே, ஆன வாழ்வுபெறவருள்வர் கோலமண வாளமாமுனிவன்**'' என்றும் சொல்லிற்றே.

இப்படி ஆரோஹ அவரோஹ (மேலிருந்துகீழ், கீழிருந்து மேல்) க்ரமங்களிரண்டாலும் குருபரம்பரையை அநுஸந்திக்கக் குறையில்லை. ''**ஈஶ்வரஸ்ய ச ஸௌஹார்த$_3$ம்**'' இத்யாதியாலே எம்பெருமான் செய்த ஆசார்ய ஸம்பந்த பர்யந்தமான உபகாரபரம் பரையை அநுஸந்தித்தால், குருபரம்பரைக்குத் தலையான எம்பெருமானை முந்துறப் பற்ற அடுக்கும். ''**ஆத்மநோ ஹ்யதிநீசஸ்ய**'' இத்யாதியாலும், ''**நாராயணன் திருமால்**'' (ஆர்த்திப்ரபந்தம்) இத்யாதியாலும் ஆசார்யன் பண்ணின பகவத்ஸம்பந்த கௌரவத்தை அநுஸந்தித்தால், ''**அஸ்மத்$_3$ கு$_3$ருப்$_4$யோ நம:**'' (வாக்ய குருபரம்பரை) என்று ஆசார்யனை முந்துற அநுஸந்திக்கவடுக்கும். ''**குருபரம்பரையை முன்னிடவே ஶரணாகதன் குறை தீரும்; பிராட்டியை முன்னிடவே ஶரண்யன் குறை தீரும்**'' என்றிறே ஆச்சான்பிள்ளை மாணிக்கமாலையிலே அருளிச்செய்த. ''**ஜப்தவ்யம் *(எப்போதும் நினைக்கத்தக்கது)* குருபரம்பரையும் த்வயமும்**'' (ஶ்ரீவசனபூஷணம் 274) என்றிறே அருளிச் செய்தது. குருபரம்பரா பூர்வகமல்லாத த்வயாநுஸந்தா நமும் நாவகாரியமிறே ***(நாவினால் கூறக்கூடாத செயலாகும்)***.

இப்படி ஆதிமத்யாவஸாந ஸஹிதையான ஸத் குருஸந்ததி, ஸர்வ ஸத்துக்களாலும் ஸதாநுஸந்தேய மென்றாயிற்று (இவ்வாறாக லக்ஷ்மீநாதன் தொடக்கமாய், நாதமுனி, யாமுநமுனி, இடைப்பட்ட தான குருபரம்பராத்யாநம் அனைத்து ஸத்வ குணம் படைத்தவர்க ளாலும் எப்பொழுதும் நினைவில் கொள்ளத்தக்கதாகும் என்பது நிலைநாட்டப்படுகிறது).

**நாத யாமுனர்களின் பெருமையும், இராமானுசன் அவர்களிடம் கொண்ட ஈடுபாடும்.**

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் மிகத் தொன்மையானது. வேதநெறிக்கோட்பாடுகள் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நிலை நாட்டுகின்றன. ஆயினும் இந்த ஸித்தாந்தம் 'எம்பெருமானார் தர்சனம் என்றே' பெயரிடப்பட்டுள்ளது. இதனால் இந்த ஸப்ரதாய மானது எம்பெருமானாரால் தோற்றுவிக்கப்பட்டது என்றதொரு மருள் பலரிடையே காணப்படுகிறது. ஸ்ரீமணவாள மாமுனிகள் உபதேசரத்னமாலையில் இதற்கான தெளிவை கீழ்க்கண்டவாறு தந்துள்ளார்.

***''எம்பெருமானார்தரிசனமென்றே யிதற்கு***
***நம்பெருமாள் பேரிட்டுநாட்டிவைத்தார் *அம்புவியோர்***
***இந்தத்தரிசனத்தை யெம்பெருமானார்வளர்த்த ****
***அந்தச் செயலறிகைக்கா''.***

(உபதேசரத்தினமாலை 38)

இந்த விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமாகிய பயிரை தமது வேதாந்த க்ரந்தங்களாகிய உரமிட்டு வளர்த்தவர் எம்பெருமானார். இந்த ஸித்தாந்தத்தை அசைக்க ஒண்ணாத ஆதாரங்களின் அடிப்டையில் முன்னோர்கள் அருளிச்செய்த வண்ணம் நிலை நாட்டிய பெருமை இராமானுசருக்கே உரித்ததாகும்.

ஸ்ரீபாஷ்யத்தில் எம்பெருமானார் போதாயன வ்ருத்தி க்ரந்தத்தின் அடிப்படையிலும், மற்றைய ஆசார்யர்களான டங்கர், த்ரமிடர், ஸ்ரீவத்ஸாங்கர், குஹதேவர், போன்ற முன்னோர்களுடைய நூல்களிலிருந்தும் பெற்ற ஜ்ஞானத்தைக் கொண்டு தாம் ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு விரிவுரை எழுதியதாகக் குறிப்பிடுகிறார். கால வெள்ளத்தில் கரைந்துபோன மேற்படி ஆசார்யர்களின் க்ரந்தங்கள்

நமக்குக் கிடைக்கவில்லை. 14ஆம் நூற்றாண்டு வரை பயிலப்பட்டு வந்த இந்த நூல்கள் (வேதாந்த தேசிகர் காலம்வரையிலும்) முகம்மதியர்களின் படையெடுப்பின்போது தீக்கிரையாக்கப் பட்டன. கி.பி. 1311ஆம் ஆண்டு தொடங்கி, பல ஆண்டுகள் முகம்மதியர் படையெடுப்பால், தென்தமிழ்நாடு சின்னாபின்ன மாக்கப்பட்டது. திருக்கோயில்களுக்குத் தீவைக்கப்பட்டன. சரஸ்வதி பண்டாரம் எனப்படும் நூல்நிலையங்கள் திருக்கோயில் களின் ஓர் அங்கமாக திகழ்ந்து வந்தக் காலமிது. நாம் இழந்த அறிவுப்பெட்டகங்கள் எண்ணிக்கையில் அடங்கா.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆசார்யர்களைத் தவிர்ந்து ஸ்ரீமந் நாதமுனிகள் மற்றும் ஆளவந்தார் ஆகியோருடைய க்ரந்தங்கள் முழுமையாக எம்பெருமானார்க்கு கிடைத்தமையால் அந்த க்ரந்தங்களிலிருந்து பல மேற்கோள்களை தமது விரிவுரை நூல்களில் ப்ரமாணங்களாக குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீமந் நாதமுனி கள் அருளிச்செய்த 'ந்யாயதத்வம்' விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத் தின் கையேடாகத் திகழ்ந்ததென்பது கற்றறிந்தோர் கொள்கை யாகும். ஸ்ரீபாஷ்யத்தில் அத்வைத வாதங்களை அதாவது அதில் அமைந்துள்ள அநுபபத்திகளை (பொருத்தமின்மைகளை - Untenables - incongruities) கண்டிக்கும் ப்ரகரணத்தில் - ஸப்தவித அநுபபத்திகளை கண்டிக்கும்போது ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீமந் நாதமுனிகளின் ந்யாயதத்துவத்திலிருந்து மூன்று ச்லோகங்களை மேற்கோளாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஸ்ரீபாஷ்யத்தில் இவை ஸ்ரீமந் நாதமுனிகளுடைய ச்லோகங்கள் என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் ச்ருதப்ரகாசிகாபட்டர் இந்த மேற்கோள்கள் அனைத்தும் ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச்செய்தவை என்று உறுதிபடக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இவை ந்யாய தத்துவத்திலிருந்து எடுக்கப்பட்டவை என்று அவர் குறிப்பிட வில்லை. ஸ்ரீபாஷ்ய ஜிஜ்ஞாஸாதிகரண விளக்கவுரையில் ஸ்ரீமந் நாதமுனிகளுடைய நூல்களிலிருந்து சில மேற்கோள்களை ஸ்ரீபாஷ்யகாரர் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் இதுபற்றிய விளக்கம் ச்ருதப்ரகாசிகையில் காணப்படவில்லை.

ந்யாயதத்வத்திலிருந்து பிற்பட்ட நூலாசிரியர்களில் ஒருவரான ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட இடங்களில் அவருடைய நூல்களான 'ந்யாயபரிசுத்தி'

மற்றும் ‘ந்யாயஸித்தாஞ்சனம்’ ஆகியவற்றில் மேற்கோளாகக் கொடுத்துள்ளார்.

ஸ்ரீமந்நாதமுனிகள் அருளிச் செய்த ‘ந்யாயதத்வம்’ பல பாதங்கள் மற்றும் அதிகரணங்களைக்கொண்டது என்பது இந்த மேற்கோள்களிலிருந்து பெறப்படுகிறது. ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் தமது நூல்களில் பிரமாதா பாதம், கர்மபாதம், ப்ரமேயபாதம் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். இதிலிருந்து ப்ரமாணபாதம் என்ற ஒரு பகுதி இருந்திருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது. அவ்வாறே கர்மபாதத்திலிருந்து எட்டு அதிகரணங்களைக் குறிப்பிடுகிறார். அவ்வாறு குறிப்பிடும்போது முதல் அதிகரணம் என்றும், இரண்டாம் அதிகரணம் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் ஸம்யோகஅதிகரணம் என்று ஒரு அதிகரணத்தைக் குறிப்பிடுகிறார். ஆனால் அது எந்தப் பாதத்தில் அமைந்துள்ளது என்பதைக் குறிப்பிடவில்லை. யாமுனாசார்யர் அருளிச்செய்த ‘ஆத்மஸித்தி’ என்னும் நூல் ‘ந்யாயதத்வத்தின்’ அடிப்படையில் எழுதப்பட்டது என்பதும் சில குறிப்புகளின் அடிப்படையில் ஊகித்து அறியமுடிகிறது. ‘ந்யாயதத்வத்தை’ சாஸ்த்ரம் என்று யாமுனாசார்யர் குறிப்பிடுகிறார்.

‘ந்யாயதத்வம்’ என்னும் நூலை ஏன் ஸ்ரீபாஷ்யகாரர் தம்முடைய விரிவுரைகளில் ஸ்ரீமந்நாதமுனிகள் அருளிச்செய்த ந்யாய தத்வம் என்று குறிப்பிடவில்லை என்பதற்கான உரிய பதிலை நம் முன்னோர்கள் கீழ்க்கண்டவாறு தெளிவுபடுத்தி யுள்ளனர்.

‘ந்யாயதத்வம்’ என்ற நூல் பற்பல விஷயங்களை பற்றிய விளக்கங்களைக் கொண்டதாக மிகப்பெரிய நூலாக அமைந்திருக்க வேண்டும். ‘ப்ரஹ்மஸூத்ரங்களில்’ தெளிவுபடுத்தப்பட்ட குறிப்பு களைக்காட்டிலும் மற்றைய விசிஷ்டாத்வைத தொடர்பான பல செய்திகளை அந்த நூல் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். ஸ்ரீபாஷ்யமோவெனில் ச்ருதி வாக்யங்களுக்கு மாறுபட்டபொரு ளுரைக்கும் வைதிகமதத்தை ப்ரமாணமாகக் கொண்ட குத்ருஷ்டி களுக்காகவும் மற்றைய ஸித்தாந்தங்களை மறுப்பதற்காகவும் எழுதப்பட்ட நூலாகும். ந்யாயதத்வத்தில் காணப்படும் குறிப்பு களும், ஸ்ரீபாஷ்ய விரிவுரையும் வெவ்வேறு நோக்கங்களைக்

கொண்டவை. ஆகவே ஸ்ரீபாஷ்யகாரர் மிக அதிகமான மேற்கோள் களை ந்யாய தத்வத்திலிருந்து எடுத்தாளவில்லை.

இராமானுசர் ஆளவந்தாருக்கு ஏகலைவன்போல் விளங்கி யவர். வேதார்த்தஸங்க்ரஹத்தில் ஆளவந்தாரை கீழ்க்கண்டவாறு இராமானுசர் கொண்டாடுகிறார்.

**பரம் ப்$_3$ரஹ்மைவாஜ்ஞும் ப்$_4$ரமபரிக$_3$தம்**
**ஸம்ஸரதி தத்**
**பரோபாத்$_4$யாலீடம் விவஶமஶு**
**ப$_4$ஸ்யாஸ்பத$_3$ மிதி |**
**ஶ்ருதிந்யாயாபேதம் ஜக$_3$தி விததம்**
**மோஹந மித$_3$ம்**
**தமோ யேநோ பாஸ்தம் ஸஹி**
**விஜயதே யாமுநமுநி: ||**

*இரண்டாவது ச்லோகத்தின் பொருள்:-*

‘பர ப்ரஹ்மமே அவித்யையால் (அஜ்ஞானத்தால்) மறைக்கப்பட்டதாயும், பலவிதமான பேதத்தைப் பார்த்து ப்ரமிக்கும் ஸ்வபாவமுள்ளதாயும் (தன்மையுள்ளதாயும்) கொண்டு ஜந்ம மரணம் முதலிய துக்கபாகியாகின்றது (துன்பமடைபவனாய்)’ என்றும், ‘அந்த ப்ரஹ்மமே, பாரமார்த்தி கமான (உண்மைப் பொருளான) புத்தி, இந்த்ரியம் முதலிய உபாதியுடன் (சூழலின் தாக்கம்: அருகில் உள்ள ஒரு பொருளின் தொடர்பால் மற்றதில் ஏற்படும் மாறுதல்.) ஸம்பந்தங்கொண்டு (தொடர்பு கொண்டு) கர்ம பரவச மாகின்றது’ என்றும், ‘அந்த ப்ரஹ்மமே சேதந அசேதநங் களாகப் பரிணமித்து, அசேதநப் பொருளுக்குள்ள பரிணாம யோக்யதையாகிற அசுபத்திற்கும், சேதந பொருளுக்குள்ள அபுருஷார்த்தாந்வய ரூபமான அசுபத்திற்கும் (மங்கலமற்ற பயனுக்கு) ஆஸ்பதமாகின்றது (காரணமாகின்றது)’ என்றும் இவ்வாறாக ச்ருதிக்கும், தர்க்கத்திற்கும் விருத்தமாக (மாறுபட்ட தாக) அண்டத்தில் பரவி வரும் மோஹநமான இந்த அந்தகாரமானது யாதொரு யாமுநமுநியால் தூரத்தில் (வெகுதொலைவிற்கு) தள்ளப் பட்டதோ அப்படிப்பட்ட யாமுநமுநிக்கு வெற்றி உண்டாகட்டும்.)

ஸ்ரீபாஷ்ய விவரணத்தில் ஆளவந்தாரின் ‘ஆத்மஸித்தி’ யிலிருந்து சில சொற்றொடர்களை மேற்கோள் காட்டும் ஸ்ரீபாஷ்ய

காரர் ஆளவந்தார் திருநாமத்தை நேரே குறிப்பிடவில்லை யென்பது கருத்தில் கொள்ளத்தக்கது. எதிரிகளின் வாதங்களை அடக்குவ தற்கு மற்றைய ச்ருதி வாக்யங்களையும் பொதுவாக கொள்ளப்பட்ட மற்றைய சாஸ்த்ரங்களிலிருந்தும் மேற்கோள் காட்டி, கருத்துக்களை நிலைநாட்டுவதை குறிக்கோளாய் கொண்ட ஸ்ரீபாஷ்யமாகிற நூலில் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை உறுதிப்படுத்த எழுந்த நூல்களிலிருந்து மேற்கோள்களை அதிக அளவில் எடுத்தாளு வதற்கு அவர் திருவுள்ளம் இசையவில்லைபோலும். ஆனால் வேதார்த்தஸங்க்ரஹமோ திருவேங்கடமுடையான் திருமுன்பு தமது ஸித்தாந்தத்தை விளக்குவதற்காக ஆற்றிய சொற்பொழிவின் எழுத்து வடிவமாதலின் அதிலே ஆளவந்தாருடைய திருநாமத்தை குறிப்பிட்டு அதிக அளவில் அவருடைய ஸ்ரீஸூக்திகளை மேற்கோளாகத் தந்துள்ளார்.

ஆளவந்தாருடைய கீதார்த்தஸங்க்ரஹத்தின் அடிப்படை யிலேயே எழுதப்பட்டது எம்பெருமானாருடைய கீதாபாஷ்யமாகும். 32 ச்லோகங்களில் கீதையின் 18 அத்யாயங்களில் அமைந்துள்ள தெள்ளிய பொருளைத் தந்துள்ளார் ஸ்ரீஆளவந்தார். யாமுனாசார் யருடைய ஸ்தோத்ர ரத்னத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது எம்பெருமானாருடைய சரணாகதிகத்யம். ஆளவந்தாருடைய ஸ்ரீஸூக்திகளிலிருந்து சில சொற்றொடர்கள் சரணாகதி கத்யத்தில் காணப்படுகின்றன. ஸ்ரீவைகுண்டகத்யத்தில் தொடக்கத்தில் ஆளவந்தாரிடம் தாம் கொண்ட ஈடுபாட்டை கீழ்க்கண்டவாறு வெளிப்படுத்தி யுள்ளார் எம்பெருமானார்.

*யாமுநார்யஸுதா$_4$ம்போ$_3$தி$_4$மவகா$_3$ஹ்ய யதா$_2$மதி|*
*ஆதா$_3$யப$_4$க்தியோகா$_3$க்$_2$யம் ரத்நம் ஸந்த$_3$ர்ஶயாம்யஹம்||*

(ஆளவந்தாராகிற அம்ருதக் கடலில் மூழ்கி, அறிந்தவளவு நான் பக்தியோகமாகிய ரத்னத்தை எடுத்துக் காண்பிக்கிறேன்.)

ஸ்ரீபாஷ்யம் குத்ருஷ்டிகளை கண்டிப்பதற்காக ஏற்பட்ட க்ரந்தம். ஆனால் கத்யங்களோ சரணாகதி நெறியை வலியுறுத்தும் க்ரந்தங்களாகும். ஆகவே எம்பெருமானாரின் கத்யங்களில் ஸ்ரீஆள வந்தாருடைய) ஸூக்திகளை தெள்ளத்தெளிவாகக் குறிப்பிட் டுள்ளார். வேதாந்ததீபத்தின் ஆரம்பத்தில்,

**ப்ரணம்ய மிரஸா(ஆ)சார்யம்ஸ்தத$_3$ாதி$_3$ஷ்டேந வர்த்மநா |**
**ப்$_3$ரஹ்மஸூத்ர பத$_3$ாந்தஸ்த$_2$வேத$_3$ாந்தார்த$_2$: ப்ரகாம்யதே ||**

ஆசார்யர்களைத் தலையால் வணங்கி அவர்கள் அறுதியிட்ட வழியாலே ப்ரஹ்மஸூத்ரங்களின் சொற்களுள் நிகழும் வேதாந்தமென்ற உபநிஷத் வாக்யங்களின் பொருள் ப்ரகாசப் படுத்தப்பெறும். இந்தச் ச்லோகத்தில் 'ஆசார்ய' என்ற சொல் வேதவ்யாஸர் போதாயன மகரிஷி போல்வாரைக் குறிப்பதாகத் தோன்றினாலும், குறிப்பாக ஸ்ரீஆளவந்தாருடைய திருவடிகளை தாம் வணங்குவதாகப் பொருள்கொள்ள வேண்டும்.

ஆளவந்தார் அருளிச்செய்த 'மஹாபுருஷ நிர்ணயம்' என்னும் நூல் நமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் 'வேதார்த்த ஸங்க்ரஹத்தில்' ஸ்ரீமந் நாராயணனே பரப்ரஹ்மம் அவனே அடையத்தக்க பரம்பொருள் ஸ்ரீதத்வம், நித்யவிபூதி, நித்யஸூரிகள் ஆகியவற்றைப் பற்றிய விளக்கங்கள், பரப்ரஹ்மமாகிய ஸ்ரீமந் நாராயணனே அடையத்தக்க உபாயங்கள் யாவை? ஸ்ரீமந் நாராயணனுக்கு ஜீவன் செய்யும் கைங்கர்யங்கள் யாவை? போன்றவற்றிற்கான விளக்கத்தை மஹாபுருஷநிர்ணயத்தின் அடிப்படையில் அருளிச் செய்திருக்கக்கூடுமென்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

நமது ஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீமந் நாதமுனிகளும், ஸ்ரீஆளவந்தாரும் ஒப்பற்றதொரு நிலையில் கொள்ளப்பட்டுள்ளார்கள் என்பதும், அவர்கள் காட்டிய வழியில் எம்பெருமானார் தரிசனம் இன்றளவும் தழைத்து வருகின்றது என்பதும் இந்தக் கட்டுரை மூலம் நிலைநாட்டப்படுகிறது. ✱✱✱

**ஆதாரநூல்கள்:-**

1. வாக்ய குருபரம்பரை - பிள்ளைலோகம் ஜீயர் அருளிச் செய்த வ்யாக்யானம் - யதிராஜபாதுகா வெளியீடு - 1992. 2. பூர்வர்கள் அருளிச் செய்த தனியன்கள் - பிள்ளைலோகம்ஜீயர் அருளிச்செய்த வ்யாக்யானத்துடன் - ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ வெளியீடு - 2001. 3. Article written by Sri.Ue.Ve. T.A. Sampath Kumaracharya in Sri Bashyakara magazine edited by A.N. Srivasa Iyangar - 1977. ✱✱✱

# நல்லிச்சேரி செண்டலங்கார ராஜகோபால ஸ்வாமி திருக்கோயிலும் தஞ்சை நாயக்க மன்னனான விஜயராகவ நாயக்கரின் கோயிற்பணிகளும்

தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை - குடந்தை நெடுஞ் சாலையில் அமைந்துள்ளது நல்லிச்சேரி என்னும் கிராமம். இந்தக் கிராமத்தின் அண்மையில் அமைந்துள்ள கள்ளர் பசுபதிகோயிலில்தான் பெரியநம்பிகளின் திருவரசும், வரத ராஜப்பெருமாள் திருக்கோயிலும் அமைந்துள்ளன. நல்லிச் சேரி என்னும் கிராமம் நான்கு பக்கமும் வயல்களால் சூழப்பெற்று, இயற்கை எழில் கொஞ்சும் கிராமமாகும். ஒரு கிராமத்துக்குரிய முறையில் ராஜகோபால ஸ்வாமி திருக் கோயில், சிவன் கோயில், மாரியம்மன் கோயில் ஆகியவை அமைந்துள்ளன. நீர்நிலைகளும், சோலைகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. ஆராவாரம் இல்லாத ஊர். மாசுபடாத காற்று, தூய குடிநீர் நிலைகள் இந்தக் கிராமத்தில் அமைந்துள்ளன. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஐம்பது மாணவர்கள் இந்த ஊரில் அமைந்திருந்த பாடசாலையில் வேதம் பயின்று வந்தனர்.

சோழ மன்னர்கள் காலத்திற்குப் பிறகு பெருமளவில் திருக்கோயிற் திருப்பணிகள் தஞ்சை நாயக்க மன்னர்கள் காலத்தில்தான் மேற்கொள்ளப்பட்டன. சுமார் 140 ஆண்டு கள் தஞ்சையை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்த தஞ்சை நாயக்க மன்னர்கள் புலவர்களாகவும் விளங்கி வந்தனர். நீதி பிறழாது ஆட்சிபுரிந்து வந்தனர். அந்தணர் களைப்போற்றி அவர்களுக்கு நிலதானம் அளித்து வந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாகத் திருக்கோயில்கள் பலவற்றை

கட்டுவித்து ஆங்கு ஆராதனங்கள் முறையாக நடைபெற்று வருவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்து வைத்தனர். வேதபாடசாலைகள் பல நிறுவப்பெற்றன. தஞ்சை நாயக்க மன்னர்களின் குலகுருவாய்த் திகழ்ந்த கோவிந்த தீக்ஷிதரின் வழிகாட்டுதலில் நல்லாட்சிப் புரிந்து வந்தனர். ரகுநாத நாயக்கர் மற்றும் அவர் மகன் விஜயராகவ நாயக்கர் ஆகியோர்களின் ஆட்சிக்காலத்தில் மன்னார்குடி ராஜகோபால ஸ்வாமி திருக்கோயில் விரிவாக்கம் பெற்றதோடு மட்டு மல்லாமல் ராஜகோபால ஸ்வாமிக்கான திருக்கோயில்கள் பல ஊர்களில் அமைக்கப்பெற்றன. விஜயராகவ நாயக்கர் ராஜகோபால ஸ்வாமி மீது கொண்ட ஈடுபாடு இந்தக் கட்டுரையின் பிற்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. விஜய ராகவ நாயக்கர் காலத்தில் ராஜகோபால ஸ்வாமிக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பல திருக்கோயில்களில் ஒன்று நல்லிச் சேரி செண்டலங்கார ராஜகோபால ஸ்வாமி திருக்கோயிலும் ஒன்றாகும். இந்தத் திருக்கோயிலில் மூலவர் ருக்மிணி சத்யபாமா ஆகிய இருவருடன் கோபாலன் திருக்கரத்தில் ‘செண்டு’ எனப்படும் கிருஷ்ணாவதாரத்திற்கே உரிய கோலுடன் காட்சியளிக்கிறார். விபவாவதாரத்தில் பசு மாடுகள் உண்பதற்காகக் குட்டையான மரங்களின் கிளை களை அவை முறிந்துபோகா வண்ணம் வளைத்து கொடுப்ப தற்காக கையிலே ஏந்திய கோல்தான் செண்டு எனப்படும்.

இங்கே ஸேவை ஸாதிக்கும் ராஜகோபாலனின் திருக் கரங்களில் சங்குசக்கரங்களைக் காணமுடியாது. மாறாக மாடு மேய்க்கும் கோலத்தில் கண்ணன் ஸேவை ஸாதிக்கிறான். சக்ரத்தாழ்வார், ஜகத்ரக்ஷகப்பெருமாள், செங்கமலவல்லித் தாயார், ஆஞ்சநேயன் ஆகியோருக்குத் தனி ஸந்நிதிகள் அமைந்துள்ளன. மஹாமண்டபத்தில் விஜயராகவ நாயக்க ரின் உருவச்சிலை கைகளைக் கூப்பிய வண்ணம் வடக்கு நோக்கிக் காணப்படுகிறது. அகலமான பிராகாரங்களைக் கொண்ட இந்தத் திருக்கோயில் மிகப் பொலிவுடன் விளங்கு கிறது. சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இடிந்து பாழடைந்து ஆராதனங்கள் ஏதும் நடைபெறாத நிலையில் காட்சியளித்த இந்தத் திருக்கோயில் தற்போது மிகப் பொலிவுடன் விளங்குகிறது. அன்றைய அரசர்களே இன்று

தனிகர்களாகவும், கருணைவுள்ளம் படைத்த செல்வச்சீமான்களாகவும் விளங்குகின்றனர். தன்னிடம் உள்ள செல்வம் பகவானுக்குரியது. அவன் நமக்களித்த அந்தச் செல்வத்தை அவனுக்கே அர்ப்பணிக்க வேண்டும் என்ற எண்ணங் கொண்ட Reliance நிறுவனத்தில் உயர்பதவி வகிக்கும் திரு. பாலசுப்ரமண்யன் என்பவரின் உள்ளத்திலே புகுந்து செண்டலங்கார ராஜகோபாலன் தனது திருக்கோயில் திருப்பணிகளை செய்யவைத்தான். விஜயராகவ நாயக்கரின் மறுபிறப்போ என்று எண்ணத்தக்க முறையில் இவர் அந்த ஊர் திருக்கோயில்கள் அனைத்தையும் புனர்நிர்மாணம் செய்ததோடு மட்டுமல்லாமல், அந்தந்தக் கோயில்களின் வழிபாடுகள் இடையூறின்றி நடைபெறுவதற்கு உரிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களையும் ஏற்படுத்தி வைத்துள்ளார்.

இதற்கு உறுதுணையாய் இருப்பவர் நல்லிச்சேரி சிவன் கோயில் ஆராதகரான ஸ்ரீமான் வேங்கடேச குருக்கள் ஆவார். இந்த இருவருடைய ஆக்கப் பணியால் விஜயராகவ நாயக்கரால் எழுப்பப்பெற்ற செண்டலங்கார ராஜகோபால ஸ்வாமி திருக்கோயில் இன்று மிகச்சீரும் சிறப்புடன் விளங்குகிறது.11.6.2013 அன்று இந்தத் திருக்கோயில் புனரமைக்கப்பட்டு ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்ற, வைகாசி புனர்பூச நக்ஷத்திரத்தில், ஏழாவது ஸம்வத்ஸரோத்ஸவம் நடைபெற்றது. அன்றையதினம் பாஞ்சஜன்யம் ஆசிரியர் அ.கிருஷ்ணமாசார்யர் இந்தத் திருக்கோயிலை நிர்மாணித்த விஜயராகவ நாயக்கரின் பெருமையையும், அர்சாவதார எம்பெருமானின் எளிமையையும் உள்ளடக்கிச் சொற்பொழி வாற்றினார். அதன் எழுத்து வடிவம் பின்வருமாறு. விஜய ராகவ மன்னரைப் பற்றிய குறிப்புகள் குடவாயில் திரு.பால சுப்ரமணியன் அவர்களால் எழுதப்பெற்று, தஞ்சை சரசுவதி மகால் வெளியீடாக, 1999ஆம் ஆண்டு வெளிவந்த ‘தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு’ என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.

‘‘சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு சோழ மண்டலம் பாண்டியர், ஹொய்சாளர் போன்றவர்களின்

ஆளுகைக்கு உட்பட்டது. அவர்களுக்குப் பிறகு தமிழகம் முழுவதும் விஜயநகரப் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயரின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1508-1529), அவருடைய பிரதானியாகத் திகழ்ந்த வீரநரசிம்மராயன் எனும் செல்லப்பா தொண்டை மண்டலம், சோழமண்டலம், பாண்டிய மண்டலத்தின் ஒருபகுதி ஆகியவற்றின் ஆட்சியாளராக (தன்னநாயக்கர்) விளங்கிப் பெரும் சாதனைகள் புரிந்தார். கிருஷ்ணதேவ ராயரின் மறைவிற்குப் பிறகு செல்லப்பாவின் துணையுடன் அச்சுதவேதராயர் பேரரசர் ஆனார். பேரரசின் மைத்துனரும், மகாமண்டலேசுவரருமான சலகம் சின்னதிருமலை என்பவ ரின் சூழ்ச்சிகளால் செல்லப்பா பேரரசையே எதிர்க்கும் நிலை ஏற்பட்டது. செல்லப்பா, பரமக்குடி நாயக்கர், திருவடி தேசத்து மன்னர் ஆகியோரின் எதிர்ப்புக்களை முறியடிக்க அச்சுததேவராயர் தென்னாட்டிற்கு திக்விஜயம் செய்து திருவரங்கம் வரை வந்தார். பின்னர் சலகம்சின்ன திருமலை பாண்டியநாடு சென்று தாமிரபரணிக் கரையில் எதிர்ப்பாளர் மூவரையும் வென்று திருவரங்கத்திலிருந்த பேரரசர் முன்பு அவர்களைச் சரணடையச் செய்தார். இதன் பின்பு ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் தஞ்சை, செஞ்சி, மதுரை நாயக்க அரசுகள் தோன்றின.

செவ்வப்ப நாயக்கன், அவன் மகன் அச்சுதப்ப நாயக்கன், அவன் மகன் ரகுநாத நாயக்கன் ஆகியோர் தஞ்சை நாயக்க மன்னர்களாக ஆட்சி செய்து வந்தனர். ரகுநாத நாயக்கரின் ஆட்சிக் காலத்திலேயே, அவருடைய மூத்த மகனான ராமபத்ர நாயக்கர் (1628-1630) தன் தந்தையுடன் ஆட்சி செய்து வந்தார். ராமபத்ர நாயக்கருடைய அகால மரணத்திற்குப் பிறகு, விஜயராகவ நாயக்கர் (1631-1675) தஞ்சை நாயக்க மன்னராக ஆட்சி செய்து வந்தார். ரகுநாத நாயக்கர் தஞ்சை அரசராகத் திகழ்ந்த காலத்திலேயே அவரது இரண்டாவது மகனான விஜயராகவ நாயக்கர் தஞ்சை அரசின் நிர்வாகப் பொறுப்புக்களை மேற்கொள்ளலானார். கி.பி.1631 ஆம் ஆண்டான பிரஜோத் பத்தி ஆண்டு சித்திரை மாதம் 5ஆம் நாள் குறிக்கப்பெற்ற திருவாரூர்க் கல்வெட்டில் தொடங்கி கி.பி.1674ஆம் ஆண்டான ஆனந்த வருடம் வைகாசி மாதம்

10ஆம் நாள் (மே.8,) குறிக்கப்பெற்ற கள்ளப்பெரம்பூர் சாசனம் இறுதியாக உள்ள கால எல்லைக்குள் பொறிக்கப் பெற்ற பதினாறு கல்வெட்டுக்களும், 3 செப்பேடுகளும் விஜயராகவ நாயக்கரின் சாசனங்களாக நமக்குக் கிடைக் கின்றன. இவை தவிர நாயக்கர் பெயர் குறிக்கப்பெறாத அவர்காலத்துச் சாசனங்கள் ஐந்தும் கிடைக்கின்றன.

ரகுநாத நாயக்கர் கலாவதி ஆகியோருக்கு மூத்த மகனாக ராமபத்ரனும், இரண்டாவது மகனாக விஜய ராகவனும் பிறந்தனர். ரகுநாத நாயக்கரின் இரண்டாவது தேவியான செஞ்சு லக்ஷ்மம்மாவின் வளர்ப்பில் விஜயராகவன் வளர்ந்தான். தன் தந்தை எவ்வாறு கும்பகோணம் மகாமகக் குளக்கரையில் 16 மகாதானங்களை அளித்தாரோ அது போன்றே மன்னார்குடி கிருஷ்ண தீர்த்தக்கரையில் விஜய ராகவனும் 16 மகாதானங்களைச் செய்தான். திருவாரூர்த் திருக்கோயிலிலுள்ள வன்மீகநாதர் கருவறையின் மேற்குப் பட்டிகை மற்றும் குமுதம் ஆகிய பகுதிகளில் வெட்டு விக்கப்பெற்ற கல்வெட்டொன்று கி.பி.1978ஆம் ஆண்டு குடவாயில் திரு. பாலசுப்ரமணியன் அவர்களால் கண்டு பிடிக்கப்பெற்று வரலாற்றுலகுக்கு அறிமுகம் செய்யப் பெற்றது. சுண்ணாம்புக் காறையுள் மறைந்திருந்த அக்கல் வெட்டு வரலாறு முக்கியத்துவம் வாய்ந்தது. திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் கோயில் கோபுரவாயிலில் காணப்பெறும் சகம் 1566, தாரண வருடம் வைகாசி மாதம் 18ஆம் நாள் (கி.பி 1644 மே மாதம் 15ஆம் நாள்) பொறிக்கப் பெற்ற கல்வெட்டுச் சாசனம் அச்சுத விஜயராகவ நாயக்கரின் தளவாயான வேங்கடாத்திரி நாயக்கர் அந்தக்கோயிலின் தின பூஜைகளுக்காகவும், ராமானுஜ கூடம் நடத்துவதற்காகவும் அளித்த அறக்கொடை பற்றி விவரிக்கின்றது. இக்கொடை தனது மன்னனுக்கு நலம் பயக்கத் தளவாய் வேங்கடாத்திரி நாயக்கரால் அளிக்கப் பெற்றதாகக் கூறுகின்றது. இதே ஆண்டில் பொறிக்கப்பெற்ற ரகுநாத நாயக்கரின் சாசனமும் அங்கு இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருச்சேறை சாரநாதப் பெருமாள் கோயில் கருவறை யின் தெற்குப் பகுதிக் குமுதத்தில் காணப்பெறும் கல்வெட்டு

சகாப்தம் 1566, தாரண வருஷம் கார்த்திகை 17ஆம் நாள் சனிக்கிழமை ரோகிணி நாளில் சாரநாத ஸ்வாமிக்கு விஜயராகவ பூபாலனின் புண்ணியமாகக் கோவிந்ததாசன் (கோவிந்த தீக்ஷிதர்) அளித்த அறக்கொடை பற்றி விவரிக்கின்றது. இது கி.பி. 1644 ஆம் ஆண்டு எழுதப் பெற்ற சாசனமாகும். தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோயிலிலுள்ள கல்வெட்டொன்றில் விஜய வருஷம் தை மாதம் 15ஆம் நாள் குறிக்கப்பெற்று, அச்சுத விஜயராகவ நாயக்கரின் அலுவலரான திம்மச்சய்யனின் ஆணையின்படி அளிக்கப்பெற்ற அறக்கொடை பற்றி விவரிக்கப் பெற்றுள்ளது. இது கி.பி. 1647ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் நாளில் எழுதப்பெற்ற சாசனமாகும்.

சென்னை அருங்காட்சியகத்துள்ள செப்பேட்டுத் தொகுதி ஒன்று சகம் 1578 மன்மத வருடம் மீன மாதம் சுக்ல பட்சம் பௌர்ணமாஸ்ய வெள்ளிக்கிழமையன்று அலர்மேல் மங்காபுரம் எனும் கிராமம் ஒன்றினை வேதம் வல்ல அந்தணர் களுக்கு விஜயராகவ நாயக்கர் அளித்ததை விவரிக்கின்றது. இது கி.பி. 1656ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் நாளில் எழுதப்பெற்ற சாசனமாகும். விஜயராகவ நாயக்கரின் கையெழுத்துப் பொறிப்போடு திகழ்கின்றது இந்தச் செப்பேடு. வரலாற்றுச் சிறப்பு மிகுந்த வெள்ளித் தகட்டுச் சாசனமொன்று ‘படேவியா’ அருங்காட்சியகத்திலுள்ளது. இது விளம்பி வருடம் மார்கசீர்ஷம் சுத்தம் 15இல் எழுதப் பெற்ற தாகும். இதன் ஆங்கில ஆண்டு கி.பி.1658 ஆகும். அச்சுத விஜயராகவ நாயக்கர் டச்சுக்காரர்களுக்கு நாகப்பட்டினத்தில் வணிக மையம் அமைக்க அனுமதி அளித்ததைக் குறிப்பிடும் சாசனமே இவ்வெள்ளியேடாகும்.

புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள இரண்டு தனித்தனிச் செப்பேட்டுச் சாசனங்கள் சகம் 1581 விக்கிரம ஆண்டு ச்ரவண மாதம் பௌர்ணமி நாளில் (வரலட்சுமி விரதநாள்) எழுதப் பெற்றவையாகும். இவை தெலுங்கு ஸம்ஸ்க்ருத மொழிகளில் - தெலுங்கு எழுத்தில் எழுதப்பெற்றவையாகும். ஸ்ரீவைஷ்ணவர்கள் சிலருக்கு ஸ்ரீசண்பக மன்னார்புரம் எனும் ஊரில் அளித்த நிலக்கொடை

பற்றி ஒரு சாசனமும், 42 ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அம்பலக் குடி கோயிறு ஆகிய ஊர்களில் நிலக்கொடை அளித்ததை மற்றொரு சாசனமும் விவரிக்கின்றன. இவ்விரண்டு சாசனங் களும் கி.பி. 1659ஆம் ஆண்டுக்குரியவையாகும்.

**கோவிந்த தீக்ஷிதரும், தஞ்சை நாயக்க மன்னர்களும்**

கோவிந்த தீக்ஷிதர் (கி.பி.1555-1635) என்பவர் தஞ்சை நாயக்க மன்னர் வரலாற்றில் அவர்களுக்கு இணையாக உடனிருக்கையில் அமர்ந்து மந்திரியாகவும், பிரதானியாகவும் பணிபுரிந்து அச்சுதப்ப நாயக்கர் ரகுநாத நாயக்கர் ஆகியோருக்கு ஆசானாகத் திகழ்ந்து வரலாறு படைத்தவர். ஏறத்தாழ கி.பி. 1555இல் பிறந்த கோவிந்த தீக்ஷிதர் 1635 வரை எண்பதாண்டுகள் வாழ்ந்து செவ்வப்ப நாயக்கர், அச்சுதப்ப நாயக்கர், ரகுநாத நாயக்கர், ராமபத்ர நாயக்கர், விஜயராகவ நாயக்கர் ஆகிய ஐவருடனும் தஞ்சை அரண்மனையில் வாழ்ந்து, அவர்களுக்கு வழிகாட்டி ஞானம் நல்கித் தஞ்சை நாயக்கர் வரலாற்றில் நீங்கா இடம்பெற்று மறைந்தார். ஒரு மரபு மன்னர்கள் அனைவரையும் கண்ட பெருந்தகை இவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோவிந்த தீக்ஷிதருடைய வழிகாட்டுதலில் தஞ்சை நாயக்க மன்னர்கள் அனைவரும் பல திருக்கோயில் பணிகளை மேற்கொண்டனர். வாஜபேயாஜி என்ற சிறப்புப் பெயர் பெற்றிருந்த வேத விற்பன்னரான கோவிந்த தீக்ஷிதர், அச்சுதப்ப நாயக்கரும், ரகுநாத நாயக்கரும் பலவிதமான வேள்விகள் புரியக்காரணமாக இருந்தார். திருவையாறு, திருவலஞ்சுழி, கும்பகோணம், திருவிடைமருதூர், மயிலாடு துறை ஆகிய இடங்களில் காவிரி ஆற்றின் கரையில் மண்டபங்களை எடுக்கச் செய்து, அங்கு வேள்விகள் செய்து ஷோடச மகாதானம், துலாபாரம், ஹேமகர்ப்பம் போன்ற அறச்செயல்கள் புரியக் காரணமாகத் திகழ்ந்தார். கும்ப கோணம் மகாமகக் குளக்கரையில் 16 மண்டபங்களையும் சிறுகோயில்களையும் ரகுநாத நாயக்கரைக் கொண்டு எடுக்கச் செய்து, ஷோடச (பதினாறு) மகாதான வேள்வியும், துலாபாரமும் புரியச் செய்ததோடு, மன்னார்குடி ராஜ

கோபாலசாமி கோயில் மண்டபத்தில் கோதானம், துலா தானம், ஹிரண்ய பர்வத தானம் போன்றவையும் நிகழச் செய்தார். இவ்விடங்களில் மன்னன் ரகுநாதனும், தீக்ஷிதர் அய்யனும் வேள்விகளும் தானங்களும் புரியும் காட்சிச் சிற்பங்கள் உள்ளன.

**விஜயராகவ நாயக்கரின் வீழ்ச்சி**

கி.பி. 1646ஆம் ஆண்டு வேலூர், செஞ்சி போன்ற கோட்டைகளைக் கைப்பற்றிய கோல்கொண்டா சுல்தானின் தளபதி மீர்ஜிம்லா தஞ்சாவூர் நோக்கிப் படை எடுத்தான். இதனால் விஜயராகவ நாயக்கருக்குப் பேரிழப்பு ஏற்பட்டது. கோல்கொண்டா சுல்தானால் தனக்கு ஆபத்து என்றுணர்ந்த திருமலை நாயக்கர் மீண்டுமொரு தவறைச் செய்தார். இம்முறை பீஜப்பூர் சுல்தானின் உதவியை நாடினார். பீஜப்பூர் சுல்தானால் அனுப்பப்பெற்ற பதினேழாயிரம் வீரர்களோடு, தனது முப்பதாயிரம் வீரர்களையும் இணைத்துக் கொண்டு செஞ்சியைக் கைப்பற்ற முனைந்தார். ஆனால் கோல் கொண்டா படையினர் பீஜப்பூர் படையோடு ஓர் உடன் படிக்கை செய்து கொண்டு செஞ்சியிலிருந்து விடை பெற்றனர். திருமலை நாயக்கரின் உதவிக்காக வந்த பீஜப் பூர்ப்படை செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டு திருமலை நாயக்கரைத் தனிமைப்படுத்தியது.

பீஜப்பூர் சுல்தானின் தளபதி கானிகான் கி.பி. 1646 இல் மதுரை நோக்கிப் படை எடுத்து மதுரையை வென்ற பிறகு, தஞ்சையின் மீதும் படை எடுத்துப் பேரழிவுகளை ஏற்படுத்தினான். விஜயராகவ நாயக்கர் இரண்டாவது முறையாக முகமதியர்களால் அல்லலுற்றார். கி.பி.1559இல் பீஜப்பூர் சுல்தானின் தளபதிகளான சாகஜி (மராட்டியர்) மற்றும் முகம்மதுகான் என்ற முல்லாவும் தஞ்சைப் பகுதியை சூறையாடியபோது விஜயராகவ நாயக்கர் காட்டுப் பகுதிகளுக்குள் சென்று மறைந்து கொண்டார். வல்லம் கோட்டையிலிருந்த கருவூலத்தை அப்பகுதிக் கள்ளர் இன மக்கள் எடுத்துச் சென்று காட்டுப் பகுதிக்குள் வைத்துக் காப்பாற்றினர். முல்லாவுக்கு இதனால் ஏமாற்றமே விஞ்சியது. மதுரை நாயக்கருக்குச் சொந்தமான திருச்சிராப்பள்ளிப்

பகுதிகளையும் சூறையாடிய சகஜியும், முல்லாவும் செஞ்சியிலேயே இரண்டாண்டுகள் தங்கினர் என்பதை ஏசுசபைக் கடிதமொன்று விவரிக்கின்றது. இவர்கள் சென்ற பிறகு கள்ளர்கள் முன்பு வல்லம் கோட்டையிலிருந்து எடுத்துச் சென்ற கருவூலச் செல்வங்களை மீண்டும் விஜய ராகவனிடத்தில் கொடுத்தனர்.

டெல்லியிலிருந்து ஔரங்கசீப் பீஜப்பூரைக் கைப் பற்ற வந்து கொண்டிருப்பதாகவும் அவர்களுக்குச் செய்தி வந்ததால் சகஜியும் முல்லாவும், பீஜப்பூர் திரும்புவதற்குப் பதிலாகத் தஞ்சை நாயக்கரையே எதிர்த்துச் சண்டையிட முடிவு எடுத்தனர், அதன்படி ஆனந்த வருஷம் மாசிமாதம் ஏழாம் நாளில் ஏகோஜியும் மற்றப் படைத் தலைவர்களும் சைனியத்துடன் புறப்பட்டுத் தஞ்சை நகரின் வடக்கு வாசல் வழியே உள்ளே நுழைந்தனர். இதை அறிந்த விஜயராகவ நாயக்கரும், உறவினர்களும், மற்ற வீரர்களும் வடக்கு வீதியிலுள்ள ராஜகோபாலஸ்வாமி கோயில் அருகே வந்த போது இருதரப்பினர்க்கும் இடையே கடுமையான போர் மூண்டது. அந்தப் போரில் விஜயராகவ நாயக்கரும், அவர் மகனும் கொல்லப்பட்டனர்.

இவ்வாறாக கி.பி. 1535இல் தஞ்சையில் தோன்றிய நாயக்கர் அரசு கி.பி. 1675இல் 140 ஆண்டுகள் நிறைவெய்திய பிறகு மறைந்தது. விஜயராகவ நாயக்கருக்குப் பின்பு அவரது குடும்பத்தவர் எவரும் அரசுக் கட்டிலில் அமரவில்லை. சகஜி யோடு நடந்த போரில் நாயக்கர் குடும்பம் முழுவதும் அழிவுற்றது. விஜயராகவ நாயக்கர் வீர மரணம் அடைந்த இடத்தில் உள்ள ராஜகோபாலஸ்வாமி கோயில் (இந்தத் திருக்கோயிலின் மதில்கள் தஞ்சை வடக்குவீதியின் ஒரு பகுதியாக திகழ்கின்றன. ஐயன்கடைத்தெரு என்ற புகழ்பெற்ற அங்காடித்தெருவின் வடக்குப்பகுதியில் அமைந்துள்ளது இந்தத் திருக்கோயில். சிற்பவேலைப்பாடுகள் கொண்ட மிகஅற்புதமான சக்ரத்தாழ்வார் இந்தத் திருக்கோயில் கருவறையில் காணப்படுகிறார்.) அச்சுத தேவராயரின் மனைவி திருமலாம்பாவால் ‘‘மதன கோபால ஸ்வாமி கோயில்’’ என்ற பெயரில் எடுக்கப் பெற்றதை அக்கோயிலில்

உள்ள கல்வெட்டுக்கள் வாயிலாக அறிகிறோம். ஆனால் அத்திருக்கோயிலின் கருவறையில் இருந்த கோபாலனின் விக்ரஹம் பின்னாளில் எவ்வாறு மறைந்தது என்பது இதுகாறும் அறியப்படவில்லை. மராட்டிய அரசின் இறுதிக் காலத்தில் (கி.பி.1889இல்) காமாட்சி பாய் சாகேப் என்ற அரசி கருவறையில் தெய்வமில்லாமல் இருப்பது கண்டு புதிதாகச் சக்கரத்தாழ்வார் திருமேனியைப் பிரதிஷ்டை செய்தார் என்பதை அத்திருக்கோயிலிலும், வெண்ணாற்றங்கரை தஞ்சபுரீச்வரர் திருக்கோயிலிலும் உள்ள கல்வெட்டுக்களால் அறியமுடிகிறது. இவ்வாறு கோபாலன் திருமேனி மறைந்தது பீஜப்பூர் படையம் (முகமதியபடை), விஜயராகவ நாயக் கரும் மோதியபோது நிகழ்ந்திருக்கலாம் எனக் கருத வேண்டியுள்ளது. கி.பி. 1631 முதல் 1675 வரை 44 ஆண்டுகள் தஞ்சையின் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த விஜயராகவ நாயக்கர் தன் தந்தை ரகுநாத நாயக்கரைப் போன்று பல்வேறு துறைகளில் வல்லவராகத் திகழ்ந்து வந்தார்.

**விஜயராகவ நாயக்கரின் குடும்பம்**

விஜயராகவ நாயக்கரின் மனைவியர் பற்றிச் சாசனங் களிலோ, இலக்கியங்களிலோ செய்திகள் காணப்பெற வில்லை என்றாலும், விஜயராகவ நாயக்கரின் மகனான மன்னாருதேவன் எழுதிய ‘‘ஹேமாப்ஜ நாயிகா சுயம்வரமு’’ எனும் இசை நாட்டிய நாடகநூலில் ஒரு குறிப்பு காணப் பெறுகின்றது. மன்னாருதேவன் தங்கள் குரு, குலமுன்னோர் கள், தந்தை ஆகியோருக்கு வணக்கம் செலுத்திய பின்பு இந்நூலை எழுதுவதாகக் குறிப்பிட்டுள்ளான்.

மன்னார்குடி கோயிலில் காணப்பெறும் விஜயராகவ நாயக்கரின் உருவச் சிற்பத்துடன் இரண்டு தேவியர் சிற்பங் கள் உள்ளன. அதில் ஒரு தேவிதான் மன்னாரு தேவனின் தாயாராகும். அத்தேவியின் பெயர் ‘‘ராஜகோபாலாம்பிகா’’ - என்பதை மன்னாருதேவன் மேற்கண்ட நூலில் குறித்திருப் பதிலிருந்து அறிகிறோம். கி.பி. 1675 பிப்ரவரி 13ஆம் நாள் தஞ்சை ராஜ கோபால ஸ்வாமி கோயிலருகே நடந்த போரில் கடுமையாகப் போரிட்டு விஜயராகவ நாயக்கர் வீரமரணம்

அடைந்தபோது அவருடன் இணைந்தே உயிர்த்தியாகம் புரிந்தவன் மன்னாரு தேவனாவான். இதனை மராட்டிய வம்சாவளி சுவடிகளும் வலியுறுத்துகின்றன.

**விஜயராகவ நாயக்கரின் ஆற்றல்களும் சாதனைகளும்**

ரகுநாத நாயக்கருக்கு எவ்வாறு இசையிலும், காவியங்கள் இயற்றுவதிலும் ஆற்றல் இருந்ததோ அது போன்று இசை நாட்டிய நாடகங்கள் புனைவதிலும், நல்ல நூல்கள் படைப்பதிலும் விஜயராகவ நாயக்கர் தலைசிறந்த வராகத் திகழ்ந்தார். தனது தோள் வலியால் சாதனை புரிந்த பெருவீரர்கள் தங்களின் இடது காலில், கணுக்காலுக்கும் முழங்காலுக்கும் இடையே ''கழல்'' எனும் ஓர் அணிகலனை அணிவர். வீரக்கழல் எனும் இவ்வணியில் ஒரு சிறிய மணி கட்டப்பெற்றிருக்கும். பழந்தமிழ்நூல்கள் இதன் பெருமை களை விரிவாகப் பேசும். (நல்லிச்சேரியில் காணப்படும் விஜயராகவ நாயக்கரின் சிலையில் இந்த வீரக்கழல் காணப் படுகிறது.)

''ஓண் பொறி கழற்கால்'' - எனச் சங்க இலக்கியங்கள் கூறும் குறிப்புக்களால் பெருவீரனின் வீர நிகழ்வோ, அல்லது அவன் வாகை சூடிப் பெற்ற விருதுப் பெயரே அக்கழல் மீது எழுத்துக்களால் பொறிக்கப் பெற்றிருக்கும் என்பதறியலாம்.

*''விஜயராகவ மேதினீ விபுனி யங்க்ரி*
*நெளர ஸாகித்யராய பெண்டேர மமரு''*
*(ச்லோகம் - 72)*

இவ்வாறு ''சாகித்யராயன்'' எனும் சிறப்பு விருதோடு திகழ்ந்த விஜயராகவ நாயக்கர் தனது அரண்மனையின் மண்டபமொன்றில் கலைமகள் உருவம் பொறிக்கப்பெற்ற பதாகையைக் (சாரதா த்வஜம்) கட்டியிருந்ததாகவும், அது காற்றில் அசைவது எவ்வாறு இருக்குமெனில் இனிப்பின் சுவை, ஜாதிப்பூவின் மணம், மலைய மாருதத்தின் (தென்றல்) சுகம், நிலவின் குளிர்ச்சி ஆகியவற்றோடு கூடிய விஜய ராகவனின் கவிதைகளால் அசைவது போன்று தோன்றுகிற தென்றும், அவனது அவைக்கு வரும் புலவர்கள் இயற்கை யாகவே கவிதை புனையும் ஆற்றல் உள்ளவர்களாகவும்,

தலைசிறந்த வேதவிற்பன்னர்களாக வியாகரணம், சந்தஸ், அலங்காரம், கவித்துவத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று கூறுமளவில் இருத்தல் வேண்டும் என்றும் கூறுவது போன்றுள்ளது என்று காளகவி கூறுகின்றார்.

**விஜயராகவ நாயக்கர் எழுதிய நாடக நூல்கள்**

விஜயராகவ நாயக்கர் எழுதிய ப்ரஹலாத சரித்திரம் எனும் நூலில் அவர் எழுதிய நூல்களின் பட்டியல் காணப் பெறுகின்றது. அவற்றுள் நாடகங்களாக,

1. ராஜகோபால விலாசமு, 2. செங்கமலவல்லி பரிணயமு, 3. கோவர்த்தனோ உத்தரணமு, 4. ரதிமன்மத விலாசமு, 5. ராசகிரீட நவநீத சோரமு, 6. பாரிஜாத அபஹரணமு, 7. ருக்மிணி கல்யாணமு, 8. ராதா மாதவமு, 9. தானாபிராமமு, 10. சத்யபாமா விவாஹமு, 11. உஷா பரிணயமு, 12. தக்ஷிண துவாரகா ஸ்தலவர்ணனமு, 13. காளிய மர்த்னமு, 14. ரகுநாதாப்யுதயமு, 15. ப்ரஹலாத சரித்திரமு, 16. பூதனாஹரமு, 17. விப்ரநாராயண சரித்திரமு, 18. சமுத்திர மதன நாடகமு, 19. கிருஷ்ண விலாசமு, 20. மோகினி விலாசமு, 21. ஜானகீ கல்யாணமு, 22, பிரணய கலகமு, 23. சம்ச விஜயமு என்ற இருபத்து மூன்று நூல்களின் பெயர்கள் காணப்பெறுகின்றன. துவிபதங்களாக (ஈரடிச் செய்யுள்)

1. பாதுகா சகஸ்ரமு, 2. மோகினி விலாசமு, 3. ரகுநாத நாயகாப்யுதயமு, 4. கோபிகா கீதலு, 5. ப்ரமர கீதலு என்ற நூல்களும், சௌபத நூலாக ''பால்குணோஸ் தவமு'' என்ற நூலும், தண்டகமாக ராஜகோபாலதண்டகமும் காணப்பெறுகின்றன.இவை தவிர விண்ணப்பம், தரு, ஏலாபதங்கள், பாடல்கள், சங்கீர்த்தனங்கள், குறவஞ்சி, யக்ஷகானங்கள் எனப் பல வகையான நூல்களையும் இவர் படைத்தார் என்பது இலக்கிய வழியாக நாம் அறியும் செய்தியாகும்.

விஜய நாயக்கரின் படைப்புக்கள் பற்றிய தெளிவான பட்டியல் கிடைத்த போதும் நமக்குக் கிடைத்த நூல்கள்

சிலவே. பலநூல்கள் அழிந்துவிட்டன. இலக்கியம் மற்றும் கலை உலகிற்கு இது பேரிழப்பேயாகும்.

**விஜயராகவ நாயக்கரின் அவையை அலங்கரித்த புலவர்கள்**

**தெலுங்குப் புலவர்கள்:** 1. செங்கல்வ காளகவி, 2. கோனேட்டி தீக்ஷிதர், 3. புருஷோத்தம தீக்ஷிதர், 4. காமரசு வேங்கடபதி சோமயாஜி, 5. பசுப்புலேட்டி ரங்காஜம்மா (விஜயராகவ நாயக்கரின் மனைவி), 6. கிருஷ்ணாஜி, 7. க்ஷேத்ரக்ஞர். **ஸம்ஸ்க்ருத மொழிப் புலவர்கள்:** 1. வேங்கடேச்வரமகி, 2. ஸ்ரீநிவாஸாசார்யா, 3. யக்ஞ நாராயண தீக்ஷிதர், 4. பூகோள வேங்கடேசன்.

**விஜயராகவ நாயக்கரின் ஆக்கத்தால் மலர்ந்த தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்:**

மன்னார் மோகனப் பள்ளு, விஜயராகவ நாயக்கர் அய்யன் பேரில் முளைப்பாட்டு, வெள்ளைப்பிள்ளை குறம்.

**மரங்கள் வெட்டுவதைத் தடை செய்த போழக்குடி கல்வெட்டு**

சோழநாட்டு நன்னிலம் வட்டத்திலுள்ள போழக்குடி எனும் கிராமத்தில் காணப்பெறும் சமண தீர்த்தங்கரர் ஒருவரின் உருவச் சிலையின் பின்புறம் விஜயராகவ நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் எழுதப்பெற்ற கல்வெட்டொன்றுள்ளது. அதில் சாலிவாகன சகாப்தம் 1581 பிரமாதீச வருஷம் ஆடி மாதம் குறிக்கப் பெற்றுள்ளது. ராஜமான்ய ராஜஸ்ரீ மல்லாரிராயர் போழைக்குடியில் குளம் வெட்டிய செய்தியும், அக்குளத்திலிருந்து கூடையால் தண்ணீர் இறைப்பதற்கும், குளத்தைச் சுற்றியுள்ள மரங்களை வெட்டுவதற்கும் தடை விதிக்கப் பெற்றமையும் குறிக்கப் பெற்றுள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 1659இல் பொறிக்கப்பெற்றதாகும். ரகுநாத நாயக்கரும், விஜயராகவ நாயக்கரும் பல குளங்களை வெட்டுவித்து நீர் வளம் பெருக்கினர். மன்னார்குடி ஹரித்திராநதிக்குளம் இவர்கள் காலப் பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். போழக்குடி கல்வெட்டால் குடிநீர்க்

குளங்கள் பாதுகாக்கப் பெற்றதும், மரங்கள் வெட்டுவதைத் தடை செய்ததும் அறிகிறோம். *(ஆனால் நல்லிச்சேரியில் விஜயராகவ நாயக்கரால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு குளத்திலி ருந்து இயந்திரத்தின் உதவி கொண்டு நெற்பயிரிடுவதற்காக நீர் வெளி யேற்றப்பட்டு வந்ததை நான் கண்டேன். போழக்குடி கல்வெட்டுதான் என் நினைவிற்கு வந்தது.)*

**திருக்கோயிற் பணிகள்**

விஜயராகவ நாயக்கரின் உள்ளம் கவர்ந்த தனிப் பெருந்தெய்வமாக விளங்கியவர் மன்னார்குடி ராஜ கோபாலப் பெருமானாவார். ராஜாதிராஜ விண்ணகரம் என்றும், குலோத்துங்கசோழ விண்ணகரம் என்றும் அழைக்கப்பெற்ற மன்னார்குடி ஸ்ரீராஜகோபால ஸ்வாமி திருக்கோயில் இம்மன்னவனின் காலத்தில் மிக விரிவு பெற்ற பெருங் கோயிலாக மாற்றம் பெற்றது. ஏழு பிராகாரங்களோடும், தேரோடும் திருவீதிகள், புகழ்பெற்ற திருக்குளங்கள் ஆகியவற்றோடும், விஜயராகவனின் அரசு மாளிகை ஒன்றி னையும் பெற்று இவ்வூர் பேரழகு வாய்ந்ததாக மாற்றம் பெற்றது. விண்ணார்ந்த கோபுரங்கள் திருமதில்கள், மண்டபங்கள் எனப் பலவிதமான கட்டடங்கள் இம்மன்னவ னால் எடுக்கப்பெற்றன. இவை கலை நயம் வாய்ந்தவை. இவற்றால் குறிப்பிடத்தக்கது நூற்றுக்கால் மண்டபமாகும். அழகிய அரங்க மேடையோடு திகழும் இம்மண்டபத்துத் தூண் ஒன்றில் விஜயராகவ நாயக்கர் மற்றும் அவனது தேவியர் இருவரது உருவச் சிற்பங்கள் இடம் பெற்றுத் திகழ்கின்றன. ராஜகோபாலப் பெருமாளின் கருவறை முன்பு உள்ள மண்டபத்தில் விஜயராகவனும் அவனது தேவியும் சந்நிதிக்கு எதிரே வீழ்ந்து வணங்கும் கோலத்தில் உள்ள சிற்பப் பலகை ஒன்றைத் தரையில் பாவச் செய்து, என்றென்றும் தனது பக்தி நிலைபெறுமாறு செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மன்னார் எனும் ராஜகோபாலனின் மீது கொண்ட அளவிடற்கரிய பக்தியின் காரணமாக ‘‘மன்னாருதாசன்’’ என்ற பெயரினைத் தனது சிறப்புப் பெயராகச் சூடிக்

கொண்டான். இப்பெயரால் பெருமிதம் கொண்ட இம் மன்னவன் பல செப்புத் திருமேனிகளை இக்கோயிலுக்காகச் செய்தளித்தான். அவற்றின் பீடத்தில் ''அச்சுத விஜயராகவ மன்னாருதாசன் சதா ஸேவை'' என்று தமிழில் பொறிக்கச் செய்தான். ஆழ்வார்களின் படிமங்களிலும், சில இறை உருவங்களிலும் இதனை இன்றும் காணலாம். ராஜ கோபாலனின் தேவியான செங்கமலவல்லி நாயகிக்கு உரிய தேர் கோயிலின் உட்பிராகாரத்திலேயே பவனி வருவதாகும். இதற்கெனத் தனித்தேர் ஒன்றினைச் செய்தளித்த இம்மன்னவன், தேர் ஏற்று கூடம் (தேர் மண்டபம்) ஒன்றினையும் உருவாக்கித் தந்து அம்மண்டபத்திலேயே தம் தேவியோடு உள்ள தனது உருவச் சிலையையும் அமைத்துள்ளான்.

'தஞ்சாபுர அன்னதான மகா நாடகம்' எனும் நூல் புருஷோத்தம தீக்ஷிதர் என்பவரால் எழுதப்பெற்றதாகும். இந் நாடகத்தில் ஒரு காட்சியாக இறைவனுக்கு முன்பு விஜயராகவ நாயக்கர் நின்று கொண்டு அர்ச்சனை செய்யும் காட்சி இடம் பெற்றுள்ளது. அப்போது செய்யப்பெறும் சங்கல்பத்தில் விஜயராகவ நாயக்கரின் நக்ஷத்திரமாகத் துலாராசி சுவாதி நட்சத்திரம் கூறப்பெற்றுள்ளது.

### ராஜகோபாலனின் விஜயராகவ நாயக்கர் அலங்காரம்

மன்னார்குடி ராஜகோபால ஸ்வாமிக்கு மார்கழி அத்யயந உத்ஸவம் 20 நாட்கள் ஆண்டுதோறும் கொண் டாடப் பெறுகின்றது. இதில் வைகுண்ட ஏகாதசிக்கு முன் பத்து நாட்கள் நடைபெறும் விழா பகல்பத்து என்றும், பின் பத்து நாட்கள் நடைபெறும் விழாவிற்கு இராப்பத்து என்றும் பெயர். பகல்பத்தில் ஆறாம் நாள் விழாவன்று ராஜகோபாலப் பெருமானுக்கு விஜயராகவ நாயக்கர் அலங்காரம் செய்யப் பெறுகின்றது. ஸ்வாமிக்கு இடப்பக்கம் சரிந்த கொண்டை யிட்டு, விஜயராகவ நாயக்கர் உருவம் போன்றே அலங்காரம் சாற்றப்பெறுகின்றது. நாயக்கர் ஆட்சிக் காலத்திலிருந்து இவ்விழா தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மன்னார்குடி ராஜ கோபால ஸ்வாமி திருக்கோயிலுக்கும் விஜயராகவ நாயக்

கருக்கும் உள்ள தொடர்பை இன்றளவும் இது எடுத்துக் காட்டும் சான்றாகும். மேலும் ஸ்வாமி வீதி உலாப்போகும் வேளையில் உட்கோபுர வாயிலுக்கு அருகே வரும்போது, மன்னர் விஜயராகவ நாயக்கர் பெயர் கூவப்பெற்று, விருதுகள் சொல்லப் பெறும் மரபு இன்றும் தொடர்ந்து நிகழ்கின்றது.

**பிற திருக்கோயிற்பணிகள்**

திருக்கண்ணமங்கைத் திருக்கோயிலுக்கு ரகுநாத நாயக்கர் எந்த அளவுக்குத் திருப்பணிகள் செய்தாரோ அதே அளவு விஜயராகவ நாயக்கரும் அத்திருக்கோயிலுக்குப் பல பணிகள் புரிந்துள்ளார் என்பதனைக் கல்வெட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன. திருவாரூர், நல்லிச்சேரி, தாராசுரம், தஞ்சைப் பெரிய கோயில், தஞ்சை ராஜகோபாலஸ்வாமி கோயில் போன்ற பல திருக்கோயில்கள் விஜயராகவ நாயக்கரின் காலத்தில் திருப்பணிகள் பெற்று சிறப்புப் பெற்றன.

திருச்சேறை சாரநாதர் கோயில் திருப்பணிகள் விஜயராகவ நாயக்கர் காலத்துப் பணிகளுள் குறிப்பிடத் தக்கவையாகும். திருக்கோபுரமும் திருமண்டபங்களும் எடுப்பித்ததோடு சாரபுஷ்கரிணி எனும் திருக்குளத்துக் கரையில் காவிரித் தாயாருக்குத் திருமேனி எடுத்துத் தனிக் கோயிலும் அமைத்துள்ளார். திருமால் குழந்தையாகக் காவிரித் தாயாரின் மடியில் இருக்கும் எழிற் கோலத்தை இங்குக் காணலாம். இவரது ஆக்கத்தால் சோழ நாட்டிலுள்ள பல வைணவத்தலங்களும், சிவாலயங்களும் பல்வகைச் சிறப்புக்கள் பெற்றன. விஜயராகவ நாயக்கரின் உருவச் சிலைகள், ராஜமன்னார்குடி ராஜகோபால ஸ்வாமி கோயில், தஞ்சாவூர் ராஜகோபால ஸ்வாமி கோயில், தஞ்சை பிரகதீச்வரர் கோயில், நந்தி மண்டபத்தூண், திருச்சேறை சாரநாதபெருமாள் கோயில் முன்மண்டபம், நல்லிச்சேரி மஹாமண்டபம் ஆகிய திருக்கோயில்களில் காணப் படுகின்றன.

**முற்றும்** ★★★

# விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.

**குறிப்பு:(விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் என்ற தலைப்பில் 93ஆம் இதழ் தொடங்கி 120ஆவது இதழ் ஈறாக வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சியாக இந்தக் கட்டுரைத் தொடரைக் கொள்ள வேண்டும்.)**

இதழ் 169இல் வெளிவந்த ‘உண்மையான கடவுள் துகள் எது என்ற கட்டுரை’யில் கரும்பொருள் துகள்களின் நிறை மற்றும் ஆற்றல் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகள் கொடுக்கப்பட்டுள் ளன. அந்தக் கரும்பொருள்கள் ப்ரபஞ்சத்தையே (மஹா அண்டத்தையே) ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்லமை படைத்தவையாய் விளங்குகின்றன என்று விஞ்ஞானிகள் கருது கின்றனர். இதழ் எண் 169இல் வெளிவந்த இந்தக் கட்டுரையின் முடிவில் அதில் காணும் குறிப்புகளுக்கான விளக்கம் வேதாந்த நூல்களில் அமைந்துள்ளபடி இனிவரும் இதழ்களில் விளக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தேன். அந்த விளக்கமே இந்தக் கட்டுரைத் தொடர் மூலம் அளிக்கப்படவுள்ளது.

பண்டைய காலத்து ரிஷிகளும், நம் பூர்வாசார்யர்களும் அளவற்ற அறிவுத்திறன் கொண்டவர்கள். நாகரீகம் மிக்க நாடுகளில் பிறந்தவர்கள் நாங்கள் என்று பறைசாற்றிக் கொள்ளும் இனத்தவர் களுக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பாரத நாடு உன்னத நிலையில் இருந்தது. வேதங்கள் வாழ்வியலுக்குகேற்ற பல குறிப்புகளை கொண்டது. உபநிஷத்துக்கள் இந்த மஹா அண்டத் தின் தோற்றம், வளர்ச்சி, இயக்கம், அழிவு ஆகியவற்றை பரக்கப் பேசுகின்றன. ப்ரஹ்மஸூத்ர விரிவுரைகளிலும், புராணங்களிலும், வேதாந்த நூல்களிலும் வாழ்வியல் செய்திகளும், விஞ்ஞான உண்மைகளும் புதைந்து கிடக்கின்றன. மேலை நாட்டோர் கண்டு பிடிப்புகளாகக் கொண்டாடப்படும் அனைத்து விஞ்ஞானக் கோட்பாடுகளும் நமது

வேதங்களிலும், வேதாந்தங்களிலும் நிறைந்து காணப்படுகின்றன. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை அறிந்து கொள்வதற்கு எப்படி ஸம்ஸ்க்ருத வேதங்களிலும், தமிழ் வேதங்களிலும் உரிய ஜ்ஞானம் தேவையோ, அவ்வாறே நமது வேத வேதாந்தங்களில் பொதிந்து கிடக்கும் விஞ்ஞான உண்மைகளை அறிந்து கொள்வதற்கு அடிப்படை விஞ்ஞான அறிவும், வேத வேதாந்தங்களில் காணப்படும் சொற்றொடர்களுக்கான பொருளை யும் ஒருவர் அறிந்திருக்க வேண்டும். அந்த உண்மைகளைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு நமது அறிவினை விரிவுபடுத்திக் கொள்வதில்லை. ஆழ்வார்களை விஞ்ஞானிகளோடு ஒப்பிட்டுப் பேசக் கூடாதென்று கூறித்திரிவோர் இந்த உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒப்பாய்வியல் என்பது உயர்ந்த இலக்கிய நெறிக்கோட்பாடாகும். தற்போதைய விஞ்ஞான உலகில் நாள் தோறும் புதுப்புது உண்மைகள் ஆதாரங்களின் அடிப்படையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அத்தகையதொரு கட்டுரை தான் 'கடவுளின் துகள் எது' என்ற தலைப்பிடப்பட்ட கட்டுரை.

இராமானுசர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மேலாண் மைக் கோட்பாடுகளின் அடிப்படையில் திருக்கோயில் நிர்வாகத்தை யும், சமுதாயச் சீர்திருத்தங்களையும் நடைமுறைப்படுத்தினார் என்று கூறுவதால், இராமானுசருடைய பெருமை கூடுமேயொழிய அது அவருக்கு சிறுமை பயப்பதாகக் கொள்ளமுடியாது. அவருடைய ஆயிரமாவது ஆண்டு அவதார திருநக்ஷத்திரக் கொண்டாட்டங் களின்போது ஸ்ரீவைஷ்ணவர்கள் அல்லாதாரை இராமானுசரிடம் ஈடுபாடு கொள்வதற்கு இந்தக் குறிப்புகள் உதவிடும். அதேபோன்று வேத வேதாந்த க்ரந்தங்களிலும், அவற்றின் விரிவுரைகளிலும் ப்ரபஞ்சத்தின் தோற்றம், வளர்ச்சி, அழிவு, மீண்டும் ஆக்கம், சூரியனின் எல்லையற்ற சக்தி, சிருஷ்டியின் மர்மம், இந்த அண்டத்தைத் தாங்கும் சக்தி யாது?, இந்த அண்டத்தை அந்த சக்தி எப்படித் தாங்குகிறது? போன்றவைகளைப் பற்றிய குறிப்புகள் நிறைந்து காணப்படுகின்றன. அந்தக் கருத்துக்களுக்கும் விஞ் ஞானிகளால் கண்டறியப்பட்ட உண்மைகளுக்கும் இடையேயுள்ள கருத்தொற்றுமை யாது? என்பதை நாம் அறிந்து கொண்டால் அது தெளிவினைத் தந்திடும்.

உலகம் தட்டை வடிவு கொண்டது என்ற எண்ணம் நிலவி யிருந்த காலத்தில் அந்தக் கருத்தை இத்தாலிய நாட்டுக் குடிமகனான கலீலியோ என்ற விஞ்ஞானி மறுத்ததோடு மட்டுமல்லாமல் உலகம்



சூரியனைச் சுற்றி வருகிறது என்ற கருத்தையும் வெளியிட்டார். அப்போது அந்தநாட்டு மதகுருமார்கள் கலீலியோவிற்கு மறுப்புத் தெரிவித்தனர். அவரை சாத்தானின் மறுபிறப்பு என்று வர்ணித்தனர். ''அபிநவ குப்தா'' என்ற பழம்பெரும் இந்திய விஞ்ஞானி பூமி தான் சூரியனைச் சுற்றி வருகின்றது என்பதை தம்முடைய நூல்களில் குறிப்பிட்டிருந்தார். எல்லாவற்றையும் மொழிபெயர்த்த அராபியர்கள் அந்தச் செய்தியை குறிப்பிடவில்லை. அதனால், அது மேலை நாடுகளுக்குத் தெரியாமல் போயிற்று. ஆயிரம் ஆண்டுகளுக்கு பின்னர் வந்த இத்தாலிய நாட்டு விஞ்ஞானி கலீலியோ கண்டுபிடித்த பிறகு தான் உலகோர்க்கு, பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது என்பது தெரியவந்தது. 'பூஜ்யத்தின்' கண்டுபிடிப்பு, பூமிதான் சூரியனைச் சுற்றி வருகின்றது, புவிஈர்ப்புச் சக்தியின் ஆற்றல் போன்ற பல செய்திகளை இந்திய விஞ்ஞானிகள் என்றைக்கோ கண்டறிந் துள்ளனர். ஆனால் நம் புராணங்களோ எம்பெருமான் வராக அவதாரம் எடுத்து பூமியை மீட்டான் என்று கூறுகின்றன. நமது பஞ்சாங்கங்கள் மிகத் துல்லியமாக நிகழப்போகும் க்ரஹணங்களை கணக்கிட்டுக் கூறுகின்றன. இதுபோன்று பற்பல விஞ்ஞான உண்மைகள் நம் வேத வேதாந்தக் கருத்துக்களுக்கு அரணாக அமைந்துள்ளன.

எம்பெருமானார் அருளிச் செய்த 'வேதார்த்தஸங்க்ரஹம்' என்னும் நூலில் பல விஞ்ஞான உண்மைகள் பொதிந்துள்ளன என்பதை நாம் உள்ளத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு கூறுவதால் பழமைவாதிகள் (Conservaties) கூறுவதுபோல எம்பெருமானாருக்கு ஓர் தாழ்ச்சி சொல்வதாக யாரும் எண்ணக்கூடாது. மாறாக எம்பெருமானாருடைய பரந்துபட்ட அறிவின் வெளிப்பாடு இது என்றே கொள்ள வேண்டும். இதை என்று நாம் புரிந்து கொள்கிறோமோ அன்றுதான் எம்பெருமானாரு டைய திருவுள்ளக் கருத்தை நாம் அறிந்து கொண்டோம் என்று கொள்ள முடியும். ஸம்ப்ரதாயத்தில் உண்மைகளை மாறாடாமல், கருத்துக்களைச் சிதைத்திடாமல் புதிய கோணங்களில் அவற்றை ஆராய முற்பட்டால் பல புதிய விளக்கங்களை நாம் பெறலாம். திருவாய்மொழிக்கு பல உரைகள் தோன்றியதின் காரணம் இதன் அடிப்படையில்தான். திவ்வியப் பிரபந்த பாசுரச் சொற்றொடர் களுக்கு பூர்வர்களுடைய பல்வேறு விளக்கங்கள் (ஐதிஹ்ய நிர்வாகங்கள்) இதன் அடிப்படையில் தான் எழுந்தன. ஆகவே ஒரு கருத்திற்கு பூர்வர்களுடைய விளக்கத்திற்கேற்ப ஒரு விளக்கமான பொருள் கொள்வதில் தவறேதும் இல்லை.

தொழில் நுணுக்கம் அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. அதன் பயனைப் பழமைவாதிகளும் அனுபவித்து வருகிறார்கள். இன்றைய தினம் கைபேசியை உபயோகப்படுத்தாத மனிதர்களே இல்லை எனலாம். அதைக் கொண்டாடுவதன் மூலம் இவ்வுலகத்தைப் படைத்து, காத்து, அழிக்கின்ற எம்பெருமானை மக்கள் முன் நிறுத்தலாம். ஏனெனில் கைபேசி இவ்வாறு வேலை செய்வதற்கு ஆதாரமான ஒலி அலைகளையும், மின் அலைகளையும் படைத்தவன் அந்தப் பரமாத்மாவான ஸ்ரீமந் நாராயணன் என்பதை சான்றுகள் கொண்டு விளக்கலாம். ஒவ்வொரு விஞ்ஞான கண்டு பிடிப்பும் ஸ்ரீமந் நாராயணனின் அளவற்ற ஆற்றலையும், சிருஷ்டியின் மர்மத்தையும் வெளிப்படுத்துகின்றது.

இவ்வண்டத்திலேயே மிகப்பெரிய தொழிற்சாலை மனித உடலாகும். இந்த மனித உடலையும், மூளையின் செயல்பாட்டை யும், உடலில் அமைந்துள்ள பல்வேறு உறுப்புகளின் இயக்கத்தை யும், குறிப்பிட்ட நேரங்களில் சுரக்கும் ஹார்மோன்களையும், ஜாடராக்னியையும் (உணவு ஜீரணிப்பதற்காக அந்த உடலிலேயே அமைந்துள்ள ஒருவிதத் தீப்பிழம்பு), மக்கள் இனப் பெருக்கம், அந்த இனப்பெருக்கத்திற்கான உணர்ச்சிகளின் தூண்டுதல், கருவின் வளர்ச்சி, DNA எனப்படும் மரபணுக்களின் செயல்பாடு, நீர் அருந்தும் வேட்கை, பசி என்னும் நோயைக் கட்டுப்படுத்தும் விதம், இதயம், நுரையீரல், சிறுநீரகம், இரைப்பை, கல்லீரல், மண்ணீரல், சிறுகுடல், பெருங்குடல், மலக்குடல் போன்ற உறுப்புக்களின் அமைப்பு அவற்றிற்கு ஊறு நேரும்போது அவற்றைக் குணப்படுத்தும் மருத்துவ விஞ்ஞானம் என்று பல்வேறு கூறுகள் கொண்ட மனித உடலைப் படைத்தவன் ஓர் மாபெரும் விஞ்ஞானி. ஆகவே மெய்ஞ்ஞானத்தைப் புரிந்து கொள்வதற்கு விஞ்ஞானம் ஒரு தடையல்ல. அது ஒரு உதவிக் கரம் நீட்டும் மனித இனத்தின் மீது அன்பு கொண்ட கடவுளின் படைப்பான விஞ்ஞானியின் கொடையாகும்.

நாம் கற்ற வேதாந்த நூல்களின் விரிவுரைகளை புதிய கோணத்தில் பார்க்கக்கூடுமானால் நமக்கு தெளிவு பிறக்கும். வானவியலில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் கணக்கில் அடங்கா. அதைப் புரிந்து கொள்வதற்கு இந்த மகா அண்டத்தின் தற்போதைய தோற்றம் என்னவென்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

(தொடரும்)